விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 197 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 29, வெள்ளிக்கிழமை 12.06.2015

12 JUN 2015

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

## இலங்கை வருகிறார் கலாம்

கொழும்பு, ஜூன் 12

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்ததாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து இலங்கை அரசினால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அப்துல் கலாம் இலங்கை வரவுள்ளார்.

இந்த மாநாடு எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாநாட்டில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியைக் கலந்து கொள்ளுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கடந்த 8ஆம் திகதி அவரைச் சந்தித்து அழைப்பு விடுத்துள்ளார் என வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் பக்.24

## 142 எம்.பிக்கள் உயர்தரம் கற்கவில்லை

கொழும்பு, ஜூன் 12

அரசமைப்புச் சபைக்கு பிரேரிக்கப்பட்டுள்ள மூன்று சிவில் உறுப்பினர்களின் தகுதியை ஆராயும் நிலையில் இலங்கையின் உயர்சபையாக விளங்கும், நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களில் 142பேர் ஜீ.சி.ஈ உயர்தரத்தில் கூடச் சித்தியெய்தவில்லை என்று கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை தாம் அடையாளம் கண்டுள்ளதாக கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச் சபைக்கு பிரேரிக்கப்பட்டுள்ள சர்வோதயத்தின் தலைவர் ஏ.டி ஆரியரட்ன, ஐக்கிய நாடுகளின் முன்னாள் இராஜதந்திரி ராதிகா குமாரசுவாமி மற்றும் முன்னாள் நீதிபதி சலாம் ஆகியோரின் தகுதிகள் குறித்து அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் பக்.24

## 18 சிறுபான்மை கட்சிகளின் யோசனை அமைச்சரவைக்கு

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் போது, 18 சிறுபான்மைக் கட்சிகள் தங்களுடைய யோசனைகளை சமர்ப்பிக்கவுள்ளன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறவிருக்கின்றது. இந்தக் கூட்டத்தின் போதே தங்களுடைய யோசனைகளை சமர்ப்பிக்கவுள்ளதாக 18 சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

பத்தரமுல்லையிலுள்ள வோட்டர் எட்ஜ் ஹோட்டலில், நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அந்த 18 கட்சிகளின் பிரதிநிதிகளும் மேற்கண்ட தீர்மானத்தை தெரிவித்தனர்.

இந்த, ஊடகவியலாளர் மாநாட்டில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக கட்சி, ஜன பக்.24

# 20க்கு இன்று இறுதி முடிவு

### கூடுகின்றது அமைச்சரவை



கொழும்பு, ஜூன் 12

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்த போதிலும், திருத்தச் சட்டத்தின் தற்போதுள்ள வடிவத்துக்குக் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இந்த நிலையில், இன்றைய அமைச்சர வையில் திருத்திய வடிவத்தில் 20 ஆவது திருத்தச் சட்டம் இறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, அமைச்சரவைப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை அமைச்சரவைக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 20 ஆவது திருத்தச் சட்டத்தை சமர்ப்பித்திருந்தார். இதன்போது தொகுதிகளை 125 ஆகக் குறைத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தொடர்ந்தும் 225 ஆக தொடரும் வகையில் திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சித் பக்.24

# யாழ். ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் யார்?

### 6 மாதங்களுக்கு மேலாக கூட்டங்கள் நடக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 12

புதிய அரசு அமையப் பெற்று 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் யார் என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இதன் காரணமாக, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஆறு மாத காலத்திற்கு மேலாகக் கூட்டப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, குறித்த கூட்டங்களிலேயே அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்படும். இதனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வருடத்தில் ஒரு தடவை இடம்பெறுவதுடன், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களும் அவ்வாறு இடம்பெற்று வந்தன.

ஆனால் கடந்த மூன்று வருடங்களாக பல்வேறு பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டு வந்தன.

புதிய அரசு கடந்த ஜனவரி மாதம் பதவியேற்ற பின்னர், மாவட்ட - பிரதேச ஒருங் பக்.24

# நிதி மோசடி விசாரணை பிரிவைக் கலைக்குமாறு மஹிந்த மனுத் தாக்கல்



கொழும்பு, ஜூன் 12

பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் விசாரணைக்குள் ராஜபக்ஷ குடும்பம் சிக்கியுள்ள நிலையில், அந்த விசாரணைப் பிரிவுக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்பில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விசாரணைப் பிரிவை உடன் கலைக்குமாறு கோரி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பாளர் ரொஹான் வெலிவிட்டவால் நேற்றுக் காலை இந்த மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதிய அரசால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த விசாரணைப் பிரிவு, சட்டவிரோதமானது என்றும், அர பக்.24

# தடையை நீக்கவா லண்டனில் பேச்சு?

### எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

கொழும்பு, ஜூன் 12

புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்தும், புலிகளுடன் தொடர்புடைய புலம்பெயர் தமிழர் அமைப்புகளைத் தடைசெய்த வர்த்தமானி அறிவித்தலை திரும்பப் பெறுவது குறித்தும், புலம்பெயர் தமிழர்களுடன் லண்டனில் முக்கிய பேச்சு நடத்தப்பட்டதா?" என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் எதிர்க் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுச் சபையில் கேள்வி எழுப்பினார்.

போர்க்குற்ற விசாரணைக்காக உள்ளகப் பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பில் உலகத் தமிழர் சபையுடனும் பேச்சில் பங்கேற்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனும் கருத்துப் பரிமாறப்பட்டதா? என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவையின் அனுமதியுடன் லண்டன் பேச்சு நடத்தப்பட்டதா? என்றும் கேள்வி எழுப்பினார். அத்துடன், இந்தப் பேச்சு குறித்து முழுமையான அறிக்கையொன்றை நாடாளு பக்.24

# புலம்பெயர் தமிழருடன் ரகசியமாக பேசவில்லை

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

புலம்பெயர் தமிழர்களுடன் இலங்கை அரசு எந்தவொரு இரகசியப் பேச்சுக்களும் நடத்தவில்லை. புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமையவே, லண்டன் சந்திப்புக்கள் இடம்பெற்றதாக, வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புலம்பெயர் தமிழர்களுடன் அண்மையில் பேச்சுக்களை நடத்தியிருந்தார். லண்டனில் இடம்பெற்ற இந்தப் பேச்சுக்களில், பக்.24

# சிறுவர் பாலியல் முறைகேடுகளுக்கு பெற்றோரின் கவனயீனமே காரணம்

### கூறுகின்றது பொலிஸ் தரப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களின் அக்கறையின்மையே சிறுவர்கள் பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாகக் காரணம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறுவர்களைப் பாலியல் முறைகேடுகளுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை இரகசியமான முறையில் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸார் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் நீண்டகாலத்தின் பின்னர் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணைக்குட்படுத்தப்படும் போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாகச் சம்பவங்களுடன் தொடர்புடைய சாட்சியங்களை அடையாளம் காண்பதற்கும் அவர்களினூடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் சிக்கல் நிலை ஏற்படுகின்றது.

ஆகவே சிறுவர் பாலியல் முறைகேட்டுச் சம்பவங்கள் குறித்து உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கோ அறிவிக்க வேண்டும் - என்றார். (த-4)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திட்டமிட்டு விபத்தை ஏற்படுத்திய இளைஞனுக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம் யூன் 12
தனிப்பட்ட பகைமை காரணமாக முதியவரை மோட்டார் சைக்கிளால் மோதி காயப்படுத்திய கோப்பாயைச் சேர்ந்த இளைஞனுக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் பத்தாயிரத்து ஐந்நூறு ரூபா அபராதம் செலுத்துமாறும் பாதிக்கப்பட்ட முதியவருக்கு பத்தாயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
வேலிப் பிரச்சினை காரணமாகவே குறித்த இளைஞன் நடந்து சென்ற முதியவரை மோட்டார் சைக்கிளால் மோதியதுடன் காயப்பட்டவரை அச்சுறுத்தியுமுள்ளார்.
இளைஞனிடம் மோட்டார் சைக்கிளை செலுத்துவதற்குரிய சாரதி அனுமதிப் பத்திரமும் இருந்திருக்கவில்லை. அவரை கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் பெ.சிவகுமார் இளைஞனின் கைவிரல டையாளத்தை பெறுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற-103)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற யோகபுரம், உரும்பிராய் வடக்கை சேர்ந்த நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.
அவரை ஐம்பதாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். சட்டவிரோதமாக கொண்டுசெல்லப்பட்ட மணல் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் வாகனம் பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு விடுவிக்கப்பட்டது. (ற-103)

## விதிமுறை மீறிய வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையால் யாழ் நகரப் பகுதி, குருநகர் மற்றும் கோப்பாய் பகுதிகளில் உள்ள வர்த்தக நிறுவனங்களில் விற்பனைத் திகதி முடிவடைந்த பொருள்களை விற்பனை செய்த, கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த மற்றும் விலை காட்சிப்படுத்தாமல் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.
அதில் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க விலையைக் கூட்டி தகரத் திலடைக்கப்பட்ட மீனை விற்பனை செய்த கடை உரிமையாளரொருவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதமும், விற்பனைத் திகதி முடிவடைந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.
விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமல் வடை விற்பனை செய்த மூன்று உணவக உரிமையாளர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (ற-103)



நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேற்று இடம்பெற்ற கற்பூரத் திருவிழாவில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் கேடகத்தில் வீதி வலம் வந்தார். (ற-17)

# வலுவூட்டும் செயற்திட்டத்தில் 11 பிரதேச சபைகளே தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 12
பிரதேச சபைகளை வலுவூட்டும் செயற்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு, வடக்கில் 11 பிரதேச சபைகள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதேச சபைக்கும் 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பத்து மில்லியனுக்கும் குறைவான வருடாந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரதேச சபைகளுக்கு மாத்திரமே, இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.
யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு பிரதேச சபைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச சபையும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச சபையும், மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், முசலி பிரதேச சபைகளும், வவுனியா மாவட்டத்தில் மாந்தை மேற்கு, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச சபைகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
2015 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான 8 மாதங்களுக்குரிய 8 மில்லியன் ரூபா கொடுப்பனவுகளே ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்தமைக்கான அறிக்கை சமர்ப்பித்த பின்னரே, 2015 ஆம் ஆண்டுக்குரிய நிதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# டெங்கு பரவும் சூழல்: 25 பேருக்கு வழக்கு

### யாழ். மாநகர எல்லைக்குள்

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ். மாநகரப் பகுதியில் டெங்கு பரவுவதற்கு ஏதுவான நிலையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த 25 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.



தொடர்ந்து மூன்று நாள்கள் இடம்பெற்ற டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது 2 ஆயிரத்து 647 வீடுகள் பார்வையிடப்பட்டன.
டெங்குத் தாக்கம் கூடுதலாகக் காணப்பட்ட நாவாந்துறை, வண்ணார்பண்ணை, நல்லூர் ஆகிய பிரதேசங்களிலேயே இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
நல்லூரில் கடந்த வெள்ளிக்கிழமை குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் உட்பட 841 இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. மறுநாள் சனிக்கிழமை நாவாந்துறையில் 965 இடங்கள் பார்வையிடப்பட்டன. கடந்த திங்கட்கிழமை 841 இடங்கள் பார்வையிடப்பட்டன.
மூன்று நாள்களும் இடம்பெற்ற நடவடிக்கையில் மாநகர சுகாதாரப் பகுதி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதார பாதுகாவலர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார், பொது நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
இந்த மூன்று நாள் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது இந்தப் பிரதேசங்களில் தேங்கியிருந்த கழிவுகளும் அகற்றப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற-4,17)



வட இலங்கை இளங்கோ சனசமூக நிலைய வேலுப்பிள்ளை கனகம்மா அரங்கு திறப்பு விழா கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. (ற)

## நீதிமன்ற தாக்குதல் தொடர்பில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ்ப்பாண நீதிமன்ற தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் இரு சந்தேகநபர்கள் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
தாக்குதல் சம்பவம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட காணொளிகளிலும் ஒளிப்படங்களிலும் அவர் உள்ளார் எனத்தெரிவித்தே பொலிஸார் அவர்களை முற்படுத்தினர்.
அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (ற-103)

## மரக் குற்றிகளுடன் லொறி சிக்கியது

கிளிநொச்சி, ஜூன் 12
கிளிநொச்சி தர்மபுரம் வீதியில் சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகளுடன் தப்பித்துச் செல்ல முற்பட்ட பாரவூர்தியொன்றை நேற்றுமுந்தினம் மாலை கைப்பற்றியுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். பாரவூர்தி சாரதியும், அதன் உதவியாளரும் வாகனத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
பொலிஸார் பாரவூர்தியை மறித்து முதிரை மரங்களுடன் பாரவூர்தியை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற பொலிஸார், வாகன உரிமையாளர் தொடர்பான விவரங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினூடாகப் பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# மடுத் திருத்தல திருவிழா தொடர்பில் விசேட கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 12
மடுத் திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல், மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.
எதிர்வரும் ஆடி மாதம் 2ஆம் திகதி இடம்பெறவிருக்கும் மடுத் திருத்தலத்தின் திருவிழாவுக்கு தேவையான முன்னேற்பாடுகள் குறித்து இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.
தேவாலய சூழலின் பாதுகாப்பு, வீதி ஒழுங்கமைப்பு, போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் மற்றும் சுகாதாரம் உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டன.
மடுத் திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடல் சில தினங்களில் மடு தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.
குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடுத்திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ் பிள்ளை, மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் கலந்துகொண்டனர். மதவிவகார அமைச்சின் கீழ் இயங்கும் கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட ஏனைய அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மன்னார் அரச தனியார் போக்குவரத்து துறையினரும் இதில் கலந்து கொண்டனர்.
உடல் நலக்குறைவு காரணமாக கொழும்பில் சிகிச்சை பெற்று வரும் மன்னார் ஆயர் அருட்கலாநிதி இராயப்பு ஜோசப்பு ஆண்டகைக்காக விசேட பிரார்த்தனையும் இதன்போது இடம்பெற்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மார் ஒதுங்குவதே வன்செயலுக்கு காரணம்

## பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12
வீதியால் செல்லும் தாய்மார் தமக்கு பிறரால் ஏற்படுத்தப்படும் நக்கல், சேஷ்டைகள், பொறுக்கித் தனங்கள் தொடர்பில் தட்டிக் கேட்க வேண்டும். அவ்வாறு செய்யாததால்தான் அவர்களது பிள்ளைகளும் – மாணவிகளும் பிறரால் வஞ்சிக்கப்படுகின்றனர். – இவ்வாறு பொலிஸார் பெற்றோருக்கு அறிவுரை கூறியுள்ளனர்.

தாவடியிலுள்ள இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கு போதைப்பொருள் மற்றும் சிறுவர் பாலியல் முறைகேடுகள் தொடர்பில் விழிப்பூட்டும் கருத்தமர்வு ஒன்று நேற்று இடம்பெற்றது. அதில் சுன்னாகம் பொலிஸார் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

தாய் தனது பண்பாட்டிலிருந்து எப்போது விலகுகிறாரோ அப்போதே நலன்களும் கெட்டுப் போகத் தொடங்குகின்றன. அதனால் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும்கூடப் பாதிப்பு ஏற்படுகிறது. வீதிகளில் நின்று கூட்டம் போட்டு அலைந்து திரியும் கூட்டங்கள் பல உள்ளன. அவற்றை அடக்கி வைக்க வேண்டும். அவர்களது சேஷ்டைகள், பொறுக்கித் தனங்களுக்கு இடம்கொடுக்காது நின்று அவர்களது சமூகக் கேடான செயற்பாடுகளைத் தட்டிக் கேட்க வேண்டும். அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தால் அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க முடியும்.

அது மாத்திரமல்ல போதைப்பொருள் பாவனை, விற்பனை செய்பவர்கள் தொடர்பில் உடனுக்குடன் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும். மாணவர்களுக்கு அவற்றை வழங்குபவர்கள் தொடர்பிலும் அறிவிக்க வேண்டும். தவிர சிறுவர்களைப் பாலியல் முறைகேடுகளுக்குப் பயன்படுத்துபவர்கள் அல்லது அதனை நோக்காகக் கொண்டு அணுகுபவர்கள் தொடர்பிலும் பெற்றோரும் குறிப்பாக மாணவிகள் கவனமாகச் செயற்பட வேண்டும்.

அத்தகைய நபர்கள் பற்றி பாடசாலை ஆசிரியர்களிடமோ, அதிபரிடமோ பொலிஸாருக்கோ அறிவிக்க முடியும்.– என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கருத்தமர்வில் சுகாதார வைத்திய அதிகாரி, நன்னடத்தை அதிகாரி, பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். இதுதவிர இவை பற்றிய கருத்தமர்வுகள் யாழ்.நகரிலுள்ள பாடசாலைகள் சிலவற்றிலும் நேற்று இடம்பெற்றன. (ந–4)



சிறுபோகச் செய்கைக்கான முன்னாயத்த நடவடிக்கைகளில் மன்னார் விவசாயிகள் மும்முரமாக இறங்கியுள்ளனர். இம்முறை 900 ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் தற்போது அவர்கள் தமது வயல்நிலங்களைப் பண்படுத்த ஆரம்பித்துள்ளனர். (ந–56)

# போதைப்பொருளை ஒழிப்பதற்கு அனைவரும் இணைய வேண்டும்

## வேலணை பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12
போதைப் பொருள்கள் பாவனை காரணமாக இன்று வடபகுதியில் பெரிய சமூகச் சீர்கேடுகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அது முற்றாக ஒழிக்கப்படாவிடில் எதிர்காலமே இருண்டு விடும் என வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் குறிப்பிட்டார்.

போதைப் பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு வேலணை பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன் பாவனையை நிறுத்த பொது மக்கள் தமக்குரிய பொறுப்புக்களை முன்னெடுப்பதாக இல்லை. போதைப் பொருள் தொடர்பான தகவல்களை வழங்கினால் தீாமும் எதிர்விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற பயம் உள்ளதே அதற்குக் காரணம் எனத் தெரிகின்றது. இதனால் பாதிக்கப்படுவது எங்கள் பிள்ளைகளே என்பதைக் கருத்தில் கொண்டு அது குறித்த தகவல்களை தெரியப்படுத்த வேண்டியது பெற்றோர்களின் கடமை. – என்ற அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்களும், உளவளத்துறைச் சேர்ந்த எஸ்.நகுலராஜ் உட்பட பெருமளவு பொது மக்கள் கலந்து கொண்டனர். (ந–7)

# ஓய்வூதியர்களது சம்பள முரண்பாடு: அரசு கவனம்

## வட மாகாண சபைக்கு தெரிவித்தார் அமைச்சர் கரு

யாழ்ப்பாணம், ஜூன் 12
ஓய்வூதியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அரசு கவனத்தில் கொண்டுள்ளதாகவும், இது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அமைச்சர் கரு ஜெயசூரியா வடக்கு மாகாண சபைக்கு அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தால், கடந்த மே மாதம் 30 ஆம் திகதி, ஓய்வூதியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஊழியர்களது ஓய்வூதியத்தை, 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், அடிப்படையில் மீளாய்வு செய்வதை வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளில் உள்ளடக்க வேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் தீர்மானம் முன்னைய ஜனாதிபதி மஹிந்தவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு சம்பளக் கட்டமைப்பில் முரண்பாடுகள் தீர்க்கப்படும் என்று அவர் தனது வரவு – செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டிருந்தார். எனினும், 2015 ஆம் ஆண்டின் புதிய சம்பளக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால் குறித்த பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

இதேவேளை, தற்போதைய அரசு ஓய்வூதியர்களின் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில் இடைக்கால கொடுப்பனவாக 3 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தது.

ஆனாலும், இன்னமும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதனை தீர்த்து வைக்குமாறு கோரி, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்தால் கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பிரதி பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் கரு ஜெயசூரியவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கு கடந்த 3 ஆம் திகதி பதில் அனுப்பி வைத்துள்ள அமைச்சர் கரு ஜெயசூரிய, இந்த விடயம் அரசின் கவனத்தில் இருப்பதாகவும், காலப் போக்கில் இது தொடர்பிலான அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ந–5)

### வெளிநாட்டு சிகரெட் விற்றவருக்கு ரூ.1 லட். அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
சாவகச்சேரி பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் வெளிநாட்டுச் சிகரெட் விற்பனை செய்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில், சுங்கவரி செலுத்தாத வெளிநாட்டு சிகரெட்களை வர்த்தக நிலையத்தில் விற்பனை செய்தவரை கடந்த வியாழக்கிழமை கைது செய்தனர்.

அவரிடமிருந்து 19 வெளிநாட்டு சிகரெட்களை கைப்பற்றியதுடன், அவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வர்த்தகர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (ந)



### சட்டவிரோதமாக கடலட்டை பிடித்தோருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜூன் 12
கட்டைக்காட்டு கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்தமைக்காக மூவருக்கு நேற்று தலா 10 ஆயிரம் வீதம் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோர பிரதேசமும், யாழ்ப்பாணத்தை அண்டியுள்ள பகுதியுமான கட்டைக்காட்டு பகுதியில் உள்ள கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடல் அட்டை பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் குறித்த மூவருக்கும் எதிராக கிளிநொச்சி கடல்தொழில் நீரியில் வள திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ வகாப்தீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துகொள்ளப்பட்டது.

குறித்த மூவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புகொண்டதன் காரணமாக மூவருக்கும் தலை 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ந–21)

# பார்வையுமில்லாது தனிமையில் தவித்த மூதாட்டி கைதடி இல்லத்தில் இணைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12
இரண்டு கண்களுமே பார்வையற்ற நிலையில் எவரது பராமரிப்பும் இன்றி தனிமையில் வாழ்ந்து வந்த 75வயதான மூதாட்டி ஒருவர் நேற்று கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப் பட்டார்.

முள்ளியவளை, மாமுனை பகுதியில் குடிசை ஒன்றில் எவரது துணையும் இன்றி மயில்வாகனம் சியாமளா என்ற இந்த மூதாட்டி தனிமையில் வசித்து வந்துள்ளார். இரண்டு கண்களும் பார்வையற்ற நிலையில் எழும்பி நடக்க முடியாத நிலையில் பெரும் சிரமப்பட்டு வசித்து வந்துள்ளார்.

இவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள் உள்ளனர். இதில் இருவர் இறந்துள்ளனர். மற்றையவர் தன்னை கைவிட்டு சென்றுள்ளதாக அந்த மூதாட்டி கூறினார்.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினர் இந்த மூதாட்டியை பொறுப்பேற்று கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைத்துள்ளனர்.

இந்த மூதாட்டியின் உறவினர் மற்றும் உறவுகள் இல்லத்துடன் தொடர்பு கொண்டு அவர் பற்றிய முழுமையான விவரங்களைத் தந்து உதவுமாறு முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் கேட்டுள்ளார்.

அத்துடன் 60 வயதுக்கு மேற்பட்ட ஆரோக்கியமுள்ள ஆதரவற்ற வயோதிபர்களை மட்டுமே அரச முதியோர் இல்லம் இணைத்துக் கொள்ளும்.

பிள்ளைகள் இருந்தும் கடைசியில் பராமரிக்க முடியாது சிரமப்படும் வயோதிபர்களை இல்லம் இணைத்துக்கொள்ள மாட்டாது. தமது பெற்றோர்களை பிள்ளைகளே பராமரிக்க வேண்டும், என்ற விழிப்புணர்வுக்கு ஏற்ப பிள்ளைகள் அவர்களை பராமரிக்க முன்வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ந–17)

# பொலிஸிலிருந்து ஓடியவரால் இரண்டு ஆடுகள் கொலை!

## முறைப்பாட்டை அடுத்து தேடுகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 12
பொலிஸ் சேவையில் இருந்து ஒரு மாதத்துக்கு முன்னர் தப்பியோடிய ஒருவர் மீது, இரு ஆடுகளைத் துன்புறுத்திக் கொலை செய்தார் என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்துப் பொலிஸார் குறித்த நபரைத் தேடி வருகின்றனர்.

உடுவில், அம்மன் வீதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தனிப்பட்ட [illegible] வெட்டப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆடுகளைக் கொலை செய்தவர் பொலிஸில் இருந்து தப்பியோடிய நபரே என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட ஆடுகள் விலங்கியல் மருத்துவரின் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. கழுத்து எலும்பு முறிக்கப்பட்டு ஆடுகள் கொலை செய்யப்பட்டுள்ளன என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்டமா அதிபர் திணைக்களத்தின் வவுனியாவுக்கான உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற் றுக் காலை நடைபெற்றது. ஜனாதிபதி சட்டத்தரணியும் சட்டமா அதிபருமான யுவன்ஜன விஜயதிலக்கவின் அழைப்பின்பேரில் நீதி அமைச்சர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கல் நட்டார். இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், வவுனியா நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், உத்தியோகத்தர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ந)

# சட்டவிரோத மணலுடன் 5 டிப்பர்கள் மடக்கிப் பிடிப்பு

## முருங்கன் பொலிஸார் அதிரடி

மன்னார், ஜுன் 12

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றுக் காலை சட்டவிரோதமானமுறையில் மணல் மண் கொண்டுசெல்லப்பட்ட 5 டிப்பர் வாகனங்களைக் கைப்பற்றியுள்ளதோடு அதன் சாரதிகள் 5 பேரையும் கைது செய்துள்ளதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அலகக்கோன் அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஐ.அபேயரத்தின தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த டிப்பர் வாகனங்களை கைப்பற்றியுள்ளனர்.

அரிப்பு மற்றும் சிலாபத்துறை பகுதிகளில் இருந்து குறித்த மணல் மண் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவற்றில் ஒரு டிப்பரை நானாட்டான் பகுதியில் வைத்து கைப்பற்றியுள்ளதோடு ஏனைய 4 டிப்பர் வாகனங்களும் முருங்கன் பகுதியில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மணல் மண்ணுடன் குறித்த 5 டிப்பர் வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதோடு அதன் சாரதிகள் 5 பேரும் கைது செய்யப்பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

குறித்த ஐவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவுடன் அவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர். (ந-56)

# சிறுவருக்கு சிகரெட் விற்ற வர்த்தகருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜுன் 12

கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 6 வர்த்தகர்களுக்கு நேற்றுத் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்று.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் கிளிநொச்சி சுகாதார பிரிவினரின் திடீர் சோதனை நடவடிக்கையின் போது சிக்கிய 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த பல்வேறு இடங்கள்ள சேர்ந்த 6 வர்த்தகர்களுக்கு எதிரான வழக்கு கிளிநொச்சி நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் விசாரணைக்காக நேற்று எடுத்து கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது வர்த்தகர்கள் தாங்கள் மீதான குற்றத்தை ஒப்பு கொண்டதன் காரணமாக ஒவ்வொரு வர்த்தகருக்கும் தலா 5 ஆயிரம் தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ வகாப்தீன்.

அத்தோடு இனிமேல் இவ்வாறான குற்றத்துக்கு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் நீதிவான் எச்சரித்தார். (ந-21)

# விபத்தை தடுக்க வீதிச் சமிக்ஞை

## அமைத்துத் தருமாறு கோப்பாய் பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 12

வாகன விபத்துக்களைத் தடுப்பதற்கு பருத்தித்துறை வீதியில் கோப்பாய்சந்தியில்வீதிசமிக்ஞைவிளக்குகளை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இந்த பிரதான சந்தியில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருவதால் வீணான மனித உயிரிழப்புக்கள் ஏற்படுவதோடு படுகாயமடையும் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

யாழ்.-பருத்தித்துறை வீதி மற்றும் கைதடி - மானிப்பாய் வீதிகளை இணைக்கும் இந்தப் பிரதான சந்தியில் அடிக்கடி விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த பிரதான சந்தியைக் கடக்க முற்படும் சமயங்களிலேயே விபத்துக்கள் நேரிடுகின்றன. இந்த விபத்துக்களால் அநியாய உயிரிழப்புக்களும், மக்கள் படுகாயமடையும் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தற்போதைய சூழ்நிலையில் வீதிகளில் இடம்பெறும் இந்த அநியாய உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு முக்கிய சந்திகளில் வீதி சமிக்ஞை விளக்குகளை அமைக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். சத்திரச் சந்தியில் அமைந்தது போன்ற, நகரை அண்டிய முக்கிய சந்திகளில் மற்றும் நகரின் புறநகர்ப் பகுதியிலும் உள்ள சந்திகளிலும் இந்த வீதி சமிக்ஞை விளக்குகள் பொருத்த வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை, வீதி சமிக்ஞை பொருத்துவதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தற்போது இல்லை. வீதி அபிவிருத்திக்கான புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போதே, இதனைச் செய்ய முடியும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட அலுவலகத்தினர் தெரிவித்தனர். (ந-17)

# தலைமன்னார் கரையில் கரையொதுங்கிய சிலை



மன்னார், ஜுன் 12

தலைமன்னார் ஸ்ரேசன் பழைய பாலத்தடி கடற்கரையில் நேற்று வியாழக்கிழமை காலை மரத்தில் செதுக்கப்பட்ட மிகவும் பழைமை வாய்ந்த மனித உருவம் கொண்ட சிலை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை குறித்த சிலை கரை ஒதுங்கிய நிலையில் மீனவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நேற்றுக் காலை தலைமன்னார் ஸ்ரேசன் கிராம அலுவலர் அந்தப் பகுதிக்குச் சென்று குறித்த சிலையை மக்களின் ஒத்துழைப்புடன் மீட்டு தனது அலுவலகத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் குறித்த கிராம அலுவலர் மன்னார் பிரதேச செயளாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். மீட்கப்பட்ட மரத்தால் செதுக்கப்பட்ட குறித்த மனித உருவம் கொண்ட சிலை சுமார் 5 அடி உயரம் கொண்டதாகவும்,மிகவும் பழைமை வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. அண்மையில் நேபாளத்தில் ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து குறித்த சிலை கரையொதுங்கியிருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-56)

# வீதிக்கு வரும் விச ஜந்துகள்: மக்கள் அச்சம்

கிளிநொச்சி, ஜுன் 12

கிளிநொச்சி புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள வீதிகளின் இருமருங்குகளிலும் உள்ள பற்றைக் காடுகளிலிருந்து பாம்பு உள்ளிட்ட விச ஜந்துக்கள் வீதிகளுக்கு படையெடுப்பதால் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் மக்களின் செறிவு குறைவாகக் காணப்படுவதால் பல காணிகள் பற்றைக் காடுகளாக மாறியுள்ளன. அவைகள் வீதிகளுக்கு படையெடுப்பதனால் அச்சத்துடன் பயணிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அந்த பற்றைக் காடுகளை துப்புரவு செய்துதருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந)

# இரணைமடுக்குளத்தை அபிவிருத்தி செய்வது அவசியம்

## கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜுன் 12

கிளிநொச்சி மாவட்ட மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்கின்ற முக்கிய குளமாக இரணைமடுக் குளம் காணப்படுகின்றது. அதை அபிவிருத்தி செய்வதும் பராமரிப்பதும் அனைவரது பொறுப்பாகும். - இவ்வாறு கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.



இரணைமடுக்குள அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவான நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு இரணைமடுக்குளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. பல வருடங்களாக இக் குளம் புனரமைக்கப்படாமலுள்ளது. எனவே, எதிர் காலத்தில் இந்தக் குளத்தை புனரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.- என்றார்.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன அதிகாரிகள், குளத்தின் வேலைத்திட்டங்களில் பங்குகொண்டுள்ள நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ந)

# மின் தாக்கியதில் மின்சார சபை ஊழியர் படுகாயம்.

மட்டக்களப்பு, ஜுன் 12

மட்டக்களப்பு நகரில் நேற்று வியாழக்கிழமை காலை மின்சார திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த மின்சாரசபை ஊழியரான திருகோணமலையை சேர்ந்த கே.வசந்தன் (வயது 35) என்பவர் மின் தாக்குதலுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற மட்டக்களப்பு மின்சார சபையின் அதிகாரிகளும் பொலிஸாரும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆட்சியிலும் தமிழ் மக்களின் கனவுகள் தவிடுபொடியாகிவிட்டன

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 12

படுகொலை, வெள்ளை வான் கலாசாரம், காணாமல் போதல் மற்றும் வடக்கு, கிழக்கு மக்களை மிருகங்களைவிட மிகக் கேவலமாக நடத்தியமை போன்ற கொடுங்கோல் ஆட்சியாளர்களை விரட்டியடித்து புதிய ஆட்சி மலர்வதற்கு வழி சமைத்தோம். இருப்பினும் புதிய ஆட்சியில் எமது மக்களின் கனவுகளும் தவிடுபொடியாகிவிட்டது. முன்னைய கொடுங்கோல் ஆட்சியாளர்களை விமர்சித்தமைபோன்று புதிய ஆட்சியாளர்களையும் தட்டிக் கேட்கும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. – இவ்வாறு கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை சூடேற்றி அவர்களின் இரத்தத்தைக் கொதிப்படையச் செய்வதாக இங்கு உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார். நாம் கூறுகின்ற கதைகளால் எமது மக்கள் சூடாவதற்கும் இரத்தம் கொதிப்படைவதற்கும் அவர்கள் முட்டாள்கள் அல்ல. அத்துடன் சிந்திக்கத் தெரியாதவர்களும் அல்லர். ஏமாளிகளும் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அமர்வின்போது இடம்பெற்ற அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் மீதான சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொடுங்கோல் ஆட்சியாளர்களையும், வெள்ளைவான் கலாசாரத்தை மேற்கொண்டவர்களையும், சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகளை படுகொலை செய்த மற்றும் காணாமல்போதல் ஆகியவற்றுக்கு காரணமானவர்களையும், வடக்கு, கிழக்கில் எமது மக்களை மிருகங்களை விட மிகமோசமாக நடத்தியவர்களையும் தோற்கடித்து புதிய அரசை அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்ததில் என்ன தவறு இருக்கிறது? எனக் கேட்க விரும்புகின்றேன்.

புதிய அரசை நாம் அமைத்த போதிலும் எமது மக்களின் கனவுகள் தவிடுபொடியாகிவிட்டன என்பதையும் கூறவேண்டும். நாம் அந்த அரசையும் வெளிப்படையாக விமர்சித்திருந்தோம். புதிய ஆட்சி மலர்ந்திருக்கின்ற போதிலும் எமது மக்களுக்கு எந்த நன்மையும் கிட்டிவிடவில்லை. அதேபோன்று புதிய அரசின் வெற்றிக்கு காரணமானவர்கள் என்ற வகையில் எமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாய்மூடி வல்லமையற்று இருந்துவிடப் போவதில்லை.

இன்றைய ஆட்சி குறித்து பேசுகின்றவர்கள் அனுராதபுரச் சிறைச்சாலையில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்ட போதும் போரின் போது இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமற்போன போதும் எதுவும் பேச வில்லை. ஆனால் நாம் அன்றும் எமது மக்களுக்காக குரல் கொடுத்தோம் இன்றும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். காணாமற்போனோர் தொடர்பில் எமது உறவுகள் ஒரு வேளை உணவைக் கூட நிம்ம தியாக உண்பதற்கு முடியாதவர் களாக உள்ளனர். இன்றும் சிறைச் சாலைகளுக்குச் சென்று தமது உறவுகளைத் தேடி வருகின்றனர். இவ்வாறு தேடப்படுபவர்கள் இருக் கின்றனரா இல்லையா என்பது குறித்து அரசு கூறவேண்டும். காணாமற்போன வர்கள் தொடர்பில் முன்னைய அரசிலும் அது குறித்த நியாயம் கிடைக்கவில்லை. புதிய அரசிலும் அது குறித்த கனவு தவிடுபொடியாகிவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை சூடேற்றி அவர்களின் இரத்தத்தை கொதிப்படையச் செய்வதாக இங்கு உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார். நாம் கூறுகின்ற கதைகளால் எமது மக்கள் சூடாவதற்கும் இரத்தம் கொதிப்படைவதற்கும் அவர்கள் முட்டாள்கள் அல்ல. அத்துடன் சிந்திக்கத் தெரியாதவர்களும் அல்லர். ஏமாளிகளும் அல்ல. – என்றார். (ற)

# செல்வம் - சந்திரகுமார் மன்றில் வாய்த் தர்க்கம்

கொழும்பு, ஜூன் 12

புதிய அரசின் 100 நாள் வேலைத் திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிக்கொண் டிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் முருகேசு சந்திரகுமாருக்கும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கடும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தை விமர்சிக்கின்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு புதிய அரசுக்கு வாக்களித்தது தவறு என்பதை உணர்ந்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சத்திரகுமார் கூறியதையடுத்தே இந்த வாய்த் தர்க்கம் மூண்டது.

இதன்போது மேலும் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், புதிய அரசால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களை வாக்களிக்குமாறு தூண்டியது. அப்படியானால் புதிய அரசில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். எனவே தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளமைக்கான பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்க வேண் டும் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அப்படியென்றால் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், நீங்கள் புதிய ஆட்சியை ஆதரிக்கின்றீர்கள் ஆனால் உங்களுக்குப் பின்னால் உள்ள உறுப்பினர்கள் புதிய அரசின் மீது விமர்சனங்களை முன் வைக்கிறார்கள். அவர்களிடம் கேட்டுப்பாருங்கள் என்றார்.

இதற்குப் பதிலளித்த செல்வம், சரியானதை நாம் சரியென்று கூறுவது போன்று பிழைகளையும் சுட்டிக் காட்டத் தயங்குவதில்லை என்றார்.

இதன் போது பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், அப்படியென்றால் நீங்கள் ஏன் புதிய அரசில் ஒட்டிக்கொண்டிருக் கிறீர்கள்? நிறைவேற்றுச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டிக்கொண்டிருக்கிறது என்றார்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், நாம் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. மாறாக நீங்கள் தான் மஹிந்தவுக்கு வால் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந் தீர்கள்.– என்றார். (ற)

# காட்டாட்சி அரசியல்வாதிகளால் கூட்டுறவுச் சங்கங்கள் அழிவு

## சாடுகின்றார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை



கிளிநொச்சி, ஜூன் 12

கடந்த கால காட்டாட்சி அரசியல் வாதிகளால் கூட்டுறவுச் சங்கங்கள் அழிவடைந்து போய்விட்டன. வன்னிப் பகுதியில் இது அதிகமாகவே இடம்பெற்றுள்ளது என வடக்கு மாகாணசபை உறுப்பி னர் பசுபதிப்பிள்ளை காட்டமாகக் கூறினார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற வடமாகாணத்தைச் சார்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கிடையிலான கலந்தரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த காலத்திலே வன்னிப் பகுதியிலே கூட்டுறவுத் திணைக்களம் சார்ந்த ஊழியர்களை காட்டாட்சி நடத் திய அரசியல் வாதிகள் தான் தெரிவு செய்தார்கள். அதனால் தான் இன்று கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல் மோசடிகள் என்பவற்றால் சங்கங்கள் வளரமுடியாமல் உள்ளன. கூட்டுறவுக்குள் அரசியல் வேண்டாம். இது கூட்டுறவு அமைப்பு. இதில் அனைவரும் ஒன்றுதான். காட்டாட்சி பிடித்தவர்களால் கூட்டுறவுத்துறை அழிந்து போய் விட்டது.

நெடுந்தீவிலே ஒருகூட்டுறவுச் சங்கம் அழிந்து விட்டது. 6 மாதங்களுக்கு மேலாக ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. தலைவரிடம் சம்பளம் கேட்டால் உங்களை வேலையில் இணைத்தது டக்ளஸ் தேவானந்தா தான். அவரிடம் இது பற்றிக் கூறி னால் வேலை இல்லாது போகும் என்று மிரட்டுகின்றார். இது உண் மைச் சம்பவம். நான் பொய் கூறவில்லை.

தற்போது அது சரிவராது எல்லோரும் தங்களுடைய கருத்துக்களை கூறலாம். சுதந்திரமாகவும் எவருக்கும் பயப்படாமலும வேலை செய்யலாம். வருங்காலம் உங்கள் கைகளில்தான். புலிகளுடைய காலத்தில் மக்களுக்காக வேலை செய்ய வேண்டும் என்று எவ்வாறு வேலைகளை கவனமாகவும் மனசாட்சியுடனும் பொறுப்புணர்வுடனும் செய்தீர்களோ அவ்வாறே இனி வரும் காலங்களில் நீங்கள் பணிகளில் ஈடுபட வேண்டும். ஏனெனில் கூட்டுறவானது அதலபாதாளத்தினுள் விழுந்துள்ளது. அதை நிமிர்த்த வேண்டும் அந்தப் பொறுப்பு உங்களுக்கே உண்டு.– என்றார். (ற–21)




பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணம், கண்டி கிளைகளில்.

ஜூன் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டுடன் வரவும்
  பிள்ளைகளுக்கு(16-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000

70 ரக்கா வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை 0830–1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்ட்ன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830–1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900–1730
ஞாயிறு: 0900–1600

... எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. ஆரோக்கிய விடயத்தில், அக்கறை கொள் வீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். வாகன பயணத்தில், கவனம் கொள்வது அவசியம்.

**இடபம்:** நீண்டநாள் எண்ணம் இனிதே நிறைவேறும். உறவினர்களின் ஒத்துழைப்பு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு உயரும். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**மிதுனம்**: சிந்தனையும், செயலும், உயர்வாக அமைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்டுச் செயற்பட்டு, வருமானம் காண்பீர்கள். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணத்தின் மூலம், இனிய அனுபவம் கிடைக்கும்.

**கடகம்**: மறதியால், பிரச்னைக்கு ஆளாகலாம்; கவனம் தேவை. குடும்பத்தினரின் ஒத்துழைப்பு, நல்ல முறையில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான ஆதாயம் கிடைக்கும். உடல் நலத்திற்கு ஒவ்வாதவற்றைத் தவிர்க்கவும்.

**சிங்கம்**:யாரிடமும், வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம்.பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். சுப காரியத்தில், விருப்பம் நிறைவேற வாய்ப்புண்டு.

**கன்னி**: உதவி மனப்பான்மை கொண்டவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். பிள்ளைகள், பெருமை தேடித்தரும் விதத்தில் செயற்படுவர்.

**துலாம்**:உங்களின் சாமர்த்தியத்தை நண்பர்கள் பாராட்டுவார்கள். தொழில், வியாபாரத்தில், வியப்பூட்டும் வகையில் பணவரவு கிடைக்கும். குடும்பத் தேவை அனைத்தும் பூர்த்தியாகும். மனைவியின் அன்பு கண்டு நெகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**: எதிலும், முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சீரான வளர்ச்சியும், இலாபமும் ஏற்படும். புதிய இனங்களில் செலவு ஏற்படலாம். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**தனுசு**: ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.
தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், சுதந்திர மனப்பான்மையுடன் பணியாற்றுவர்.

**மகரம்**: எதிரியால் இருந்த தொந்தரவு மறையும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டு. நிலுவைப் பணம் மீளக் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து, நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**: சிலர், உங்களுக்கு தந்த வாக்குறுதிக்கு மாறாக செயற்படுவர். சுய கௌவரத்துக்காக செலவு செய்ய நேரிடும். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள்.


**மீனம்**:இலட்சிய எண்ணத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி விரைவில் வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

## காதலிக்காக இப்படியா ?



காதலி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அச்சப்பட்டதன் காரணமாக, அவருடைய காதலன் காதலி போல வேடம் அணிந்து பரீட்சைக்குச் சென்றுள்ள சம்பவம் கஸகஸ்தானில் நடைபெற்றுள்ளது.
குறித்த இளைஞன், பரீட்சை மண்டபத்துக்குள் நுழைவதற்கு முன்னர் அடையாள அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். இதன்போது அடையாள அட்டையில் இருந்த ஒளிப்படத்துக்கும் வந்திருந்த யுவதியின் முகத்துக்கும் வித்தியாசம் தென்பட்டுள்ளது.
அதன்பிரகாரம் அந்த நபரை வேறொரு இடத்துக்கு அழைத்து சென்று இது தொடர்பில் விசாரிக்கையில் அந்த நபரின் குரலில் இருந்து அவர், யுவதியல்ல இளைஞன் என்பது தெரியவந்துள்ளது.
அந்த இளைஞனின் போலியான தலைமுடி, ஒப்பனை காரணமாக அவர் கதைக்கும் வரையிலும் அவர் ஆண் என்பதைக் கண்டறிய முடியவில்லை என்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் அந்த இளைஞன், தெரிவிக்கையில் இது புத்தி சாதூரியமான செயல் அல்ல, எனினும், என்னுடைய காதலிக்காக அவ்வாறு செய்தமைக்காகத் நான் சந்தோஷமடைகின்றேன் என்றார்.

## வசூலை அள்ளிக் குவிக்கும் காஞ்சனா



ராகவா லாரன்ஸ் இயக்கி நடித்த காஞ்சனா 2 திரைப்படம் 100 கோடி ரூபாய் வசூலை அள்ளியுள் ளது. தற்போது 50 நாள்களைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கும் இந்தத் திரைப் படம், இன்னமும் தமிழ் நாட்டின் சில பகுதிகளில் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.
இது குறித்து பேசிய வல்லுநர் த்ரிநாத், தமிழ் சினிமாவில் இந்த வருடம் முதல் ப்ளாக்போஸ்டர் படமாக காஞ்சனா 2 உருவாகியுள்ளது. ரிக்கெட் விற்பனையில் மட்டும் இந்தத் திரைப்படம் 108 கோடியை (இந்திய மதிப்பில்) அள் ளியுள்ளது என்றார்.
17 கோடி ரூபாவில் (இந்திய மதிப்பில்) உருவானதாக கூறப்படும் காஞ்சனா 2, சம்பந்திப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் லாபகரமான படமாக அமைந்துள்ளது. தற்போது காஞ்சனா 3 –ஆம் பாகத்துக்கான கதை தயாராகி வருவதாக லாரன்ஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்....

ஒருவர்: எதுக்கு அந்த ஆளை எல்லாரும் அடிச்சிட்டு இருக்காங்க?
மற்றொருவர்: இங்க தமிழ் ஆசிரியர் யாரு என்று கேட்டதுக்கு அடியேன் என்று சொன்னாராம்.

ஆசிரியர்: காந்தி ஜெயந்தி பற்றி கட்டுரை எழுது.
மாணவன்: காந்தி தெரியும் அது யாரு ஜெயந்தி?
ஆசிரியர்: ??????????

## விளாசிய விசாகா பாராட்டிய திரிசா



பேஸ்புக்கில் ஆபாசக் கருத்தாளரை விளா சிய நடிகை விசாகாவுக்கு நடிகை திரிசா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
சந்தானம் கதாநாயகனாக அறிமுகமான கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தின் கதாநாயகியாக நடித்தவர் விசாகா.
அண்மையில், ஒவ்வொருவருமே மற்ற எல்லோருக்குமே வெளிநாட்டினர் தான்! என்ற பொருள் தரக்கூடிய ஆங்கில வாக்கியங்கள் அச்சடிக்கப்பட்ட ரீ சேர்ட்டை அணிந்து, இதுபோன்ற இன்னும் பல வாக்கியங்களை எதிர்பார்க்கிறேன் என்று பதிவிட்டிருந்தார்.
ஏராளமான கருத்துக்கள் வந்து குவிந்த நிலையில், ஒரு நபர், பார்க்க நன்றாக இருக்கிறீர்கள். மார்பகங்களும் என்று கருத்தைப் பதிவிட, கோபம் கொண்ட விசாகா, அதற்கு கடுமையான பதிலைப் பதிவு செய்தார்.
முதலில் உங்களின் சொந்தப் புகைப்படத்தை வைக்கும் துணிச்சல் இருக்க வேண்டும். பிறகு கருத்துத் தெரிவிக்கலாம்.ஆம். நல்ல மார்பகங்கள்தான், நான் ஒரு பெண். தங்களுடைய மேலான அறிவுக்கு ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன். எல்லாப் பெண்களுக்கும் மார்பகங்கள் இருக்கின்றன. உங்கள் அம்மா, தங்கை, மனைவி, பாட்டி, அத்தை, மகள், உறவினர்கள் என எல்லோருக்குமே. அவர்களிடமும் சென்று இதே வார்த்தையைச் சொல்வீர்களா? உங்களை எண்ணி வருத்தப்படுகிறேன். இதே வார்த்தையை என் முகத்தைப் பார்த்து உங்களால் கூற முடியுமா? இல்லையென்றால் என் முகநூல் பக்கத்தைவிட்டு வெளியேறுங்கள்.
இந்தப் பதிலுக்கு ஆச்சரியங்களும், ஆதரவுகளும் பெருகிய நிலையில், தற்போது அந்தப் பதிவை நீக்கியுள்ள விசாகா, தான் தேவையில்லாத சர்ச்சைகளுக்குள் சிக்க விரும்பவில்லை எனவும், இதுவரை ஆதரவு தந்தவர்களுக்கு நன்றி எனவும் தெரிவித்துள்ளார்.
விசாகாவின் விளாசல் பதிலைப் பாராட்டியுள்ள நடிகை திரிசா, இத்தகைய கோழைகளை நீங்கள் எதிர்கொண்ட விதம் அற்புதம். பெண்களின் சக்தியையே இது காட்டுகிறது. என்ற விதமாக தனது டுவிட்டர் பக்கத்தில் சிலாகித்துள்ளார்.

## குழந்தை பெறுவது இன்னமும் ஓயவில்லை

இங்கிலாந்தில் லங்காஷ்ஷயர் என்ற இடத்தைச் சேர்ந்தவர் நோயல் (வயது–43) ரொட்டிக் கடை வைத்திருக்கிறார். இவரது மனைவி சூரெட்போர்டு (வயது–39). இந்தத் தம்பதிகளுக்கு ஏற்கனவே 17 குழந்தைகள் இருக்கிறார்கள்.
இவர்கள் தான் இங்கிலாந்திலேயே அதிக குழந்தைகள் பெற்றவர்கள் என்ற சாதனை படைத்து இருந்தனர். கடந்த வாரம் சூ ரெட்போர்டு 18 ஆவதாக ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இது தான் எங்கள் கடைசிக் குழந்தை என்று எங்களால் சொல்ல முடியாது என்று கூறும் இந்த தம்பதிக்கு இரண்டு பேரக் குழந்தைகள் இருக்கிறார்கள் என்பது கூடுதல் செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கங்களை வெளியிட நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 12

நல்லூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்திப் பகுதி தனது பிரதேச எல்லைக்குட்பட்ட எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக மிகவும் கஷ்டமான நிலையில் உள்ள எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை வெளியிடக்கூடிய விதத்தில் நிதி உதவிகளை வழங்கவுள்ளது.

மாகாண கலாசார பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு ரூபா 25 ஆயிரம் நிதி உதவியை இதற்கென வழங்கியுள்ளது. மிகவும் கஷ்ட நிலையில் தமது ஆக்கங்களை வெளிக்கொணர வசதிகளற்ற எழுத்தாளர்கள் இது தொடர்பாகத் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் எனவும்,

கலாசார மன்றங்களினூடாக மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டங்களுக்கு உதவும் வகையில் அபிவிருத்திக்கெனவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் இது தொடர்பாகவும் கலாசார மன்றங்கள் தம்மிடம் தொடர்பு கொள்ளலாம் எனவும் நல்லூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம் தெரிவித்துள்ளார். (ற-7)

# முன்பள்ளிக்கு காணி அன்பளிப்பு

வரணி, ஜூன் 12

வரணி வடக்கு முன்பள்ளிக்கு காணி ஒன்று பிரதேசவாசி ஒருவ ரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

தற்சமயம் இத்தாலி நாட்டில் குடும்பத்துடன் வசித்து வரும் வெ.செல்வராசா என்பவரே இந்தக் காணியை அன்பளிப்பாக வழங்கி உள்ளதாக முகா மைக்குழு உறுப்பினரான இ.கஜன் தெரிவித்தார்.

அதேவேளை, புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தப் பாடாலையின் கட்டுமானப் பணிகளுக்காக ரூபா 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ற-122)

# சுட்டிபுரம் அம்மன்

## தேர்த் திருவிழா நாளை

வரணி, ஜூன் 12

வரலாற்றுப் புகழ்மிக்க கண்ணகி அம்மன் ஆலயங்களுள் ஒன்றான வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலய தேர்த்திருவிழா நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிறு அன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று உற்சவம் முடிவடையும்.

கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை இந்த ஆலயத்தின் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றது. (ற-122)

# கற்சிலைமடு கிராம அலுவலர் அலுவலகத்தில் சிரமதானம்

ஒட்டுசுட்டான், ஜூன் 12

கற்சிலைமடு கிராம அலுவலர் அலுவலக வளாகத்தில் துப்புரவுப் பணிகள் சிரமதானம் மூலம் கடந்த 4 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

கிராம அலுவலர் அலுவலகம் கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் இயங்கி வந்த போதிலும் அந்தக் கட்டட திருத்த வேலை காரணமாக வேறு இடத்தில் இயங்கி தற்போது வழமையாக இருந்த இடத்தில்இயங்கிவருகிறது. (ற-500)

# கூட்டுறவாளர் எனக் கூற தற்போது எவருமில்லை

## விவசாய கூட்டுறவு அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் கவலை

கிளிநொச்சி, ஜூன் 12

கூட்டுறவாளர்களது நிலையை பார்த்தால் இனிவரும் 30 ஆண்டுகளில் கூட்டுறவாளர் வீரசிங்கத்தை போன்று சிறந்ததொரு கூட்டுறவாளர் என்று கூறுவதற்கு எங்களிடம் யாரும் இல்லாத ஒரு சூழ்நிலை காணப்பட போவதாக கவலையுடன் தெரிவித்தார் விவசாய கூட்டுறவு அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற வடமாகாணத்தை சார்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கிடையிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாய அமைச்சரால் உருவாக்கப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தின் ஒரு திட்டமாக தற்போது கூட்டுறவாளர் வீரசிங்கத்தினுயை முத்திரை வெளியிடும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவர் சிறந்த தொரு கூட்டுறவாளராகக் காணப்பட்டார். ஆனால் தற்போது உள்ள சூழ்நிலையில், கூட்டுறவாளர்கள் மத்தியிலே இருக்கும் பிரச்சினைகள், தங்கள் கடமைகளை ஒழுங்காக ஆற்றமுடியாமை, கூட்டுறவுச்சங்கங்களின் தொய்வுநிலை, போன்ற காரணங்களை வைத்து பார்க்கின்ற போது இனி வரும் 30 ஆண்டுகளில் சிறந்த தொரு கூட்டுறவாளர் இவர்தான் என்று கூறுவதற்கு எங்கள் மத்தியில் எவருமே இருக்கமாட் டார்கள்.

தற்போதைய நிலை அதுவாகத்தான் உள்ளது என்றும் இது வெறும் நகைச்சுவை அல்ல. நாங்கள் சிந்திக்கவேண்டும். எமது கூட்டுறவு சங்கங்களை நல்லநிலையிலே கொண்டு சென்று தொய்ந்து போயுள்ள எமது கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டியெழுப்புவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களா கிய நீங்கள் முன்வர வேண்டும். - என்றார். (ற-21)

# வீடமைப்புக்கான கடன்களை விரைவில் வழங்க ஏற்பாடு

## வீடமைப்பு அதிகார சபை மேற்கொள்கின்றது

வலி.தென்மேற்கு, ஜூன் 12

அரசின் 100 நாள்கள் வேலைத் திட்டத்தின் கீழ் தொகுதிக்கு 300 வீடுகள் என்ற அடிப்படையில் வீடமைப்பு அதிகார சபையால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் ஒரு லட்சம் ரூபா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 3 ஆயிரம் பயனாளிகளில் முதற்கட்டமாக ஆயிரத்து 600 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

வீடமைப்பு அதிகார சபையின் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய அதற்கான சகல ஒழுங்குகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அரசு பதவிக்கு வந்தமையை அடுத்து 100 நாள்கள் வேலைத் திட்டத்தின் கீழ் மக்கள் பயனடையக் கூடிய பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

அவற்றில் வீடில்லாத சகலரையும் வீட்டுத்திட்டத்தின் கீழ் இணைக்கும் வகையில் தொகுதிக்கு 300 வீடுகள் என்ற வகையில் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைக்கப்படவுள்ள 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒவ்வொரு வீட்டிற்கும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 10 வருட கடனடிப்படையில் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வசிக்கும் காணி இல்லாதவர்களுக்கு அரச காணிகள் வழங்கப்பட்டு இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்தும் இந்தத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலைகள் எதிர்வரும் நாள்களில் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட வீடமைப்பு அதிகார சபைத் தலைவர், பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 3 ஆயிரம் பயனாளிகளில் முதற்கட்டமாக ஆயிரத்து 600 பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

அதேநேரம் ஏற்கனவே அரச வீட்டுத்திட்டத்தில் இணைக்கப்பட்டு அதற்குரிய முழுப் பணத்தையும் செலுத்தியவர்களில் 50 பேருக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. (ற-115)

# சிறுபோக செய்கை மழையால் பாதிப்பு

ஒட்டுசுட்டான், ஜூன் 12

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்து ஐயன்கட்டு குளம் மற்றும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோகச் செய்கை கடும்மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரங்களில் தொடர்ந்த தொடர் மழையினால் கற்சிலைமடு சிறிய நீர்ப்பாசனக்குளத்தின் கீழ் அறுவடையை அண்மித்துக் காணப்படும் சிறுபோக நெற்செய்கை மழை வெள்ளம் காரணமாகச் சேதமடைந்துள்ளது.

10க்கும் மேற்பட்ட செய்கைப் பகுதிகள் முற்றாக அழிந்துள்ளன. ஏற்கனவே களை நாசினிகளின் செயற்பாடுகள் குன்றியமையினாலும் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தாலும் விவசாயிகள் பெரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். (ற-500)

# முல்லை -வவுனியா வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

நெடுங்கேணி வீதியிலிருந்து இத்திமடு ஊடாக தட்டாமலை மற்றும் முல்லைத்தீவு வவுனியா வீதியைச் சென்றடையும் வீதியை புனரமைத்துத் தருமாறு அந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:-

இத்திமடு, பெரிய இத்திமடு, தட்டாமலை கிராம மக்கள் இந்த வீதியையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியிலிருந்து பிரிந்து செல்லும் இந்த வீதி அரச உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஒட்டுசுட்டான் வரும் மக்கள் பயணிக்கும் வீதியாக அமைந்துள்ளது.

இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு அரச அதிகாரிகளிடம் முறையிட்டதோடு மாகாண சபை உறுப்பினர் து.ரவீகரனிடம் இதுகுறித்து முறை யிட்டோம். ஆனால் இது வரை இந்த வீதி திருத்தப்படவில்லை. இருமருங்கும் பற்றைகள் மூடி, பயணிக்க முடியாத அளவுக்கு மோசமாகியுள்ளது.

இத்திமடுவிலே பிரசித்தி பெற்ற நாகதம்பிரான் ஆலயமும் உள்ளது. அதன் பொங்கல் நிகழ்வும் அண்மையில் நடைபெற உள்ளது. ஏராளமான அடியார்கள் பயன்படுத்தவுள்ள இந்த வீதியை உடனடியாகத் திருத்த ஆவன செய்யப்பட வேண்டுவதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச பணியாளர்கள், மக்கள் சென்றுவர இந்த வீதியை புனரமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். (ற-500)

# வடக்கு கூ.சங்கங்களின் விவரங்கள் அமைச்சுக்கு

## ஓகஸ்ட் 15க்கு முன் வழங்குமாறு அமைச்சர் ஐங்கரநேசன் உத்தரவு

வடக்கு மாகாணத்தில் உள்ள 2 ஆயிரத்து 67 கூட்டுறவுச் சங்கங்களினுடைய முழுமையான விவரங்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தனது அமைச்சுக்கு வழங்க வேண்டும் என வடக்கு மாகாணத்தை சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் வடக்கு மாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஐங்கரநேசன்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற வடக்கு மாகாணத்தை சார்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக் கிடையிலான சந்திப்பிலே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த காலங்களில் கூட்டுறவு சங்கங்களில் ஏற்பட்ட இலஞ்ச ஊழல்கள், மந்தமான செயற்பாடுகள் தொடர்பாக அறிந்து கொள்ள வேண் டும் என்பதற்காகவும் சங்கங்கள் பற்றிய விவரங்கள் தனக்கு தெரிந்திருக்கவேண்டும் எனவும் கூறியே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 100 அங்கத்தவர்களை புதிதாக பதிவு செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு வெற்றிகரமாக கடமைகளை செய்பவர்களுக்கு சிறந்த சலுகைகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-21)

# புல்மோட்டை குளத்தை புனரமைக்க கோரிக்கை

அம்பாறை, ஜூன் 12

புல்மோட்டை விவசாயக்குளத்தை புனரமைத்துத்தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் குளத்தை நம்பி சுமார் 75 விவசாயக் குடும்பங்கள் தமது ஜீவனோபாய தொழிலான விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றன.

இக்குளத்தைப் புனரமைப்பு செய்தால் 120 ஏக்கர் வயல் நிலத்தில் விவசாயம் செய்ய முடியும். கடந்த ஆட்சிக் காலத்தில் இக்குளத்தைப் புனரமைப்பதற்காக 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டபோதும், அரசியல் தலைமைகளின் அழுத்தம் காரணமாக இப்பணம் வேறு பிரதேசத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே, இக்குளத்தை புனரமைக்க சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி விவசா யிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ற)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் பொன்னையா துரைராசா

மலர்வு 20.07.1951

உதிர்வு 13.05.2015



கடந்த 13.05.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் பொன்னையா துரைராசா அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (12.06.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

182, டச்சு வீதி,
சாவகச்சேரி,
077 354 3872

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றக் கலைப்பா? ‘20’ஆவதா? எதிர்க்கட்சியே முடிவெடுக்க வேண்டும்

## பிரதமர் ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 12

நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் பொதுத்தேர்தலுக்குச் செல்லுமாறு ஐக்கிய தேசியக்கட்சியே முதலில் வலியுறுத்தியது. எனினும் எமது சிறுபான்மை அரசு நீடித்திருப்பதற்கு ஐ.ம.சு.முன்னணியே காரணம். அந்த வகையில் நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டுமா அல்லது 20 ஆவது திருத்தம் வேண்டுமா என்பதை எதிர்க்கட்சியே தீர்மானிக்க வேண்டும். எந்தத் தீர்மானத்துக்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். எந்த அச்சமும் எமக்கில்லை.– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க நேற்றுமுன் தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை அமர்வின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேராவால் விடுக்கப்பட்டிருந்த கூற்று தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான தினேஸ் குணவர்த்தன சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அது சபைக்குள் சர்ச்சை நிலையை உருவாக்கியிருந்தது. இது தொடர்பில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் எழுந்ததுடன் கூச்சல் குழப்ப நிலையும் ஏற்பட்டி ருந்தது.

**தினேஸ் குணவர்த்தன**

முன்னதாக கேள்வியெழுப்பிய உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கூறுகையில்,

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று தயாரிக்கப்பட்டு அதில் 100க்கும் அதிகமான உறுப்பினர்கள் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனைத்து உரிமைகளும் இருக்கின்ற நிலையில் மேற்படி பிரேரணையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித்.பி.பெரேராவால் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய போதிலும் இவ்வாறு நம்பிக்கை யில்லா பிரேரணையை மீளப் பெறு வது தொடர்பில் எதுவும் கூறவில் லை. அப்படியானால் இது பிரதியமைச்சரால் கூறப்பட்ட உண்மைக்குப் புறம்பான கருத்தாகும். இதன்மூலம் எமது உறுப்பினர்களது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.– என்றார்.

**பொய்யான கூற்று–ஜீ.எல்**

இதனையடுத்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் ஜீ.எல் பீரிஸ் கூறுகையில்,

அஜித் பி.பெரேராவால் கூறப்பட்டது பொய்யான கூற்றாகும்.அதில் உண்மை கிடையாது. இங்கு மிக முக்கியமானதாக நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும் என்ற விடயமே உள்ளது.

தற்போதைய நம்பிக்கையில்லாப் பிரேரணையானது நாட்டில் முக்கிய பதவியில் இருக்கும் பிரதமருக்கு எதிரானதாகும். ஆகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அது சிறந்ததாகும். நம்பிக்கையில்லாப் பிரேர ணையை நாடாளுமன்றம் ஏற்க வேண்டும். இல்லயேல் அதனை நிராகரிக்கவேண்டும். ஏனெனில் இந்த நாடாளுமன் றத்தின் மீது நம் பிக்கை ஏற்படவேண்டும். ஆனாலும் அது குறைந்து செல்வதையே அவதானிக்க முடிகிறது. அதற்கேற்ற வகையில்தான் பிரதியமைச்சர் அஜித் பி.பெரேராவின் கூற்று அமைந் துள்ளது.– என்றார்.

**தனிப்பட்ட குரோதமல்ல–பந்துல**

இதன்போதைய எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்த்தன கூறுகையில்,

நம்பிக்கையில்லாப் பிரேரணை எனும்போது அது நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமையாகும். அந்த வகையிலேயே மேற்படி பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நாடாளுமன்றம் நிதி விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கையாளுகின்ற நிறுவனமாகும். இங்கு பிரச்சினை ஒன்று உள்ளது. அப்பிரேரணையானது பிரதமர் பதவிக்கு எதிரானதே தவிர, தனிப்பட்ட நபருக்கு எதிரானதல்ல.– என்றார்.

**பொதுத்தேர்தலை நடத்துங்கள்–விமல்**

இதனையடுத்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ஸ கூறுகையில்,

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அமைந்த புதிய அரசானது 100 நாள் வேலைத் திட்டத்துக்கான அரசாகவே அமைக்கப்பட்டது. எனினும் 200 நாள்கள்



கடந்தாலும் நாடாளுமன்றம் கலைக்கப்படுமா? என்பது புரியாதுள்ளது. 100 நாள்களுக்காக அனுமதி கோரி இவ்வாறு நாள்களைக் கடத்துவது. மக்கள் ஆணையற்ற அரசுக்குத் தார்மீகமானதல்ல. அதேபோன்று பிரதமரும் மக்கள் ஆணையின் பிரகாரம் நியமிக்கப்பட்டவரல்ல. எனவே நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும். இல்லையேல் நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்க வேண்டும்.–என்றார்.

**கட்டுப்படுங்கள் இல்லையேல் ஆதரவளியுங்கள் –ரணில்**

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கூற்றுக்களை அவதானித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மஹிந்தவுக்குப் பணியாற்றுவதை விடுத்து உங்களது தலைவருக்கு கட்டுப்பட்டு நடவுங்கள். அது முடியாவிட்டால் எனக்கு ஆதரவளித்து என்னோடு இணைந்து செயற்படுங்கள்.– என்று கூறினார் .

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதியமைச்சர் அஜித் பி.பெரேராவால் கூறப்பட்ட கூற்று உண்மையா? உண்மைக்கு புறம்பானதா? என்பது குறித்து எனக்கு தெரியாது. இக்கூற்று தவறு எனில் அது தவறு என உறுப்பினர் தினேஸ் குணவர்தனவினால் சுட்டிக்காட்ட முடியுமே தவிர அவர் கூற்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைக்கு எந்தப் பாதகமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதை தினேஸ் குணவர்த்தன உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்போது இருப்பது சிறுபான்மை அரசு என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். 2015 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டு மக்களால் நிராகரிக்கப் பட்டிருக்கிறார்.

நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவருக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் செயற்பட்டுக் கொண்டிருப்பதை விடுத்து முன்னணியின் தலைவருக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு கேட்கின்றேன். இல்லாவிட்டால் எனக்கு ஆதரவளித்து செயற்படுங்கள்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்லுமாறு முதலில் வலியுறுத்தியது ஐக்கிய தேசியக்கட்சிதான். ஆனாலும் எமது சிறுபான்மை அரசாங்கம் நீடித்து செல்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே காரணமாகும்.

எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது தொடர்பில் எமக்கு எந்தவித பிரச்சினையும் கிடையாது. எனினும் இங்கு இருபதாவது திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அந்த வகையில் நாடாளுமன்ற ஒழுங்கு புத்தகத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே நாடாளுமன்றத்தில் செயற் பட முடியும்.

எப்படி இருப்பினும் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இடமளிக்க முடியாது. நம்பிக்கை யில்லா பிரேரணையானாலும் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வதானாலும் நாம் எதற்கும் தயாராகவே இருக்கின்றோம்.– என்றார். (ற)

## மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலைய ஆண்டு விழா

வலி.வடக்கு, ஜூன் 12

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் கல்வியங்காட்டு அருளம்பலம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் மு.ப. 10 மணிக்கு சமூகவள நிலையத் தலைவர் க.தர்மசேகரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகனும் சிறப்பு விருந்தினராக இலங்கை மன்றக் கல்லூரியைச் சேர்ந்தக.ஜங்கரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை சமூக வள நிலைய செயலாளர் து.ஜசிந்தன் நிகழ்த்துவார். ஆசியுரைகளை யாழ்.பல்கலைக் கழக நல்லாயன் நிலையத்தைச் சேர்ந்த அருட்திரு ஆஜ்.ஸ்ராலினும் யாழ்ப்பாணம் சின்மய மிஷனைச் சேர்ந்த ஜாக்கிரத சைத்தனிய சுவாமிகளும் நிகழ்த் தவுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன. சமூக வள நிலைய அங்கத்தவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ற–86)

## வட இந்து மகளிர் ஆய்வுகூட திறப்பு திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி தொழில் நுட்ப ஆய்வுகூடத்திறப்பு விழா இன்று கல்லூரி அதிபர் தேவராணி தலைமையில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிவஞானம் சிறிதரன் ஆகியோர் கலந்துகொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆய்வு கூடத்தை நாடா வெட்டித் திறந்து வைக்கவுள்ளனர். (ற–109)

## மாணவர்களுக்கான இரு நிகழ்வுகளும் யாழ்.இந்து மகளிரில்

யாழ்ப்பாணம், ஜூன் 12

மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் பங்குபற்றும் மாணவர் களில் வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைக்கும் தோற்று பவர்களும் இருப்பார்களேயாயின் அவர்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலேயே இரண்டு நிகழ்வுகளிலும் பங்குபற்ற முடியும் என்று யாழ். கல்வி வலய பதில் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் மாகாண மட்ட சதுரங்கப் போட்டி இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ற–4)

## அநாதரவாக கிடந்த மோ.சைக்கிள் நீதிமன்றில்

நெல்லியடி, ஜூன் 12

வல்வெட்டித்துறை நகரப்பகுதியில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைவிடப்பட்டிருந்த நிலையில்இருந்தமோட்டார்சைக்கிள் ஒன்றை மீட்டு பருத்தித்துறை நீதிமன்றில் பாரப்படுத்தியி ருக்கின்றனர். என் சி எம் ஆர் 9283 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளே இவ்வாறு மீட்கப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொள்ளலாம் என மன்றின் பதிவாளர் அறிவித்துள் ளார். (ற–109)

## மரண அறிவித்தல்



பிறப்பு : 07.09.1925
இறப்பு : 09.06.2015

### நமசிவாயம் சுந்தரம் (கிளாக்கர்)

(சிலாவத்தை தெற்கு, முல்லைத்தீவு)

பெரிய அரசடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சிலாவத்தைதெற்கு, முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சுந்தரம் (கிளாக்கர்) 09.06.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்புக் கணவரும், பத்மகலா தேவி, பத்மசோதி, சிவசுப்ரமணியம் (கனடா), சிவகுமார் (சுவிஸ்), சிவனருட்செல்வன், சத்தியபாமா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகராஜா, ரவீந்திரன்,பவானி (கனடா), அமிர்தவாணி(சுவிஸ்), ரவீந்திரன் கலிஸ்ரஸ் (பிரான்ஸ்), பிலிப்றேமன்(தவம்), காலஞ்சென்ற சுசீலா தேவி ஆகியோரின் அன்பு மாமனும், நிசாந்தினி, லதா, அனுசியா, தனுசியா, சரிகா, காலஞ்சென்ற சோபிகா, யசிகா, ரிவிகா, சுலக்ஷன் (சுவிஸ்), லக்ஷிகா (சுவிஸ்), ஜீவராஜ் (பிரான்ஸ்), கௌரிதேவி, கனிமொழி, கொன்சலிற்றா (பிரான்ஸ்), அலன் (பிரான்ஸ்), நிர்விதா (பிரான்ஸ்), தும்சியா, கஸ்விதன், நிலோஜன், இந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், கபிந்தன், அனுசியன், பிருத்திகா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.06.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11.00 மணிக்கு தகனக் கிரியைக்காக 4ஆம் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலாவத்தை தெற்கு,
முல்லைத்தீவு.

தகவல்: குடும்பத்தினர்.
தவம் - 077 0475921, அருள் - 077 8339937

## கடந்த ஆறு மாத காலத்துக்குள் மூதூரில் 86 பேருக்கு டெங்கு

மூதூர், ஜூன் 12

மூதூரில் கடந்த ஆறு மாதத்துக்குள் 86 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக மூதூர் பொது சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் எம்.எம்.ஆரிப் தெரிவித்தார்.

மூதூர் கிழக்கு, கட்டைபறிச்சான், தோப்பூர் போன்ற பிரதேசங்களில் அதிகமாக டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். திருகோணமலை மாவட்டத்தில் மிக வேகமாக டெங்கு பரவி வருவதனால், அது குறித்து மூதூர் பிரதேசசபையின் ஊழியர்கள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள் போன்றோருக்கு தெளிவுறுத்தும் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மூதூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

டெங்குத் தொற்றைக் குறைக்க வேண்டுமாக இருந்தால் தமது வீட்டுச் சூழலில் நீர்தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அதனை சீர் செய்ய வேண்டும். இந்நோய் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்க வேண்டும்.– என்றார்.

இந்தக் கூட்டத்தில், மூதூர் பிரதேச சபையின் செயலாளர் என்.நஜாத், மூதூர் பிரதேசபையின் உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள், சுகாதார மேற்பார்வையாளர்கள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள், பிரதேச சபையின் சுகாதார தொழிலாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிப் பாடசாலைக்கு அடிக்கல்

ஒட்டுசுட்டான், ஜூன் 12
பேராறு கிராமத்தில் அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல்லை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ஆர்.குருபரன் நட்டுவைத்தார். இந்த நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.
100நாள் வேலைத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் பேராறு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் இந்த் அறநெறிப் பாடசாலை அமையவுள்ளது. முல்லை மாவட்டத் திட்டப் பணிப்பாளர் முகுந்தன் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் திட்டப் பணிப்பாளர் நவநீதன், பேராறு கிராம அலுவலர், கி.அ.சங்கத் தலைவர் க.நவரத்தினராசா ஆகியோரும் அடிக்கல் நட்டனர்.
இந்தப் பாடசாலையானது வெகு விரைவில் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நவரத்தினராசா தெரிவித் தார்.
(ற-500)

## தேரடி வைரவருக்கு பொங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 11
கொழும்புத்துறைமேற்கு விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தேரடி வைரவருக்கான பொங்கல் நடைபெறும்.
பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு மாலை 4 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும். (ற-17)

## திருமுறை மனனப் போட்டி

வலி.வடக்கு, ஜூன் 12
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகம், மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை தினத்தை முன் னிட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் முகமாக திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளனர்.
தரம் 1, 2 பாலர் பிரிவுக்கும் மற்றும் கீழ் பிரிவான தரம் 3, 4 இற்கும் இந்தப்போட்டிகள் நடைபெறவுள்ளன.
பாலர் பிரிவுக்கு 'முத்தி நெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனே' மற்றும் 'பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்' என்னும் இரு திருமுறைகளும், கீழ் பிரிவுக்கு 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்' மற்றும் 'வான் ஆகி மண் ஆகி வளி ஆகி ஒளி ஆகி' ஆகிய இரு திருமுறைகளிலும் மனனப் போட்டிகள் எதிர்வரும் 16ஆம் திகதி வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடை பெற வுள்ளன.
போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-86)

## காக்கைதீவு சந்தையில் சைக்கிள் தரிப்பிடம்

### பிரதேச சபை நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஜூன் 12
காக்கைதீவு சந்தையில் பல மாதங்களுக்குப் பின்பு சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் அமைக்க முன் வந்துள்ள பிரதேச சபை, சந்தைக்கு அருகாமையிலுள்ள காணியை மணல்போட்டு மேவி செப்பனிடவுள்ளது. இதற்கான பரிந்துரை நிதிக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது.
காக்கைதீவு சந்தையில் சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் அமைப்பதற்குப் பொருத்தமான இடம் இல்லாததால் மீன் சந்தையை மட்டும் குத்தகைக்கு வழங்கியிருந்தது.
ஆனால், சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவர் வீதியிலும் அருகிலுள்ள காணியிலும் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு வரி அறவிட்டு வந்தார். இந்தநிலை குறித்து உறுப்பினர்கள் மட்டுமல்ல பொதுமக்களும் பிரதேச சபையின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.
இந்த நிலையில் ஆறு மாதங்களுக்குப் பின் மேற்படி சந்தையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை அமைக்க வந்துள்ள பிரதேச சபை அருகிலுள்ள காணியை மணல் போட்டு மேவி துப்புரவு செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.
சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் அமைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. (ற-115)

## விபத்தில் ஒருவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 12
ஏ-9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதிவிட்டுத் தப்பிச் சென்றது. அதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி, வடக்கு மாகாண சபை செயலகத்துக்கு முன்பாக நடந்துள்ளது.
இதில் கைதடி மேற்கைச் சேர்ந்த பாபு பிரசாத் (வயது-30) என்பவரே காயமடைந்தவராவார். (ற-9)

## வற்றாப்பளை ஆலய உற்சவத்தில் பெண்கள், சிறுவர்கள் திருட்டில்

ஒட்டுசுட்டான், ஜூன் 12
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இம்முறை பெண்களும், சிறுவர்களுமே திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்றும், திருட்டில் ஈடுபட்ட 10க்கும் மேற்பட்டோர் பிடிபட்டுள்ளதாகவும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் தெரிவித்தார்.
வழமையாக திருடுபவர்கள் ஆண்கள். ஆனால் அதற்கு மாறாக இம்முறை அதிகம் பெண்களும் சிறுவர்களும் ஈடுபட்டுள்ளனர். ஆலயத்துக்கு செல்வோர் நகைகளை அணியாது தவிர்ப்பதுடன், பெண்கள் இந்தவிடயத்தில் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் பொலிஸார் தெரிவித்தார். (ற-500)

## நிர்வாக சபைக்கூட்டம்

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ நாராயணா வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள வைத்திலிங்கத்தின் இல்லத்தில் நடைபெறும். (ஐ)


**காணி விற்பனைக்கு**
38,(8/2) பேரின்பநாயகம் வீதி, பரப்பு 7, குழி 5¼ (யா/கச்சேரியிலிருந்து 300 மீற்றருக்குள்) காணிவிற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 679 4190 (60847)

**Majestic Cineplex Jaffna**
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில் CEYLON THEATRES


சில்வர் 10.15 / 2.15 / 6.15


ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
FROM 15 JUNE


விசாரணை ☎ 021-2227712
CeylonTheatres www.ceylontheatres.com

**ஓவியப் பயிற்சி**
எல்லா வயது மாணவர்களுக்கும் ஓவியம் கற்றுக்கொடுப்பதுடன், கணினி வடிவமைப்பும் (Designing) செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 076 540 7121 (60929) (45.3.7)

**இறைச்சிக்கோழி விற்பனை**
புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும்,மிகக்குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டது 450/= 10 Kg இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 430/= மட்டும்.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை, (60538)
தொ.பே. 077 868 9500 (45.3.7)

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**
இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
**சாய்ராம் சாஸ்திரிகள்**
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளி நாட்டு பிரச்சினை, குழந்தைப் பாக்கி யம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி- மாலை 6.00 மணிவரை
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கல்லூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக) (59429)
நீராவியடி, யாழ்ப்பாணம். (4.3.7)

**ஓம் சக்தி ஜோதிட நிலையம்**
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
**சிவசங்கர் ஜோதிடர்**
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.


இலங்கை, இந்தியா கூட்டிணைந்த
சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை பயிற்சிப்பட்டறை 2015
இரு நாட்டு சிறப்பு வல்லுநர்கள்
ஒரே மேடையில் பகிர்ந்து வழங்கும்
இந்த, அரிய அனுபவத்தை தவற விடாதீர்கள்.
இந்தியாவில் முன்னணி அழகுக்கலை நிபுணர்,
ஆர்த்தி அமரேந்திரா மற்றும்
பிரிட்டிஷ் கொஸ்மடிக்ஸ் தொழில்நுட்ப பணிப்பாளர்
நிரோஷா ஜாகொட ஆரச்சி
ஒன்றிணைந்து வழங்கும்
சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை பயிற்சிப்பட்டறை.
அனுசரணை
British Cosmetics
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
077 3 520 903 / 077 3 128 792

இடம்: வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
திகதி: 2015 ஜூன் 14
நேரம்: மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை
வேடிக்கை விளையாட்டுகள் மற்றும் பரிசுகள்
நற்சான்றிதழ் வழங்கப்படும்
Cuk INDOLA Prevense SKINCARE O·P·I Miracle XPert KURISS

**மாபெரும் ஏல விற்பனை**
100 ற்கும் அதிகமான டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள்

❖ உழவு இயந்திரம் ❖ டிமோ பட்டா
❖ முச்சக்கரவண்டி ❖ மோட்டார் சைக்கில்
❖ இருச்சக்கர உழவு இயந்திரம்
**2015 ஜூன் 16 ம் திகதி**
புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம் வவுனியா
ஜூன் 13,14,15 ஆம் திகதிகளில்
வாகனங்களைப் பார்வையிடலாம்
அழையுங்கள் : 011 511 81 81


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பவளவிழா அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 12
காரைநகர் மணிவாசகர் சபையின் பவளவிழா மலர் அறிமுக விழாவும், கலாநிதி.க.வைத்தீஸ்வரக் குருக்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கொழும்பு விவேகானந்த சபையின் உபதலைவர் க.ஜெகதீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நிதி இராஜங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கலந்து கொள்வார். (ஐ)

# ஒட்டுசுட்டான் பூந்தோட்டத்தில் பொது நோக்கு மண்டபம் திறப்பு

கிளிநொச்சி, ஜூன் 12
ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் பூந்தோட்டம் கிராமத்தில் யூ.என் கபிரட் நிறுவனத்தின் திட்ட நடைமுறையாக்கலில் கட்டப்பட்ட பொதுநோக்கு மண்டபம் நேற்று மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டது.
இந்தப் பொது நோக்கு மண்டபத்தை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச



செயலாளர் இ.குருபரன் நாடாவெட்டி திறந்து வைத்தார்.
மண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு கட்டடத்தை சூழ மரக்கன்றுகளும் நடப்பட்டன. இத்திறப்பு விழாவில் பூந்தோட்டம் கிராம சேவகர், தொண்டு நிறுவனத்தின் அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண் டனர்.
இப்பொது நோக்கு மண்டபத்துக்குள் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் விசமிகளால் கழிவு ஒயில் வீசப்பட்டிருந்த நிலையில் மீண்டும் வர்ணம் பூசப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ற-21)

## சட்டவிரோத மணல் ஏற்றியோருக்கு தண்டம் விதிப்பு

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரம் இன்றி டிராக்ரரில் மணல் ஏற்றிசென்ற இருவருக்கு நேற்று தலா 50 ஆயிரம் வீதம் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி.
கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வெவ்வேறு இடங்களை சேர்ந்த இரு சந்தேக நபர்களுடைய வழக்கு நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நீதிபதி எம்.ஐ வகாப்தீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது.
வழக்கு விசாரணையின் போது குற்றவாளிகள் தாங்களே குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக இருவருக்கும் தலா 50 ஆயி ரம் வீதம் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அத்தோடு கிளிநொச்சி பொலிஸாரால் மன்றில் இரண்டாவதாக முற்படுத்தப்பட்ட குற்றவாளிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததோடு சாரதி அனுமதிப்பத்திரத்தையும் ரத்து செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ற-21)

## இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 12
மக்கள் வங்கியின் 54 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்திய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில், இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெறவுள்ளது. (ஐ)




சிவமயம்

# சிவாச்சார்யாபிஷேக அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ மங்கலகரமான மன்மத வருஷம் வைகாசி மாதம் 31 ஆம் நாள் (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணத் துவிதீயையும் அனுஷ நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் பொருந்திய சுபதினத்தில் காலை 9.10 மணிமுதல் 10.00 மணிக்குள் வரும் கடக லக்ன சுபமுகூர்த்தத்தில் திருகோணமலை இலங்கை சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள் ஸ்ரீமதி அன்னலெட்சுமி அம்மாள் தம்பதியரின் பௌத்திரனும் பிரம்மஸ்ரீ சிவசண்முகானந்தேஸ்வரசர்மா ஸ்ரீமதி பத்மாவதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனுமாகிய

டென்மார்க் ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் ஸ்தாபகரும் குருவுமாகிய

பிரம்மஸ்ரீ **சிவசண்முகானந்த சிவசேகரசர்மா** அவர்களுக்கு

மேற்படி கோயில் மண்டபத்தில் சிவாகம விதிப்பிரகாரம் சமய விசேஷநிர்வாண தீட்சா பூர்வம் சிவாச்சார்ய அபிஷேகம் நடைபெற்று குருப்பட்டம் வழங்கும் வைபவமும் நிகழ அருள்மிகு ஆயர்கடவை ஸ்ரீ சித்திவிநாயகர் (புன்னாலைக்கட்டுவன் இலங்கை) ஸ்ரீ பத்திரகாளி அம்மன் (திருகோணமலை இலங்கை) சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஸ்ரீநாகபூசணி அம்மன் (டென்மார்க் ஒபன்றோ) பெற்றோர்கள் பெரியோர்கள் ஆசியினாலும், இஷ்டதெய்வ - குல தெய்வங்களின் கருணையினாலும், திருவருள் பாலித்திருப்பதனால் நிகழும் வைபவத்தில் அனைவரும் வந்து கலந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

கிரியா நிகழ்வுகள்

12.06.2015 வெள்ளி மாலை 6.00 மணி விநாயகர் வழிபாடு, கணபதிஹோமம், வாஸ்த்துசாந்தி, பூர்வாங்க கிரியைகள், 13.06.2015 மாலை 6.00 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவசேகரசர்மா ஸ்ரீமதி தர்சினி தம்பதிகளுக்கு சமய விசேட தீட்சைகள், பஞ்சகலாசுத்தி - நிர்வாண தீட்சை, சிகாச்சேதம், சயனம். 14.06.2015 ஞாயிறு காலை ஹோமங்கள் பூர்ணாகுதி, 8.30 மணிக்கு தம்பதிகளுக்கு கும்ப தீர்த்தங்கள் அபிஷேகம், சிவசக்தி அலங்கார உபசார பூஜை, குருவழிபாடு குருப்பட்டமளிப்பு விழா முதலியன. ஆசார்யாபிஷேக குரு, "சிவாகம வித்வான்" டாக்டர் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்
"சிவாகம ஆலோசகர்" ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்.

வதிவிடம்: Haderslebej 8.1 sal 6200 Aabenraa
செல்லிடம்: 0452 1454 466 - 0045 2763 9966
0045 3138 2030 priet 27 @ gmail.com
ஆலயமண்டபம்: Stegholt 11, 6200 Aabenraa Denmark

தங்கள் நல்வரவை நாடும்
பிரம்மஸ்ரீ சிவசேகரசர்மா
ஸ்ரீமதி தர்சினி குடும்பத்தினர்
(ஷண்டிகா பவனம்)

(57945)(45.7.3)





# புதுக்கடைத் திறப்புவிழா



நிகழும் மங்களகரமான மன்மத வருடம் வைகாசி மாதம் 29ஆம் நாள் இன்று (12.06.2015) வெள்ளிக்கிழமை காலை 09.02 மணி முதல் 10.08 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபவேளையில்
இல.95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரியில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

# நியூ நிஷானந்தா ஜுவெல்லறி

என்னும் நிறுவனத்தினை இறைவன் திருவருள் துணைகொண்டு ஆரம்பிக்கவிருப்பதால் அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து எமது நிறுவனம் சிறப்புடன் விளங்க ஆசீர்வதித்து, நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள்
நல்வரவை இனிதே விரும்பும்
நிஷானந்தா ஜுவெல்லறி
A.ஆனந்தன்
C.K.நிரோய்

இல. 95, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 321 0487


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் வலிமை வாய்ந்த ரோபோ உருவாக்கம்

ரோபோ வடிவமைப்பில் கைதேர்ந்த ஜப்பான் நிறுவனமான FANUC உலகின் வலிமை வாய்ந்த முதலாவது ரோபோவை உருவாக்கியுள்ளது.

முன்னைய ரோபோக்களை விடவும் கூடிய பாரத்தைத் தூக்கவல்ல இந்த ரோபோ ஒரே நேரத்தில் சுமார் 1.7 தொன் நிறை கொண்ட இரு சிறிய கார்கள் அல்லது 24 மனிதர்களைத் தூக்க வல்லது. இலகுவானது மற்றும் கடுமையான வேலைகளைச் செய்யக்கூடிய வகையில் வடிவமைக் கப்பட்டுள்ள இந்த ரோபோ பொருள்களை 4.7 மீற்றர் உயரத்துக்கு நகர்த்தவல்லது. மேலும் M-2000 2000iA/1700L எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த ரோபோ, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இத்தாலியின் மிலன் நகரில் இடம்பெற



வுள்ள கண்காட்சியில் காட்சிப்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியத் தகவல்களை களவாடும் போலிக் கைப்பேசிகள்

போலியாக தயாரிக்கப்படும் கைப்பேசிகள் அதன் பயநர்களால் மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புக்கள் உட்பட ஏனைய தரவுகளையும் களவாடுவதாக அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இவ்வாறு திருடப்படும் அழைப்புக்கள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் என்பன Stingrays எனும் தொழில்நுட்பம் மூலம் தொலைபேசிக் கோபுரங்களினூடு பரிமாற்றப்படும் சமிக்ஞைகளை பயன்படுத்தி அவதானிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை லண்டன் பொலிஸார் முதன் முறையாக விடுத்துள்ளனர். எனினும் IMSI எனப்படும் (International Mobile Subscriber Odentity) மூலம் இவ்வாறான கைப்பேசிகளை இனம் கண்டு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது..



# Kaspersky Lab நிறுவனத்திற்கும் சோதனை

கணினிகளுக்கு நேரடி வைரஸ்கள் மற்றும் இணைய வைரஸ்களிலிருந்து பாதுகாப்பைத் தரும் படி சிறந்த மென்பொருள்களில் ஒன்றான Kaspersky Anti Virus வடிவமைப்பு நிறுவனமான Kaspersky இலுள்ள தரவுகள் ஹேக்கர்களால் திருடப்பட்டுள்ளன.

ரஷ்யாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த நிறுவனத்திலேயே ஹேக்கர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இந்த நிறுவனம், வைரஸ் தாக்கங்கள் தவிர ஹேக்கர்களிடமிருந்து தனிநபர்களின் சொப்பிங் கார்ட் மற்றும் கிரடிட் கார்ட்களை பாதுகாக்கும் சேவையையும் வழங்கிவந்த நிலையில், இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த நிறுவனத்தின் மீதான மக்களின் நம்பிக்கை எதிர்காலத்தில் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இது தொடர்பாக கருத்து தெரிவித்த Kaspersky நிறுவனத்தின் தலைமை அதிகாரி Eugene Kaspersky மூன்று வகையான புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஹேக்ஹிங் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும், சைபர் பாதுகாப்பை வழங்கும் நிறுவனங்களின் மீதான உளவுத் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



ஆண்டான்குளம் பகுதியில் பொறிவெடியில் சிக்கி எழுந்து நடக்க முடியாத நிலையில் உள்ள பெண் யானை ஒன்றுக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சிகிச்சை வழங்கி வருகின்றனர். எழுந்து நடக்க முடியாத நிலையில் காணப்பட்ட குறித்த யானையை அவதானித்த ஊர் மக்கள் அதுகுறித்து வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கினர். குறித்த யானையின் பின்னங்கால் பொறிவெடியில் சிக்கி காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மூதூர் வைத்தியசாலைக்கு வசதிகள் கோரிய தொடர் மக்கள் போராட்டம் முடிவுக்கு வந்தது

## கிழக்கு மாகாண முதலமைச்சரின் உறுதியை அடுத்து

மூதூர், ஜூன் 12

மூதூர் ஆதார வைத்தியசாலையில், வைத்தியர்கள் மற்றும் இதர அத்தியாவசியத் தேவைகளைச் சரிவரச் செய்து தர வேண்டும் என்று கோரி தொடர்ந்து 10 நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. கிழக்கு மாகாண முதலமைச்சர் வழங்கிய வாக்குறுதியை அடுத்தே போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட், மூதூர் தள வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். அவர் வைத்தியசாலையின் உண்மை நிலவரம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றிப் பார்வையிட்டதுடன், வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடினார். அதன்பின்னர் வைத்தியசாலைக்குத் தேவையாக இருக்கும் வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் பற்றாக்குறை உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் என்று குறிப்பிட்டார். அத்துடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் வைத்தியசாலையில் இருந்தவாறே கிழக்கு மாகாண சபை ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் வைத்திய சாலை சம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரிகளுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற் குறித்த விடயங்களை எடுத்துக் [illegible]



என கேட்டுக்கொண்டார்.

அத்துடன் கடந்த 10 நாள்களாக வைத்தியசாலையில் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த மக்களைச் சந்தித்த முதலமைச்சர், போராட்டத்தை உடனே கைவிடுமாறும் அவர்களது கோரிக்



கைகளை உடனே நிவர்த்தி செய்வதாகவும் தெரிவித்தார். அதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் போராட்டத்தைக் கைவிடுவதற்கு இணங்கினர்.

குறித்த வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை என்ற பெயரில் இருந்தாலும் இந்தவைத்திய சாலையின் அடிப்படை வசதிகள் மிகவும் மோசமான நிலைமையில் இருப்பதை அவதானிக்க முடிந்தது என்று முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலை விடயத்தில் அவசர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி லாஹீர், ஆர்.எம்.அன்வர், தமிழ் தேசியக்கூட்டமைப்பு அரசியல் வாதிகள், ஊர் அரசியல் முக்கியஸ்தர்களும் தன்னைக் கேட்டுக் கொண்டனர் என்றும், அதையடுத்தே தான் நேரில் சென்று வைத்திய சாலைநிலைமைகளைப் பார்வையிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந)

# வட வரணி முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

வரணி, ஜூன் 12

வட வரணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த திங்கட்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி முகாமைத்துவக்குழுத் தலைவர் திருமதி ம.பிரபாசினி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வரணி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் நடராஜா வசந்தரூபன் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக நெல்லியடி வட்டம் லயன்ஸ் கழக தலைவர் பொ.ஸ்ரீபவன் மற்றும் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி சங்கத் தலைவர் ஆ.சாந்தகுமார் ஆகியோரும்– கௌரவ விருந்தினர்களாக பாடசாலை முகாமைத்துவக்குழு உறுப்பினர்களான செ.ஈஸ்வரநாதன் மற்றும் இ.கஜன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நெல்லியடி வட்டம் லயன்ஸ் கழக தலைவர் பொ.ஸ்ரீபவன் முன்பள்ளி சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிக் கௌரவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முறைப்பாடு வாங்க மறுப்பு

## பொலிஸாரைத் தாக்கிய மக்கள்

புதுடில்லி,ஜூன் 12
ஒடிஸா மாநிலத்தில் தமது முறைப்பாட்டை வாங்க மறுத்த பொலிஸாரை, ஒரு பகுதி குடிசை வாழ் மக்கள் தாக்கி சாக்கடையில் புரட்டி எடுத்துள்ளனர்.
ஒடிஸா மாநிலத்தில் லக்ஷ்மிசாகர் பகுதியில் அமைந்துள்ள ஹால்டி படா குடிசைப் பகுதியில் நபரொருவர் பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து ஏமாற்றியுள்ளார். அந்தச் சம்பவம் தொடர்பான முறைப்பாட்டை வழங்குவதற்கு பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற குடும்பத்தின் முறைப்பாட்டை ஏற்க பொலிஸார் மறுத்துள்ளனர்.
அதனால் கடும் கோபம் அடைந்த அந்தப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் பொலிஸாரை அருகிலிருந்த சாக்கடையில் தள்ளிப் புரட்டி எடுத்துள்ளனர். தற்போது அந்தச் சம்பவம் தொடர்பாக 25 பேர் மீது பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தவில்லை

## மியன்மார் அரசு மறுப்பு

புதுடில்லி,ஜூன் 12
எங்கள் நாட்டுக்குள் புகுந்து இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தவில்லை என மியன்மார் அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. முன்னதாக மியன்மார் நாட்டுக்குள் ஒளிந்து கொண்டு வடகிழக்கு மாநிலங்களில் பாதுகாப்பு படையினர் மீது கொடூரத் தாக்குதல்களை நடத்திவரும் தீவிரவாதிகளை, அந்த நாட்டுக்குள் சென்று இந்திய இராணுவத்தின் தலைமைப் படையினர் தாக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஏறத்தாழ 13 மணி நேரம் நடைபெற்ற அந்தத் தாக்குதலில் தீவிரவாதிகளின் இரு முகாம்கள் அழிக்கப்பட்டதுடன், 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில்; மியன்மார் நாட்டு ஜனாதிபதி அலுவலகத்தின் இயக்குநர் ஷாவ் ஹித்தே தனது முகநூல் பக்கத்தில் எங்களது நாட்டு இராணுவம் கொடுத்துள்ள தகவல்படி மியன்மாருக்குள் புகுந்து இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தவில்லை.
இராணுவ நடவடிக்கையானது இந்திய – மியன்மார் எல்லைப் பகுதியின் இந்தியப் பகுதியில் நிகழ்த்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# பத்திரிகையாளர் உயிருடன் எரிப்பு

புதுடில்லி,ஜூன் 12
உத்திரபிரதேசத்தில் அமைச்சரொருவருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த பத்திரிகையாளர் ஒருவர் உயிரோடு எரித்து கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ராமமூர்த்தி வர்மாவுக்கு எதிராக ஷாஜகான் பூரைச் சேர்ந்த ஜெகேந்திரசிங் என்ற பத்திரிகையாளர் தனது முகநூலில் கருத்துத் தெரிவித்திருந்தார்.
மேலும், அவரது கனிமக் கொள்ளை, நில அபகரிப்பு உள்ளிட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக கெஜேந்திரசிங் பத்திரிகைகளிலும், முகநூல்களிலும் எழுதி வந்ததாகக் கூறப்படுகிறது.
அதனால் ஆத்திரமடைந்த அமைச்சர் ராமமூர்த்தி பத்திரிகையாளர் ஜெகேந்திரசிங்கை பொலிஸாரின் உதவியுடன் உயிரோடு எரித்து கொன்றதாக அவரது குடும்பத்தினர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் அந்த சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியங்களும் அதை உறுதிப்படுத்தியுள்ளனர்.
ஆனால் இந்தக் குற்றச்சாட்டை பொலிசார் மறுத்துள்ள நிலையில், இது குறித்து விசாரணை நடத்திய ஷாஜகான்பூர் பொலிஸார், அமைச்சர் ராமமூர்த்தி வர்மா உள்ளிட்ட 6 பேர் மீது தற்போது வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ஐ)

# நேபாளத்தில் 6 கிராமங்களில் நிலச்சரிவு

## 15 பேர் மாயம்



காத்மண்டு, ஜூன் 12
நேபாளத்தில் நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக 6 கிராமங்களில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அதில் 15 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.
அந்த நாட்டின் டப்லேஜங் மாவட்டத்தில் கனமழை பெய்து வந்த நிலையில், அங்குள்ள 6 கிராமங்களில் நேற்று முன்தினம் இரவு திடீரென நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அதன் போது வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த மக்களில் 15 பேர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காணமல் போன அனைவரும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அடத்தியான மலைகள் அடங்கிய பகுதியாக இருப்பதால், அந்தக் கிராமங்களுக்கு மீட்புப் படையினர் செல்லத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டின் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அதனால் காணாமற்போனவர் கள் பற்றிய உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மழைக் காலங்களில் அந்த நாட்டில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுவதும், மக்கள் உயிரிழப்பதும் தொடர்கதையாகி வருவது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கதால் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அந்த இழப்பிலிருந்து மக்கள் இன்னமும் மீண்டெழ முடியாதுள்ள நிலையில், தொடர்ந்தும் அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.
அத்துடன் இடிபாடுகளை அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மோடியைப் புகழ்ந்தார் மன்மோகன்சிங்

புதுடில்லி,ஜூன் 12
இந்தியப் பிரதமர் மோடி தன்னை விடத் திறமையான விற்பனையாளர் என்று முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் கருத்து தெரிவித்துள்ளார்.
காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் மாநாடு நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் கலந்துகொண்டனர்.



அந்த மாநாட்டில் கருத்துத் தெரிவித்த மன்மோகன்சிங், பிரதமர் மோடி தன்னை விட திறமையான விற்பனையாளர், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். கடந்த 10 வருடங்களாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இருந்தபோது தகவல் தொடர்பு, மற்றும் சந்தைப்படுத்து தலைச் சரியாக பயன்படுத்தவில்லை. காங்கிரஸ் அரசின் திட்டங்கள் குறித்த தகவல்கள் முறையாக மக்களிடம் சென்றடையாததே எங்கள் தோல்விக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# தென் கொரியாவில் பாடசாலைகளை திறக்க உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தல்

சியோல், ஜூன் 12
சவூதி அரேபியா நாட்டில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மர்ம நோய் ஒன்று தாக்கியது. அது புதுவகை கிருமியொன்றினால் உருவாகியிருந்தது. அந்த நோய்க்கு மெர்ஸ் என்று பெயரிடப்பட்டது. அந்த நோய் தாக்கியவர்களில் பலர் உயிரிழந்தனர்.
அங்கிருந்து மெர்ஸ் நோய் ஏனைய நாடுகளுக்கும் பரவியது. உலகம் முழுவதும் இதுவரை ஆயிரத்து 167 பேரை மெர்ஸ் நோய் தாக்கி உள்ளது. அதில் 479 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. நோய் எதிர்ப்புச் சக்தி மருந்தைக் கொடுத்தே நோயைக் குணப்படுத்துகிறார்கள்.
தற்போது தென்கொரியாவில் மெர்ஸ் நோய் பரவியுள்ளது. அதில் இது வரை 6 பேர் உயிரிழந்துள்ளனர். 108 பேரை அந்த நோய் தாக்கியுள்ளது. அதனால் நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்த நிலையில் வேக மாக பரவும் வைரஸைக் கட்டுப்படுத்தும் விதமாகவும் நோய் பரவு வதைத் தடுக்கும் பொருட்டும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால் அந்த வைரஸ் பாடசாலை மாணவர்கள் ஊடாகப் பரவுவதற் கான வாய்ப்பு மிக குறைவாக இருப்பதால் பாடசாலைகளை மீண்டும் திறக்க உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ஐ)



# ஜெயலலிதாவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனு

சென்னை,ஜூன் 12
சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அடுத்த வாரம் மேல் முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்படும் என்று கர்நாடக அரசு தெரிவித்துள்ளது.
கர்நாடக உயர் நீதிமன்றம் கடந்த மே 11 ஆம் திகதி ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில் நால்வரையும் விடுவித்து தீர்ப்பளித்தது.
அந்தத் தீர்ப்பையடுத்து வெளியான சர்ச்சையை அடுத்து, கர்நாடக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் என அரச வழக்கறிஞர் ஆச்சார்யா, அரச தலைமை வழக்கறிஞர் ரவிவர்ம குமார் ஆகியோர் பரிந்துரை செய்தனர். அதன் பின்னர் கடந்த [illegible] திகதி கர்நாடக முதல்வர் சித்த[illegible] பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்



ஜெயலலிதாவின் விடுதலைக்கு எதிராக மேல் முறையீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.
கர்நாடக சட்டத்துறை அமைச்சர் டி.பி.ஜெயச்சந்திரா இது தொடர்பாக தெரிவிக்கும் போது, ஜெயலலிதா வழக்கில் மேல்முறையீடு செய்வதற்கான ஆவணங்களை கர்நாடக அரசு தயாரித்து வருகிறது. அதற்கான பணிகளை அரச வழக்கறிஞர் ஆச்சார்யா மேற்கொண்டு வருகிறார்.
ஆவணங்கள் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்த பின்னர், அடுத்த வாரத்தில் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி புடின் இறந்துவிட்டார்

### முன்னாள் மனைவியின் அதிர்ச்சித் தகவல்



மொஸ்கோ, ஜூன் 12

ரஷ்யாவின் ஜனாதிபதியான புடின் பல வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்று அவரது முன்னாள் மனைவி அதிர்ச்சித் தகவலொன்றைத் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடினின் முன்னாள் மனைவி லியிட்மிலா. புடின், லியிட் மிலாவை கடந்த 1983 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். அந்தத் தம்பதியினருக்கு மரியா மற்றும் யேக்டரினா என 2 பிள்ளைகள் உள்ளனர். கருத்து வேறுபாடு காரணமாக புடின் மனைவியை 2014 ஆம் ஆண்டு விவாகரத்துச் செய்தார்.

கடந்த சில காலங்களாக விளாடிமிர் புடினின் செயல்கள் மிக அதிகமாக விமர்சிக்கபட்டு வருகின்றன. மேலும் விளாடிமிர் புடினைச் சுற்றி ஒரு மர்மம் சுழன்று கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டுவருகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி புடினின் முன்னாள் மனைவி லியிட்மிலா ஜேர்மன் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், உண்மையான புடின் இறந்து நீண்ட நாள்களாகி விட்டதாகவும், தற்போது அவருக்குப் பதிலாக அவரைப் போன்ற தோற்றமுடைய வேறு ஒருவர் அவர் இடத்தில் உள்ள தாகவும் அதிர்ச்சித் தகவலொன்றைத் தெரிவித்துள்ளார்.

எனது கணவர் புடின் , துரதிர்ஷ்டவசமாக, நீண்ட காலத்துக்கு முன்னரே இறந்து விட்டார். நான் அதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவரது சார்பில் நடந்து கொண்டிருக்கும் செயல்களை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அது மக்களுக்குப் பயங்கரமாகத்தான் இருக்கும்.

புடினைக் கொன்ற மாதிரி என்னையும் எனது மகள்மாரையும் கொலை செய்து விடுவார்களோ என்று நான் தற்போது பயப்படுகிறேன்.

எனக்கும் புடினுக்கும் திருமணம் நடைபெற்றபோது எனக்கு உளவுத்துறை அதிகாரிகள் மீது பாசம் இருந்தது. ஆனால் திருமணத்துக்குப் பின்னர் நடந்தது வேறு விதமாக இருந்தது. புடின் கீழ்த்தரமானவர். கொடுமையான மனிதர். கொடுங்கோலன், அவர் எனக்கு மதிப்பு அளித்ததே இல்லை. என்னைப் பெயரளவுக்கு மட்டுமே மனைவியாக நடத்தினார். நான் நீண்ட நாள்களாக கொடுமைப் படுத்தப்பட்டேன்.

இந்த நிலையில் ஒரு நாள் நான் எனது மகள்மாருடன் வீடு திரும்பிய போது அங்கே எங்களுக்குத் தெரிந்த மற்றும் தெரியாத சிலர் இருந்தனர். மேலும் வீடு தாக்கப்பட்டிருந்தது. அவர்கள் என்னிடம் வந்து நீ உயிருடன் இருக்க வேண்டும் என்றால், இதைப்பற்றி வெளியே கூறக்கூடாது என்று மிரட்டினர்.

புடினின் இறப்பு முன்னரே திட்டமிடப்பட்ட ஒன்று. மேலும் தற்போது ஆட்சியில் இருப்பது அவரைப் போலவே தோற்றமுடைய ஒருவர். நல்லவேளையாக நான் விவாகரத்துப் பெற்று அவர்களிடமிருந்து தப்பித்து தற்போது வெளிநாட்டில் வசிக்கிறேன். ஆனால் ரஷ்யாவில் தற்போது நடக்கும் விடயங்கள் எனக்குப் பயத்தைத் தருகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஈராக்குக்கு அமெரிக்க வீரர்களை அனுப்புவதற்கு ஒபாமா முடிவு



வொஷிங்டன், ஜூன் 12

ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளை கைப்பற்றி வைத்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை முறியடிக்க அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டு வரும் ஈராக் இராணுவத்துக்கு போதிய பயிற்சி மற்றும் உதவிகள் செய்வதற்கு மூவாயிரத்து 100 அமெரிக்க வீரர்கள் ஈராக்கில் தங்கியுள்ளனர்.

அமெரிக்கா தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வந்தபோதிலும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் முன்னேற்றத்தை அதனால் தடுக்க முடியவில்லை. ஈராக் தலைநகர் பாக்தாத்தை ஒட்டியுள்ள பகுதிகளிலேயே ஐ.எஸ். தீவிரவாதிகள் புகுந்துவிட்டனர். எனவே பாக்தாத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அதனால் மேலும் கூடுதல் உதவி செய்யும்படி ஈராக் அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டது. ஜேர் மனில் நடந்த பொருளாதார மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஒபாமா கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் ஈராக் பிரதமர் ஹைதர் அலி அபாதியும் கலந்து கொண் டார். அதன் போது இருவரும் சந் தித்துப் பேசியுள்ளனர். ஹைதர்அலி அபாதி, ஒபாமாவிடம் மேலும் தேவையான இராணுவ உதவிகளைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அதையடுத்து மேலும் 400 வீரர்களை அனுப்புவதற்கு ஒபாமா சம்மதம் தெரிவித்துள்ளார்.

அந்தத் தகவலை அமெரிக்க அரச அறிவிப்பாளர் வெளியிட்டுள்ளார். ஈராக்கில் அமெரிக்கா 4 பயிற்சி முகாம்களை நடத்தி வருகிறது. புதிய வீரர்கள் அனுப்பப்படுவதை அடுத்து பயிற்சி முகாம் 5 ஆக உயர்த்தப்படுகிறது. அதில் ஈராக் இராணுவத்தில் புதிதாக சேரும் படை வீரர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே லெபனான் நாட்டில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போரிடப்போவதாக அறிவித்துள்ளனர். ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் ஷியா முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்கள். இந்தச் சமூகத்தினரைக் குறிவைத்தே ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்கி வருகிறார்கள். அதற்குப் பதிலடியாக ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் அவர்களுக்கு எதிராக போரிட முடிவு செய்துள்ளனர். (ஐ)



# பாகிஸ்தானில் இளங்குற்றவாளிக்கு தூக்கு; மனித உரிமை அமைப்புகள் கண்டனம்

பாகிஸ்தானைச் சேர்ந்த அப்தாப் பகதூர் மாஸி என்பவர் லாகூரில் நடந்த கொலை வழக்கொன்று தொடர்பாக தனது 15 வயதில் 1992 ஆம் ஆண்டு கைது செய்யப் பட்டார். அதன் போது இளங்குற்றவாளியான அவருக்கு விசாரணை நீதிமன்றம் சாவுத்தண்டனை விதித்தது. அவர்,லாகூர்சிறையில்23வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் 2008 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்த சாவுத் தண்டனைத் தடையை நவாஸ் ஷெரீப் அரசு விலக்கிக் கொண்டது. அதனைத் தொடர்ந்து அங்கு இது வரை 130 இற்கும் மேற்பட்ட சாவுத்தண்டனைக்கைதிகள் தூக்கில் போடப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அப்தார் பக்தூர் மாஸி நேற்று முன்தினம் அதிகாலையில் தூக்கில் போடப்பட்டார். ஏற்கனவே மற்றொரு சாவுத் தண்டனைக் கைதியான ஷாப்கத் உசேன் என்பவரது தண்டனை, நேற்று முன்தினம் நிறைவேற்றப்படவிருந்த நிலையில் 4 ஆவது முறையாக நிறுத்தி வைக்கப்பட்டது. குற்றம் நடந்தபோது அவர் இளஞ்சிறார் என்றும், பொலிஸ் சித்திரவதையால் குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்றும் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அப்தாப் பகதூர் மாஸியை மட்டும் பாகிஸ்தான் அரசு தூக்கில் போட்டிருப்பது பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் கண்டனத்துக்கு வழிவகுத்துள்ளது. (ஐ)

# மலேசியா நில நடுக்கத்துக்கு நிர்வாணப் புகைப்படமே காரணம்

### இங்கிலாந்துப் பெண் கைது

கோலாலம்பூர், ஜூன் 12

மலேசியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்துக்கு இங்கிலாந்து பெண்ணின் நிர்வாணப் புகைப்படம் தான் காரணம் எனக் கூறி அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளமை கடும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகப்



பட்டதாரியான எலினார் ஹாக்கின்ஸ் என்பவர் கடந்த ஜனவரி மாதம் முதல் தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், வியட் நாம் ஆகிய நாடுகளுக்கு தனியா கப் பயணம் செய்து வருகிறார். இனிமையான அந்தப் பயணத்தில் ஒரு பகுதியாக கடந்த மாதம் மலே சியாவில் உள்ள மிக உயரமான கிணபாழு சிகரத்துக்குச் சென்றுள்ளார். அங்கு மலை உச்சியை அடைந்ததும் தன்னுடன் வந்த குழுவினருடன் சேர்ந்து உடைகளைக் களைந்து விட்டு நிர்வாணமாகப் புகைப்படம் எடுத்துள்ளார்.

ஆனால் தற்போது அதுவே அவருக்குப் பெரிய பிரச்சனையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வாரம் கிணபாழு சிகரத்தில் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. அதில் பலர் உயிரிழந்தனர். அந்த நில நடுக்கத்துக்கு இங்கிலாந்துப் பெண் நிர்வாணமாகப் புகைப்படம் எடுத்தமையே காரணம் எனப் பொலிஸார் முறைப்பாடு வழங்கியதை அடுத்து அவர் தற்போது கைது செய்யப் பட்டுள்ளார். அவருடன் இன்னும் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# மரத்தை சுற்றி கட்டப்பட்டுள்ள அலுவலகம்



லண்டன்,ஜூன் 12

பிரிட்டனில் இயற்கையை ரசிக்கும் வகையில் மரத்தைச் சுற்றி வித்தியாசமான முறையில் கட்டப்பட்டுள்ள அலுவலகம் ஒன்று அனைவரையும் ஆச்சரியப் பட வைத்துள்ளது.

பிரிட்டனின் புகழ் பெற்ற கட்டக்கலை நிறுவனமான டேடி ஹார்மெர் எல்எல்பி வித்தியாசமான அலுவலகம் ஒன்றைக் கட்ட முடிவு செய்தது. அதன்படி பிரிட்டனின் கிழக்கு லண்டன் பகுதியில் உள்ள ஷோரேடிச் என்ற நகரில் மரத்தை சுற்றி அலுவலகம் ஒன்றைக் கட்டியுள்ளது.

மரக்கட்டைகள் மற்றும் காகித அட்டைகளால் கட்டப்பட்டுள்ள அந்த அலுவலகத்தில் வெளிப்புறம் முழுவதும் கண்ணாடி போன்ற பிளாஸ்டிக் மற்றும் வெளிப்படையான பொலிகார்பனேட் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது.

வாடகை ஈட்டும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள அந்த அலுவலகத்தில் வைபை, மின்சாரம் போன்ற வசதிகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையே இந்த அலுவலகம் திறந்திருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்நலத்துக்கு பகை புகையிலை

● பொ.பா.சிவயோகம்
விரிவுரையாளர், தாதியக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

உலகளாவிய புகையிலை பாவனையானது அதிகரித்துச்செல்கின்றது. இலங்கையிலும் அதன் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிலும் கல்வி, பண்பாடு, கலை, கலாசாரம், விருந்தோம்பல் என்பவற்றில் புகழ்பெற்ற யாழ்ப்பாணத்தில் இன்று மது, புகைபிடித்தல், போதைப்பொருள் பாவனை என்பன அதிகரித்துச் செல்கின்றன. குறிப்பாக பதின்ம வயதினர் இதில் அதிகம் ஆர்வம் காட்டுவதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பதின்ம வயதினரின் இந்தப் பழக்கமானது எதிர்காலத்தில் கல்வியில் பின்னடைவையும், சமூக முன்னேற்றத்தில் பின்னடைவையும், கலாசார பண்பாட்டில் கணிசமான தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவது உறுதி. எனவே இவற்றைக் கட்டுப்படுத்த மதகுருமார், சமூக ஆர்வலர்கள் நலன் விரும்பிகள், பொலிஸார் மற்றும் சட்டத்துறை யினர் அக்கறை செலுத்தவேண்டும். அத்துடன் பெற்றோரும், ஆசிரியர்களும் அதிகளவு கவனம் செலுத்தி தமது பிள்ளைகளை அவதானிக்கவேண்டும். இது மட்டுமன்றி இவற்றால் ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் சமூகப்பிரச்சினைகளை மாணவர்கள் இளைஞர் யுவதிகளுக்கு விளக்கிக் கூறி அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

புகையிலைப் பாவனையானது இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

1. புகைத்தல்
2. புகைக்காத பாவனை


புகைத்தலை எடுத்துக்கொண்டால், சுருட்டு, சிகரட், பீடி, போன்றனவும் புகைக்காத பாவனையில் புகையிலையை வாய்க்குள் ஊறவிடல், மூக்குப்பொடி, வெற்றிலையுடன் மெல்லுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். புகையிலை பாவிக்கும்போது (அது எந்த வகையிலாக இருந்தாலும்) புகையிலையிலுள்ள நிக்கோடின் எனும் இரசாயன பதார்த்தம் குருதியுடன் சேர்ந்து உடலிலுள்ள ஓமோன்களைத்தூண்டுகின்றது. இதனைப் பயன்படுத்துபவர்கள் இதன் விளைவாக ஒரு தற்காலிக உடலியல் மாற்றத்தை இதனைப் பயன்படுத்துபவர்கள் உணர்கின்றனர். தொடர்ச்சியான பாவனையின்போது இந்த இரசாயனப் பொருளுக்கு உடலானது அடிமையாகிறது. அதாவது இவர்களால் புகையிலையை பாவிக்காது இருக்கமுடியாது. புகையிலை பாவிக்க வேண்டும் என்ற அவா, ஆவல் ஏற்படுவதால் தவிக்கின்றனர்.

**ஏன் புகையிலைப் பாவனையை நிறுத்த முடியாது?**

புகையிலைப்பாவனையை ஏன் நிறுத்தமுடியாது என்றால் நிக்கோடின் எனும் இரசாயனப் பதார்த்தத்துக்கு உடல் பழக்கப்பட்டு இருப்பதால் புகைக்க வேண்டும் என்ற ஆவல், அடங்காத ஆசை, பதற்றம், பரபரப்பு, அமைதி யின்மை என்பன காணப் படுவதுடன் புகையிலைப்பாவனையை விடும் போது அல்லது நிறுத்தும்போது உடல் நிக் கோடினை வேண்டிநிற்கும் நிலை தோன்றும். அதற்கான அறிகுறியாக தலையிடி, மன அழுத்தம், மனதை ஒருநிலைப்படுத்தி வேலைகளைச் செய்யமுடியாதிருக்கும்நிலை, பசி அதிகரித்தல் மற்றும் பரபரப்புத்தன்மை போன்றவை தோன்றும். இதனால் இவர்கள் புகையிலையை நாடுவர். வைத்திய ஆலோசனைப்படி வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதன்மூலமும் இவர்களின் புலனை வேறு ஆரோக்கியமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலமும் இந்தப் பழக்கத்தை நிறுத்திக் கொள்ளலாம்.

தமது பணவிருத்திக்காக புகையிலையைப் பயிரிடும் உற்பத்தியாளர்கள் சமூக நலனைக் கருத்தில் கொண்டு மாற்றுப்பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் எமது சமூகத்தில் புகையிலையை இலகுவாக நுகரக் கூடிய நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம். அத்துடன் கல்வி,விவசாயம் சுகாதாரம், சமூகசேவைத் திணைக்களம் மற்றும் சட்டத்துறையினர் இணைந்த ஓர் கண்காணிப்புக்குழுவை உருவாக்குவதனூடாக சட்டவிரோத உற்பத்தியாளர்களை இனங்காணலாம்.

புகைக்கும்போது அப்பொருள் பாவனையாளரை மட்டுமன்றி அவரைச் சுற்றியுள்ளோரையும் பாதிக்கின்றது. இலங்கையில் புகையிலை பாவனையால் தினமும் 20 பேர் இறக்கின்றனர் 600 பேர் வரை சிகிச்சைக்காக வைத்தியசாலை விடுதிகளில் சேர்க்கப் படுவதாக இலங்கை சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி தொற்றா நோய்களான அதிக குருதியமுக்கம், பக்கவாதம், நுரையீரல் புற்று நோய், வாய் புற்றுநோய், தொண்டை மற்றும் சுவாசக் குழாய் புற்றுநோய், இதய மற்றும் குருதிக்குழாய் தொடர்பான நோய்கள், சலரோகம், பார்வைக் கோளாறு, மலட்டுத் தன்மை, பாலியல் பலவீனம், பெண்கள் கருத் தரிப்பதில் சிக்கல். சுவை மணம் போன்ற உணர்வுகள் பலவீனமடைதல், கரப்பகால சிக்கல்கள் மற்றும் பிறந்த குழந்தை களில் சிக்கல்கள், சுவாசத் தொற்றுக்கள், பல் முரசு தொடர்பான நோய்கள், வயோதிபத் தோற்றம், என்பவற்றுடன் புகை பிடிக்காத வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளும் மேற் கூறிய நோய்களுக்கு ஆளாகும் நிலை காணப்படுகின்றது. புகையிலை பாவனையானது மாபெரும் சுகாதாரப் பிரச்சினையாக உலகெங்கும் காணப் படுகின்றது. இலங்கையிலும் இது கணிசமான செல்வாக்குச் செலுத்து கின்றது.



சிகரட் பிரியர்களே உங்களுக்குத் தெரியுமா சிகரட்டில் 4000



வகையான இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை புற்றுநோயை உருவாக்கக் கூடியவை.

இவ்வாறு கெடுதல் மிக்க சிகரட்டை சிறுவர் முதல் முதியோர் வரை புகைக்கின்றனர். காரணம் என்னவென வினவினால் பதில் இல்லை. சினிமாவில் இவற்றால் ஏற்படக் கூடிய விளைவுகளை தெளிவாக காட்டவே எதிர் மறையான வகிபாகங்கள் காட்சிப் படுத்தப்படுகின்றன. ஆனால் எம்மவரோ அவற்றைப் பற்றிக்கொண்டு துன்புறுகின்றனர் என்பதே உண்மையாகும். இதில் சோகம் என்னவென்றால் புகைபிடிப்பவரிலும் பார்க்க புகைப்பவருக்குப் அருகில் இருப்பவருக்கே அதிக பாதிப்பு ஏற்படுகின்றது. [illegible] புகைப் பவர் [illegible]

ஆனால் அப்பாவிகளான புகைபிடிக்காத அவர்களுக்கு அருகில் நிற்போர் வடிகட்டி இன்றி நேரடியாக புகையைச் சுவாசிப்பதால் அதிகபாதிப்பை அடைகின்றனர். உதாரணமாக வீட்டில் ஒருவர் புகைக்கும் போது அவரது தாய், தந்தை மனைவி, குழந்தைகள், மனைவி கருவுற்றிருப்பின் கருவிலுள்ள சிசு உட்பட அனைவரும் பாதிக்கப்படுகின்ற னர். இதைத் தடுப்பதற்காக உணவகங்கள், கோயில்கள் பாடசாலைகள், வைத்தியசாலைகள், போக்குவரத்து சாதனங்கள், பொது இடங்கள் போன்ற ஆள் நடமாட்டம்கூடிய இடங்களில் புகைபிடிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் இது தண்டனைக்குரிய ஒரு குற்றமுமாகும். இருப்பினும் புகைபிடிப் போரினதும் புகையிலை பாவனையாளரதும் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதானது மிகவும் வேதனையான விடயமாகும்.

நோய்வாய்ப்படுவதுடன் இதற்காக தினமும் பெரும்தொகைப் பணம் செலவு செய்யப் படுகின்றது. இந்தப் பணத்துக்கு குடும்பத்துடன் சுற்றுலா செல்லலாம் அதன் மூலம் முழுக் குடும்பமும் சந்தோஷத்தை அனுபவிக்க முடியும். அதை விடுத்து இவ்வளவு பெருந் தொகைப் பணத்தைச் செலவுசெய்து நோயைப் பெற்று தானும் வேதனையை அனுபவித்து, குடும்பத்தினரையும் வேதனைப்படுத்தி குடும்பத்தின நிம்மதியையும் கெடுத்து பணத்தையும் விரயமாக்குவதுடன் வைத்தியசாலைகளில் இவர்களுக்கு அரசும் பெருந்தொகைப் பணத்தைச் சிகிச்சையளிப்பதற்காகச் செலவு செய்ய நேரிடுகின்றது. [illegible] மக்களுக்கு புகையிலைப்

> “ தமது பணவிருத்திக்காக புகையிலையைப் பயிரிடும் உற்பத்தியாளர்கள் சமூக நலனைக் கருத்தில்கொண்டு மாற்றுப் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் எமது சமூகத்தில் புகையிலையை இலகுவாக நுகரக் கூடிய நிலையைத் தவிர்த்துக் கொள்ள லாம்.

பாவனையின் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி புகையிலைப் பாவனையற்ற உலகை தோற்றுவிக்க உலக சுகாதார நிறுவனம் 1988 ஆம் ஆண்டு புகையிலை ஒழிப்பு தினத்தை அறிமுகப் படுத்த சித்திரை 7ஐ முன்மொழிந்தது. பின்னர் உலக சுகாதார நிறுவன மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 31 ஆம் நாளை உலக புகையிலை ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தி பரிந்துரைத்தது. அதன்படி 1989ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 31 ஆம் நாளை உலக புகையிலை ஒழிப்பு தினமாக அனுஷ்டிக்கப் படுகின்றது. 1990 ஆம் ஆண்டுமுதல் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு கருப் பொருளை தொனிப்பொருளாக பிரகடனப்படுத்தி அந்தத் தொனிப் பொருளை [illegible] முயற்சிகளை முன்[illegible]கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மை ரயர்.... மை பயர்.... மை றோட்

கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனில் வெளியாகியிருந்த ரயர் எரித்துச் சேதமுற்ற காப்பெற் வீதிகளின் சீரமைப்பு சிரமமானது. மழை நீர் உட்புகுமாயின் விரைவில் பழுதடைந்துவிடும்" என்ற செய்தியை வாசித்த சமூக நலன்விரும்பிகள் பெரிதும் மனம் வருந்தியிருப்பர். ஏனெனில் அதில் தெரிவிக்கப்பட்டதுபோல் ரயர் போட்டு எரித்த இடங்கள் வட்டவடிமாக பள்ளமாகியுள்ளன. இந்த இடங்களில் மழைநீர் உட்புகுந்து, தேங்கி நிற்பது தவிர்க்க முடியாதது. இவ்வாறான நிலையில் குறித்த வீதியைப் பயன்படுத்தும் வாகனங்கள் மழைநீர் நிரவியிருக்கும் பள்ளங்களில் இறங்கி ஏறும் போது வீதி மேலும் குழிவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஏற்கனவே, காப்பெற் வீதியின் சில இடங்கள் ரயர் எரிக்காமலே பல்லை இளிக்க ஆரம்பித்திருக்கின்றன. கன்னாதிட்டிச் சந்தி, சத்திரச் சந்தி ஆகியன உதாரணங்களாகும். வின்சர் சந்தியில் இப்படி ஏற்பட்டு ரியூப்களுக்கு "வல்க்னைஸ்" செய்வதுபோல், வீதி மட்டத்தை மேவி நிரவியிருக்கிறார்கள். இந்த நிலையில் ரயர் எரித்த காப்பெற் வீதிக் குழிகளுக்கு வல்க்னைஸ் செய்வது இலகுவானதல்ல. அப்படிச் செய்தால், செய்யும் போது, கண்டு கொள்ள வேண்டியதுதான்.

ஓட்டுமடம் சந்தியிலிருந்து மானிப்பாய் வீதி வழியாக கோம்பயன் மணல் சந்தி வரை வாகனங்களில் பயணம் செய்வோருக்கு காப்பெற் வீதிக்கும் சாதாரண தார் (பழைய) வீதிக்கும் வித்தியாசம் ஒரு நொடியிலே புரிந்துவிடும்.

இரும்பு உருக்குத் தகடுகளால் அமைக்கப்பட்ட பாலங்களின் மீது வாகனங்களை நிதானித்த வேகத்தில் செலுத்தவேண்டும் என்பதை புரிந்திராத எம்மவர்களுக்கு - உருக்குத் தகடுகளுக்கும் ரயர்களுக்கும் இடையே பிடிப்பு தளர்வாகவே இருக்கும் என்பதை தெரிந்திராத எம்மவர்களுக்கு - ரயர்களுக்கு ஏன் பூக்கள் வெட்டப்படுகின்றன, ஏன் பூ தேய்ந்த ரயர்களுக்கு "றீபிள்" செய்யப்படுகின்றன என்பதை அறிந்திராத எம்மவர்களுக்கு ரயர்களை எரியூட்டுவதால் காப்பெற் வீதியில் உருவாகும் பள்ளங்கள் பற்றி, ஏற்படப்போகும் பாதிப்புகள் பற்றி சிந்திக்க வராதுதான்.

மை கார்...... மை பெற்றோல்........ மை ரயர்..... மை பிறிஜ் என்பவர்களும்; மைறோட்......... மை ரயர்..... மை பயர் என்பவர்களும் ஒரு வகையில் ஒன்றுவிட்ட சகோதரர்கள் போல்தான்.

**தவ. நாராயணன்.**
***ஓட்டுமடம்***

# வீதி விளக்குகள் ஒளிரட்டும்

மல்லாகம் சந்தியிலிருந்து குப்பிளான் செல்லும் வீதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் சில இடங்களில் ஒளிராத நிலையில் காணப்படுவதால் இரவு வேளையில் இந்த வீதியூடாகப் பயணிப்பவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக மாலை வேளைகளில் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்றுவிட்டு வீடு திரும்பும் மாணவர்கள், தூர இடங்களில் பணி புரிந்துவிட்டுத் திரும்பி வருபவர்கள் மற்றும் தமது அத்தியாவசிய தேவை களை நிறைவேற்றும் பொருட்டு வெளியில் சென்றுவிட்டு வருபவர்கள் எனப் பலரும் வீதி வெளிச்சம் இல்லாது இருளில் மூழ்கிக்கிடப்பதால் அதிக சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக இருட்டிய பின்னர் இந்த வீதியில் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. பகல் வேளைகளிலேயே பெண் பிள்ளைகளைக் கடத்திச் செல்கின்ற பாதகர்கள் இரவுவேளைகளில் என்ன செய்வார்கள் என்பதைக் கூற முடியாத நிலைதான் உள்ளது.

இந்த வீதியில் உள்ள ரயில் கடவையின் நிலை தொடர்பாக அண்மையில் வாசகர் ஒருவர் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார். அது வெளியானதும் அடுத்த நாளே அந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது. இதற்கு மக்கள் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளனர்.


தினமும் இரவு வேளைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் இந்த வீதியில் பயணிக்கின்றனர். இவர்களில் கணிசமான அளவினர் பெண்களாவர். ஆகவே இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு, உரிய அதிகாரிகளையே சார்ந்ததாகும்.

எனவே இனியும் தாமதிக்காது மல்லாகத்திலிருந்து குப்பிளான் செல்லும் வீதியில் உள்ள அனைத்து வீதி விளக்குகளையும் ஒளிரச் செய்யுமாறு உரிய அதிகாரிகளைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.




இந்த நிலையில் எரியாத வீதி விளக்குகள் தொடர்பாகவும் உரியவர்கள் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

**சி.நடராஜா**
***மல்லாகம்.***




# போர்க்குற்றவாளிகள் தப்பிவிடக்கூடும்?

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்து ஆறு மாத காலத்துக்குப் பிற்போடப்பட்ட இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள 30ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. செப்ரெம்பர் கூட்டத் தொடருக்கு இன்னமும் மூன்று மாதங்கள் உள்ள நிலையில், 29ஆவது கூட்டத் தொடர் நாளை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்காகக் குரல் கொடுத்துவரும் அமெரிக்கப் பல்கலைக்கழக பேராசிரியர் பிரான்ஸிஸ் பொய்ல் வெளியிட்டுள்ள கருத்து பலரையும் சிந்திக்கவைப்பதாக உள்ளது. செப்ரெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை தடம்புரளுகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளதாக பேராசி ரியர் பொய்ல் எச்சரித்துள்ளார். அறிக்கை தடம்புரளுமானால் போர்க்குற்றவாளிகள் தப்பிவிடக்கூடும். இலங்கையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்த சமீப நாள்களாக மைத்திரி தலைமையிலான புதிய அரசு மேற்கொண்ட முயற்சிகள் அத்தனையும் பயனற்ற தாகிவிடும். கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 28ஆவது கூட்டத் தொடரில் ஐ.நா. விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப் படவிருந்தது. அறிக்கையில் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர் பான கடுமையான குற்றச்சாட்டுகள் இடம் பெற் றுள்ளன என்று எதிர்வுகூறப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றம் காரணமாகவும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய ஆட்சியாளர்களுக்கு அவகாசம் கொடுப்பதற்காகவும் மார்ச் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. ஐ.நா. விசாரணைக்கு மூல காரணமாகவிருந்த அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள் இலங்கையில் புதிய ஆட்சியாளர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியதால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அந்த நாடுகளின் கோரிக்கைக்கு இணங்கவேண்டிய தாயிற்று. மேலும் காலஅவகாசம் வழங்கப்படமாட்டாது என்றும் அறிக்கையின் கனதியில் மாற்றம் இருக்காது என்றும் ஆணையாளர் உறுதிமொழி வழங்கியிருந்தார்.

ஆகவே விசாரணை அறிக்கை இனியும் பிற்போடப்படமாட்டாது. அது நிச்சயமாக வெளிவரத் தான் போகிறது. அறிக்கை சமர்ப்பிப்பது பிற்போடப்பட்ட சமயம், சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக் வலயப்பணிப்பாளர் ரிச்சர்ட் பேனாட் கருத்துத் தெரிவிக்கையில், குற்றவாளிகள் தப்பிவிட இந்தக் காலஅவகாசம் வழிவகுக்கும் என்று எச்சரித்திருந்தார். இலங்கை அரசானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் கொண்டுவந்தால் மாத்திரம் அறிக்கை பிற்போடப்பட்டமை நியாயமுள்ளதாக அமையும் எனவும் தெரிவித்திருந்தார். இவரது அச்சங்களையும் சந்தேகங்களையும் உறுதிப்படுத்தும் பாணியில் அமெரிக்கப் பேராசிரியர் பொய்லின் கருத்து உள்ளது. அமெரிக்கப் பேராசிரியர் பொய்ல் 1993ஆம் ஆண்டு சர்வதேச நீதிமன்றத்தில் பொஸ்னிய மக்களுக்காக வாதிட்டவர். நாடு கடந்த தமிழீழ அரசின் மதியுரைக்குழு பிரதிநிதியாகவும் கடமையாற்றுகிறார். இலங்கையை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு கோரி நாடு கடந்த தமிழீழ அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் 10 இலட்சம் கையெழுத்துப் போராட்டத்தில் தன்னையும் ஒரு பங்காளராக இணைத்துக் கொண்டார்.

செப்ரெம்பரில் வெளிவரவுள்ள ஐ.நா. அறிக்கை குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள பேராசிரியர் பொய்ல், கடந்த காலங்களில் போலியான உள்ளக விசாரணைகளும் அனைத்துலகமும் சம்பந்தப்பட்ட நாடும் இணைந்ததான அரசியல் சாயம் பூசப்பட்ட கலப்பு விசாரணைகளும் பல்வேறு இடங்களில் நடந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கையைப் பாதிக்கப்பட்டோர் அதிக அளவில் எதிர்பார்த்திருந்த நிலையில் அறிக்கை பிற்போடப் பட்டு அவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்தது. தற்பொழுது அறிக்கை வெளிவர இன் னும் மூன்று மாத காலம் உள்ள நிலையில் பேரா சிரியர் பொய்ல் தெரிவித்துள்ள கருத்து பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக உள்ளது. இலங்கையில் போர்க் குற்ற மிழைத்தோர் தண்டிக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். இதில் ஐ.நா. தவறுமானால் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது போகலாம். இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாகவும் பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அத்தனை முயற்சிகளும் பயனற்றுப் போகலாம்.

ஆகவே ஐ.நா. விசாரணை அறிக்கை தடம்புரளாது பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாக்காளர்களை அமுக்கி அழுத்தும் வெறித்தனமா?

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டத்தை, அதன் இப்போதைய வடிவத்தில் ஆதரிப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிவு செய்துள்ளனர். அது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களினதும் விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒன்றெனக் கொள்ளலாம்.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்சொன்ன அரசமைப்புக்கான இருபதாவது திருத்தச்சட்ட மூலம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்துவிடும் -- குறைக்கப்படும் -- என்பது மிகத் துலக்கமாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இதனை, இப்போதைய அரசின் இனவாதம் சார்ந்த திணிப்பாகவே கருதவேண்டும்; கருதலாம். ஆகையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, தீர்மானம் வரவேற்கத் தக்கதாகும். சிறுபான்மை இன மக்களுக்குப் பாதிப்பு உண்டாக்காத அரசமைப்பே, தமிழ் மக்களினது தேவை.

சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை, நலன்களை எப்போதும் சிவந்த கண்களால் பார்க்கும் ஜாதிக ஹெல உறுமய என்ற அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலிய ரத்ன தேரர், இந்தத் திருத்தத்தின் மூலம் சிறுபான்மையினரின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை வெட்டிக் குறைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது -- என்று கடிந்துள்ளார், கடும் தொனியில் குரல் கொடுத்துள்ளார்.

புதிய தேர்தல் மறுசீரமைப்பு முறைமை மூலம் -- அதாவது அரசமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, யாழ்ப்பாண மாவட்டம் உள்ளிட்ட வடக்கின் தொகுதிகளின் எண்ணிக்கை குறைவடையும் --

அது அனைத்துலக மட்டத்தில் தாக்கத்தை உண்டாக்கும். ஆகையால், அதனை அனுமதிக்க முடியாது -- என்று காட்டமாகவும், இறுக்கமாகவும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களை அழைத்து, ஜனாதிபதி கலந்துரையாடினார். அப்போதும், தேர்தல் முறைமை மாற்றம் குறித்த புதிய யோசனைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அங்கும்கூட, இப்போது பதினொரு தொகுதிகள் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு தொகுதிகளாக மெலிந்து நலிந்து தேய்ந்து போய்விடும் என்றும் வண. அத்துரலிய ரத்ன தேரர் சுட்டிக்காட்டியதோடு --

இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக எடுத்தியம்பி உள்ளார்.

இதேவேளை --

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள, அரசமைப்புக்கான இருபதாவது சட்டத் திருத்தத்தின் பிரகாரம், யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை, பதினொன்றில் இருந்து 5 அல்லது 6 ஆகக் குறைந்துவிடும் என்று 'கபே' (சுதந்திரமானதும் நீதியுமான தேர்தலுக்கான அமைப்பு) அமைப்புச் சுட்டிக் காட்டி உள்ளது.

மேலும், புதிய தேர்தல் முறை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கபே அமைப்பு, சிறு கட்சிகளுக்கு நியாயம் வழங்குவதன் பொருட்டு, இப்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் (225 என்ற) எண்ணிக்கையை 235 ஆக உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால், இப்போது அதற்கு நேர்மாறாக, நாட்டின் தேர்தல் தொகுதிகளை 125 ஆக மட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது எனக் 'கபே' குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் சீரமைப்பு என்ற பெயர்ப்பட்டியுடன் (லேபலுடன்) முப்பத்தைந்து நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைப்பதால் மக்கள் பிரதிநிதித்துவம் அர்த்தமற்ற ஓர் ஒழுங்கற்ற நிலையை எட்டப்போகிறது. வாக்காளர்களை -- மக்களை -- சகதிக்குள் மூக்கு முட்ட அமுக்கி அழுத்தும் வெறித்தனம் உயர்ந்து நிற்கும் நிலையே மேலோங்குகிறது. அவ்வளவுதான்!

# மைத்திரிக்கு அச்சுறுத்தலாக விளங்கும் மஹிந்த ராஜபக்ஷ



சேரலாதன்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திரைமறைவில் நின்று கொண்டு மைத்திரி அரசை இயங்கவிடாது பல வழிகளிலும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றார். அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்ட வரைவை பெரும் இழுபறியின் பின்னரே அரசினால் நிறைவேற்ற முடிந்தது. தற்போது 20ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதிலும் இடையூறுகள் காணப்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியவற்றில் மஹிந்தவின் ஆதரவாளர்கள் இன்னமும் கணிசமான அளவில் காணப்படுகின்றனர். இவர்களில் பலர் மஹிந்தவுக்குத் தலையையும், மைத்திரிக்கு வாலையும் காட்டிக் கொண்டுவிலாங்கு போன்று தமது பிழைப்பை நடத்தி வருகின்றனர்.

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கையுடன் எப்போதுமே இருக்க வேண்டிய நிலையில் உள்ளார். முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் படையினர் மற்றும் பொலிஸார் மத்தியில் இன்னமும் ஓரளவு செல்வாக்குப் படைத்தவராகவே மஹிந்த காணப் படுகின்றார்.**

மஹிந்தவைப் போன்று மற்றவர்களை அச்சுறுத்திக் காரியங்களை சாதித்துக் கொள்ளும் குணவியல்பு மைத்திரியிடம் காணப்படாததால் சில காரியங்களைத் தாமதமாகவே அவரால் செய்து முடிக்க முடிகின்றது. மேலும் பிரதமர் பதவியில் அமர்ந்திருப்பவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் அவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது நிலவுகின்ற அரசியல் சூழ்நிலையில் மைத்திரியால் மட்டுமே தாக்குப் பிடிக்க முடிகின்றது என்பதை எவருமே ஒப்புக் கொள்வார்கள்.

கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாற்றும் கட்சியினரை எவ்வாறு வளைத்துப் போட்டாரென்பதை இந்த முழுநாடும் அறியும். அப்போதெல்லாம் ஜனநாயக வழிமுறையின் கீழான நாகரிகமானதொரு அரசியலுக்கு இந்த நாட்டில் இடம் இருக்கவில்லை. ஊழல், மோசடிகள் மற்றும் வன்செயல்கள் மூலமாக எதையும் சாதிக்க முடியுமென்ற நம்பிக்கை முன்னைய ஆட்சியாளர்களின் மனதில் தலைதூக்கிக் காணப்பட்டது. இந்த நாடு சீரழிந்து சென்றமைக்கான முழுப் பொறுப்பையும் முன்னாள் ஆட்சியாளர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

என்னை [illegible]



யாது என்ற இறுமாப்புடன் கொக்கரித்துக் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ –மைத்திரிபால சிறி சேன என்ற அமைதியான மனிதரிடம் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு வரலாற்றில் மீள முடியாததொரு அவமானத்துக்குள் தள்ளப்பட்டார். உண்மையில் அவரொரு மானஸ்தராக இருந்திருந்தால், மீண்டும் அரசியலுக்குள் நுழைவது தொடர்பாகச் சிந்தித்திருக்கவே மாட்டார். ஆனால் தோல்வியின் தாக்கத்திலிருந்து இன்னமும் விடுபடாத நிலையில் அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடுகின்றமை அவரது குணாதிசயத்தை வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறது. மேலும் தாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சிறைச்சாலைகளில் இடமிருக்காது எனவும் அவர் அச்சுறுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்லாது தமது ஆதரவாளர்களால் பழிவாங்கும் நடவடிக்கைகள் இடம்பெறும்போது அவற்றைத் தம்மால் தடுக்க முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலமாக மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மிக மோசமான விளைவுகள் ஏற்படுமென்பது தெளிவாகத் தெரிகின்றது.

மஹிந்தவின் கடந்த கால ஆட்சிக் காலத்தைப் பற்றி அறிந்து கொண்டவர்கள் அவர் எத்தகைய பண்புகளைக் கொண்டவர் என்பதை மறந்து விடமாட்டார்கள். தமது விருப்பத்துக்கு மாறாக செயற்பட்ட எவரையும் அவர் விட்டு வைக்கவில்லை.

ஜனநாயக விழுமியங்களை அவர் துச்சமாகவே மதித்தார். அவரது அராஜக செயல்களுக்கு அவரது தம்பியாரான கோத்தபாய பூரண ஒத்துழைப்பை நல்கி வந்ததை அனைவரும் அறிவார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு முடிந்தவுடன் தற்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன மறைவிடமொன்றில் தமது குடும்பத்தினருடன் மறைந்திருந்ததாகத் தெரிய வருகின்றது. இந்த நிலையில் தமக்கு இரண்டு தடவைகள் மஹிந்தவினால் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டதாக மைத்திரியே கூறியுள்ளார். இதன் மூலமாகவே மஹிந்தவின் குண இயல்பு வெளிப்பட்டு நிற்கின்றது.

இன்றும் கூட அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு மனிதராகவே மஹிந்த காணப்படுகின்றார். மைத்திரி ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருப்பதை ஒரு பொருட்டாக அவர் மதிப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், எலியும் பூனையும் போன்ற உறவே காணப்படுகின்றது.

ஆகவேதான் மஹிந்த தொடர்பாக மைத்திரி எச்சரிக்கையுடன் எப்போதுமே இருக்க வேண்டிய நிலையில் உள்ளார். முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் படையினர் மற்றும் பொலிஸார் மத்தியில் இன்னமும் ஓரளவு செல்வாக்குப் படைத்தவராகவே மஹிந்த காணப்படுகின்றார். அத்துடன் தற்போதைய அரசை வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதில் அவர் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றார்.

ஆகவே ஜனாதிபதி மைத்திரி, மஹிந்த தொடர்பாக எச்சரிக்கையாக இருக்காவிடின் பாதகமான விளைவுகளை அவர் சந்திக்க நேரக் கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# நல்லாட்சிக்கு வாக்களிக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம்

● சரா

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனஆட்சிக்கு வந்து ஒரு சில வாரங்கள் வரை நாடு நல்ல பல எதிர்பார்ப்புக்களுக்காக காத்திருந்த நிலைப்பாட்டைக்காண முடிந்தது. ஜனாதிபதி மைத்திரியும் கூட மக்களுடன் தனது வெற்றியைப் பகிர்ந்து கொண்டிருந்த போது, நான் ஜனாதிபதிக் கதிரையில் அமர்வேன் என்று கனவு கூடக் கண்டிருக்க வில்லை என்று தெரிவித்திருந்தார். தாம் கனவில் கூட எண்ணியிராத ஜனாதிபதிப்பதவியை ஏற்றுக்கொண்ட முதல் சந்தர்ப்பத்திலேயே அவரிடம் இறுமாப்பு வெளித் தோன்றவில்லை. அந்தப் பதவியேற்பு வைபவம் கூட மிக எளிமையானதாகவே அமைந்திருந்தது. பொதுமக்களின் பணம் எந்த விதத்திலும் வீண்விரயமாக்கப்படக் கூடாது என்ற அவரது கொள்கைகளில் ஒன்றைச் செயலில் காட்டியதன் மூலம் ஆரம்பத்திலேயே அவர் நாட்டில் மதிப்பு மிக்க மனிதராக இடம்பிடித்துக் கொண்டார். அதன் பின்னர் வந்த அவரது அரசியல் ரீதியிலான செயற்பாடுகள், குறிப்பாக பிரதமர், அமைச்சரவை, ஏனைய அமைச்சர்கள் நியமனங்கள் நாட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றிருந்தன. நாடு முழுவதிலும் மைத்திரிக்கு அமோகமான வரவேற்பே கிடைத்திருந்தது. இதேவிதமானதொரு ஜனாதிபதி பதவியேற்பு வைபவம் 2010 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றிருந்ததையும், அன்று பதவியேற்ற முன்னாள் ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவம் எவ்வாறிருந்தது என்பதையும் இங்கு நாட்டுமக்கள் சற்று ஞாபகப்படுத்திப் பார்ப்பது நல்லது. அந்தப் பதவியேற்பு வைபவத்துக்குச் செலவிடப்பட்ட மக்களின் பணத்தையும் குறுகிய கால மைத்திரி நிர்வாகத்தையும், பத்தாண்டுக்கால மஹிந்த ராஜபக்ஷாவின் குடும்ப நிர்வாகத்தையும் சீர்தூக்கிப் பார்ப்பது நாட்டின் எதிர்காலத்துக்குப் பெறுமதிமிக்கதாக அமை யும்.

மறுபுறத்தில் ராஜபக்ஷாக்கள் அதிகாரத்தை இழுந்துவிடுவதற்கு முக்கியமானதொரு காரணியாகியிருந்தது நாட்டு மக்களின் பெருமளவிலான தொகையினருக்கு ராஜபக்ஷாக்களின் குடும்ப நிர்வாகத்தின் மீது ஏற்பட்டிருந்த கசப்பேயாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷாக்களின் குடும்ப நிர்வாகத்தின் காரணமாக நடந்துள்ள முறைகேடுகள், குற்றங்கள், மோசடிகள், ஊழல்கள் இன்று மெதுவாக வெளிச் சத்துக்கு வந்து கொண்டிருக் கின் றன. அவற்றுக்கு எதிராக கடுமை யான மறுப்புக்களும் முன்வைக்கப்படுகின்றன. விசாரணைகளும் நடக்கின்றன. உப்பைத் தின்றால் தண்ணீர் குடிக்கத்தான் வேண்டுமென்ற நியதிக்கு அமைய குற்றங்களைப் புரிந்தவர்கள் தண்டனைக்கு உள்ளாகித்தான் ஆகவேண்டியுள் ளது. ஆனாலும், அவை மாத்திரம் போதுமானதல்ல. இதுபோன்ற குற்றங்கள் எதிர்காலத்திலும் தொடராதிருப்பதற்கு வகை செய்வது இந்த நாட்டு மக்களின் வாக்குப் பலத்திலேயே தங்கியுள்ளது என் பதை மறந்து விடலாகாது.

அதற்கான இன்னுமோர் நல்ல சந்தர்ப்பம் நாடாளுமன்றத் தேர்தல் ரூபத்தில் எதிரில் வந்து கொண்டிருக்கிறது. நல்லதொரு ஜனாதிபதியைத் தெரிவு செய்து அவரின் நிர்வாகத்தின் கீழ் நல்லதொரு மக்கள் நலன் சார்ந்த அரசையும் அந்த அரசின் நல்ல வழிப் படுத்தல்களையும் இன்றளவில் அனுபவித்து வருவதை இடைநடுவில் கெடுத்துக்கொள்ளா திருப்பதற்காக மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து ஜனாதிபதியாக்கி வைத்துள்ள அந்த அறிவார்ந்த மக்கள் தரப்பு மிகக் கவனமாக தமது புத்தியைத் தீட்டிக் கொண்டு வாக்களிக்க வேண்டியுள்ளது.



இவ்வளவும் கூறவேண்டியிருப்பதற்கு இன்று நாட்டில் உருவாகியிருக்கும் அரசியல் நிலைப்பாடே அடிப்படைக் காரணமாகும். தனது 100 நாள் வாக்குறுதிகளில் அனைத்தையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றவில்லை. அவரின் கீழுள்ள ரணில் அரசு பதவி விலக வேண்டும். நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். பிரதமர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவே பொருத்தமானவர். அவரையே நாம் பிரதமராக்குவோம் என்று மஹிந்தருக்கு இனிப்பாகவும், அதேவேளை, மைத்திரிக்கும் இனிப்பாக தாளம் போட்டு இரட்டை வேடம் போடும் கபட அரசியல் சந்தர்ப்பவாதிகளின் பேச்சுக்களில் இந்நாட்டு மக்கள் ஏமாந்து விடக்கூடாது. மைத்திரி அரசின் கீழான இன்றைய நாடாளுமன்றம் ஜனாதிபதிக்கு மிகப்பெரும் சோதனைக்களமென்றே கூறவேண்டியுள்ளது.

> “ தனது 100 நாள் வாக்குறுதிகளில் அனைத்தையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றவில்லை. அவரின் கீழுள்ள ரணில் அரசு பதவி விலக வேண்டும். நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். பிரதமர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவே பொருத்தமானவர். அவரையே நாம் பிரதமராக்குவோம் என்று மஹிந்த ருக்கு இனிப்பாகவும், அதேவேளை, மைத்திரிக்கும் இனிப்பாகத் தாளம் போட்டு இரட்டை வேடம் போடும் கபட அரசியல் சந்தர்ப்பவாதிகளின் தில்லுமுல்லுகளுக்கு இந்நாட்டு மக்கள் ஏமாந்து விடக்கூடாது.

கடந்து விட்ட 100 நாள்களில் அந்த நாடாளுமன்றத்தில் அவர் எதிர்கொண்டிருந்த சவால்கள் கொஞ்ச நஞ்சமானவைகள் அல்ல. சோதனைகளுக்கும் குறைவில்லை. தமது அரசியல் அனுபவ ஆற்றலை மிக அடக்கத்துடன் புத்திசாதுரியமா கப் பயன்படுத்திக் கொண்டே இன்று வரையிலும் அவை அனைத்தையும் வெட்டியாடி தனது ஜனநாயக நல்லாட்சி வாக்குறுதியின் உயிர் நாடியான 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள அவரால் முடிந்தது. எனவே யார் எந்தக் கூத்தாடினாலும் ஜனநாயகத்தை நிலைப்படுத்தும் அந்தக் கட்டமைப்பை சீர்குலைய விடுவதென்பது சாத்தியமற்றதாகும்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி அஸ்தமித்துப் போன மஹிந்தவின் கீழான அதிகாரத்தரப்பினர், மீளவும் தமது தலைவரின் கீழ் தமது அதிகாரங்களைப் பலப்படுத்திப் பேயாட்டம் ஆடுவதற்கே இன்று குறிவைத்துச் செயற்படுகின்றனர். கௌதம புத்தரின் பஞ்ச சீலக் கொள்கை வழியில் தம்மை நெறிப்படுத்திக் கொள்வதற்காக பௌத்த விகாரைகளுக்கு வரும் மக்களைக் குறிவைத்து அவர்களை தமக்குச் சார்பாக வளைத்துப் போடுவதற்கு ஆசைகளைக் கைவிட வேண்டிய இடத்தில் வைத்து அரசியல் பரப்புரை செய்து வருகிறார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அது பதவி ஆசையல்ல பதவிப்பேராசையாகும். கேடு கெட்ட பேராசையாகும். ஜனாதிபதிப் பதவியிலிருந்த அவர் பிரதமராகவோ அது கிடைக்காது போகுமிடத்தில் இறுதியாக பிரதேச சபை உறுப்பினராகவோ வருவதற்குக் கூட தயங்கப் போவதில்லை. இரண்டு தடவைகள் எதேச்சாதிகார ஜனாதிபதியாக நிறைவேற்று அதிகாரத்தை அடியொட்டச் சுவைத்துத் திளைத்த அவருக்கு கௌதம புத்தரின் புனித ஸ்தலங்களில் ஆசைகளை கைவிட்டு அசடுகளைக் கழு வித்துடைத்து விட மனமில்லை. அத்தகைய மனிதருக்குத்தான் துணை போகின்றனர் இந்த கபட வேடதாரிகளான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

எது எவ்வாறானாலும் எப்படியும் இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் பொதுத்தேர்தலொன்றை மக்கள் எதிர்பார்க்க முடியும். இந்தநாட்டு மக்களுள் குறிப்பிட்ட ஒரு விகிதத்தினர் தவிர்ந்த மக்கள் சமூகம் சிந்தித்து செயற்படும் அறிவு சார்ந்த புத்திசாலிகளைக் கொண்டுள்ளதால் மீளவும் ஜனநாயக நல்லாட்சி யொன்றுக்கே வாக்களிக்கப்படும் என்ற நம்பிக்கையோடு காத்திருப் போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 700 | 700 | 550 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 550 | 550 | 600 | 500 | 700 | 500 |
| பாரை | 600 | 500 | 500 | 600 | 600 | 370 |
| சுறா | 600 | 500 | – | 700 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 450 | 300 | – |
| விளை | 650 | 400 | 400 | 500 | – | 350 |
| முரல் | 300 | 350 | 400 | 350 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 | 400 | 350 |
| கிழாக்கன் | 650 | 700 | 300 | 450 | – | 350 |
| ஓரா | 400 | 400 | – | 300 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 370 |
| நகரை | 200 | 400 | 200 | 250 | 200 | – |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 70 |
| ஒட்டி | 300 | 250 | 200 | 200 | 150 | 70 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 150 | 140 |
| பாலை | 450 | 300 | 300 | 400 | 400 | 350 |
| வாழை | 100 | 200 | – | 300 | 200 | 350 |
| கொய் | 150 | 200 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 300 | – | 250 | – | 250 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | |
| | | 4 | 7 | | 6 | | | |
| | | 2 | | 4 | | 9 | | 5 |
| | | | | 7 | | | 9 | |
| | 9 | 6 | | | | | | |
| | 8 | | | | 4 | 3 | | |
| 6 | | | | | | | 8 | 1 |
| | | | | 2 | | | | |
| 1 | | | | 5 | | | 3 | 4 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 8 | 1 | 9 | 3 | 6 | 4 | 7 |
| 6 | 4 | 7 | 5 | 2 | 8 | 1 | 9 | 3 |
| 9 | 1 | 3 | 4 | 6 | 7 | 8 | 2 | 5 |
| 7 | 6 | 5 | 9 | 8 | 1 | 2 | 3 | 4 |
| 8 | 3 | 1 | 2 | 7 | 4 | 9 | 5 | 6 |
| 4 | 9 | 2 | 3 | 5 | 6 | 7 | 8 | 1 |
| 3 | 5 | 6 | 8 | 1 | 2 | 4 | 7 | 9 |
| 2 | 7 | 4 | 6 | 3 | 9 | 5 | 1 | 8 |
| 1 | 8 | 9 | 7 | 4 | 5 | 3 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங் குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## லட்சியம் தேவை

**விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....**



மக்களுள் மிகப் பெரும்பாலானோருக்கு ஒரு லட்சிய மனிதன் தேவை என்பதை அன்றே எமது மகான்கள் உணர்ந்திருந் தனர். அவர்களுக்கு ஏதாவது ஓர் உருவக் கடவுள் கண்டிப்பாக வேண்டும். உருவமற்ற கடவுளை எதிர்த்து முழக்கம் செய்த அதே புத்தர் மறைந்து ஐம்பது ஆண்டுகளுக்குள், அவரது சீடர்கள் அவரையே ஒரு கடவுளாக ஆக்கிவிட்டார்கள், உருவக்கடவுள் அவசியம். ஆனால் உருவக் கடவுள்களை வழிபடுவதற்குப் பதிலாக, ஏன், அதைவிடச் சிறப்பான ஒன்று இந்த உலகத்தில் அவ்வப்போது தோன்றி நம்மிடையே உலவுகின்ற நடமாடும் தெய்வங்களை வழிபடுவது. ஏனெனில் வீண் கற்பனைகளான இந்த உருவக் கடவுளருள் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் பேரும் வழிபடத் தகுதியற்றவர் களே. ஆனால் எந்த கற்பனைக் கடவுளையும் விட, நமது கற்பனைப் படைப்பு களைவிட, அதாவது, நம்மால் கற்பனையில் உருவாக்க முடிந்த எந்தக் கருத் தையும்விட இந்த நடமாடும் தெய்வங்கள் வழிபடத் தகுந்தவர்கள். நீங்களோ நானோ கற்பனையில் உருவாக்க முடிகின்ற எந்தக் கருத்தையும்விட ஸ்ரீ கிருஷ்ணர் மகத்தானவர். நீங்களோ நானோ சிந்தித்து உருவாக்க முடிகின்ற எந்த லட்சியத்தையும் விட புத்தர் என்பது மிகவுயர்ந்த, உயிர்த்துடிப்பு மிக்க, நிதர்சனமானதொரு கருத்து. எனவே கற்பனைக் கடவுள்களை விலக்கி வைத்து விட்டுக்கூட, மனித குலம் அவைகளைப் போற்றி வழிபடுகிறது.

# மாதுளையின் மகத்துவம்

மாதுளைகளில் ஆன்டி–ஆக்ஸிடன்ட்கள் அதிகம் நிறைந்துள்ளன. இந்த தன்மையினால், அவை கட்டற்ற மூலக்கூறுகளினால் உண்டாகக் கூடிய இளமூப்பு வியாதியிலிருந்து, உடலின் உயிர ணுக்களைக் காக்கக் கூடிய வல்லமை பொருந் தியவையாய் உள்ளன. இக்கட்டற்ற மூலக்கூறு கள், சூரியனின் கதிர்வீச்சு மற்றும் சுற்றுச் சூழலி லுள்ள மாசுக்களின் பாதிப்புகளினால் உண்டா கின்றன. இரண்டு வகையான இரத்த உறைவுகள் உள்ளன. முதல் வகையான உறைவு, வெட்டுக் காயங்கள் மற்றும் சிராய்ப்புகளினால் உண்டா கும். காயங்களிலிருந்து புறத்தோலை விரை வாக மீளச் செய்யும் ஆற்றல் கொண்டது. இவ் வகைக் காயங்களில், உடனடி இரத்த உறைவு, அதிக இரத்தப் போக்கை தடுக்கக் கூடியது. அதனால் இது கட்டாயத் தேவையாக உள்ளது. இரண்டாவது வகை இரத்த உறைவு, உடலின் உள்ளே நிகழக்கூடியது. இது மிகவும் ஆபத்தான ஒன்று. இதயம் மற்றும் இரத்த நாளங்களில் உண்டாகும் உறைவுகள் மற்றும் சிறுநீர்த்தேக் கம் ஆகியவற்றை இதற்கு உதாரணமாக கூற லாம். இவ்வகை பாதிப்புகளில், இரத்தம் உறை வதினால் மரணம் கூடச் சம்பவிக்கலாம். எனவே இதற் கெல்லாம் மாதுளை சரியான தீர்வு தரும். வயது மற்றும் ஆரோக்கியமற்ற வாழ்வியல் பழக்கங் களினால், கொலஸ்ட்ரால் மற்றும் பிற பொருள் கள் உடலுக்குள் சென்று சேர்ந்து இரத்த நாளங்க ளின் சுவர்களை இறுகிக்கொள்ள வைக்கும். மாதுளையின் ஆன்டி–ஆக்ஸிடன்ட் குணங்கள் அடர்த்தி குறைந்த லிப்போப்ரொட் டீன் என்ற ழைக்கப்படும் கெட்ட வகை கொலஸ்ட்ராலை தமனிகளின் சுவர்களில் படிவதைத் தடுக்கிறது. எளிமையான வார்த்தை களில் சொல்வதா னால், மாதுளைச் சாறு இரத் தத்தின் ஒட்சிசன் அளவை மேலேறச் செய் கிறது. ஆன்டி– ஆக்ஸிடன்ட்கள் கொலஸ்ட்ராலைக் குறைத்து, கட்டற்ற மூலக்கூறுகளோடு போராடி, ஆபத்து விளைவிக்கக்கூடிய இரத்த உறை வுகளில் இருந்து காத்து, அருஞ்சேவை புரிகின் றது. இவ்வாறு செய்வதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக, இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, இரத்தத்தின் ஒட்சிசன் அளவுகளை இவை அதிகப் படுத் துகின்றன. மாதுளையின் மருத்துவ குணங்கள், எலும் புகளையும் எட்டுகின்றன. இது, மூட்டுவாதத் தினால் பாதிக்கப்பட்டவர் களின் குருத் தெலும்பு என்றழைக்கப்படும் சவ் வுப்பகுதியை, அதீத பாதிப்புக்குள்ளாவதிலி ருந்து தடுக்கிறது. இந்தக் கனி, வீக்கம் மற்றும் எரிச் சலைக் குறைக்கும் ஆற்றலும், குருத்தெலும்பை பாதிக்கும் நொதிகளை எதிர்க்கும் ஆற்றலும் கொண்ட. மாதுளை, இந்த தர்மசங்கடமான பிரச் சினையை தீர்க்கவல்லதாகும். ஆனால், இது இப்பிரச்சினைக்கு உடனே முழு நிவாரணம் வழங்கக் கூடிய அதிசய மருந்து என்று நினைத் தல் தவறு. மாதுளைச் சாறு, இந்தக் குறையை மிதமாக மட்டு மே நிவர்த்திக்கக்கூடும்.

## வாழ்வியல் நிகழ்வுகளில் வெற்றிலை




இந்துக்களின் பிறப்பு முதல் இறப்பு வரை சகல வாழ்வியல் நிகழ்வுகளிலும் வெற்றிலை மிகவும் பயன்படு பொரு ளாகக் கருதப்படுகிறது. குறிப்பாக திருமணத் தின்போது அதன் பயன் கள் எண்ணிலடங்கா. திருமணங்கள் நிச்ச யிக்கப்படும் நிகழ்வை நிச்சயதாம்பூலம் எனக் கூறுவர். இங்கு வெற்றிலை, பாக்கு பரி மாறிக்கொண்டால் இந் தத் திருமணம் உறுதிசெய்யப்பட்டதாகக் கரு துவர். திருமண காலத்தில் கணவன், மனைவி இருவருக்கும் பெண்ணின் சகோதரன் தாம் பூலம் மடித்துக்கொடுக்கும் வழக்கம் வேத காலம் முதலாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இதேபோல் கன்னிகா தானத்தின்போது வெற் றிலை, பாக்கின் மீது உத்தரணியால் நீர் வார்த் துக் கன்னிகாதானம் இடம்பெறுகின்றது.

## நாளை

**வைகாசி 30**

**சனிக்கிழமை 13.06.2015**

**திதி:** துவாதசி மு.இ. 11.46 வரை

**நட்சத்திரம்:** அச்சுவினி மு.ப.08.34 வரை

**சுபநேரம்:** [illegible] வரை

**இராகுகாலம்:** [illegible] 10.22 வரை




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கண்ணகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 120 | 60 | 70–80 | 70 | 80 | 30 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 80 | 70 | 80 | 45–60 |
| கரட் | 200 | 160 | 240 | 160 | 220 | 200 | 250 | 240 |
| மரவள்ளி | 50 | 50 | 60 | 40 | 50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 140 | 140 | 120 | 100 | 140 | 120 | 160 | 130 |
| பாகல் | 160 | 200 | 120 | 120 | 140 | 140 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | 80 | 100–80 | 120 | 160 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 100 | 90 | 120 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 90 | 140 | 140 | 160 | 200 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 40 |
| வாழைக்காய் | 70 | 50 | 30 | 40 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 10 | 30 | 20–40 | 10 | 30–40 | 40 | 35 | 35 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 30–40 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 80 | 80 | 100–120 | 120 | 200 | 160 |
| புடோல் | 80 | 120 | 80 | 80 | 80 | 60 | 100 | 70 |
| கோவா | 100 | 100 | 80 | 100–140 | 80 | 120 | 120–80 | – |
| வெண்டி | 120 | 120 | 80 | 100 | 100–140 | 120 | 120 | 60 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 160 | 200 | – | 220 | 180 |
| லீக்ஸ் | 160 | 180 | 200 | 120 | 160–170 | 200 | 160 | 180 |
| தேங்காய் | 50 | 25–40 | 60 | 50 | 40–50 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 100–120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 120 | 120 | 160 | 120 | 140–170 | 200 | 160 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 30 | 20 | 10 |
| கறிமிளகாய் | 130 | 180 | 120 | 160 | 200 | 120 | 250 | 180 |
| [illegible]வள்ளி | 120 | – | 120 | 120 | 80–100 | 160 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 240 | 200 | 250–300 | 80–100 | 160 | 250 | 170 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய், சேய் ஆரோக்கியத்துக்கு...



கர்ப்பமாக இருக்கும் பெண்கள் சீரான அளவில் மூச்சு விடுவது முக்கியம். கர்ப்பிணிகளின் வயிற்றில் வளரும் குழந்தைகளுக்கு தேவையான அளவுக்கு ஒட்சிசன் கிடைக்க வேண்டும். கர்ப்பிணிப் பெண்கள் மூச்சுப் பயிற்சியைத் தொடர்ந்து செய்து வந்தால் குழந்தை, தாயின் ஆரோக்கியம் காக்கப்படும். நான்கு மற்றும் எளிதானமூச்சுப்பயிற்சிகளைப்பார்க்கலாம். விரிப்பில் கால்களை மடக்கி வசதியாக உட்கார்ந்து கொண்டு, தாடை, தோள்கள் மற்றும் இடுப்பை நெகிழ்வாக வைத்துக் கொள்ளுங்கள். பின் உங்கள் கையை வயிற்றில் வைத்துக் கொண்டு, மறு கையையும் அதன் மேல் வைத்துக் கொள்ளுங்கள். இதையடுத்து, அடி வயிற்றிலிருந்து மூச்சை இழுங்கள். அந்த நிலையில் வயிறு முழுவதும் மூச்சுப் பரவும் வகையில் 1, 2, 3... என்று 8 வரை எண்ணுங்கள். பின் மெதுவாக மூச்சை வெளியே விடுங்கள். இதே முறையை மீண்டும் மீண்டும் செய்யுங்கள். இந்த மூச்சுப் பயிற்சியைக் கர்ப்பிணிகள் தினமும் குறைந்தது 10 நிமிடங்களாவது செய்ய வேண்டும்.

பாதங்களை இணையாக வைத்துக் கொண்டு நேராக நிற்கவும். வாயை மூடிக் கொண்டு, மூச்சை நன்றாக இழுத்து10வரைஎண்ணவும்.அப்போது கைகளை மார்பில் வைத்துக் கொள்ளுங்கள் (அழுத்தக் கூடாது). நுரையீரல்விரிவடைவதைஉங்களால்உணர முடியும். அதன்பின்னர், ஓரிரு நொடிகள் மூச்சை அப்படியே பிடித்துக் கொண்டிருந்து விட்டு, மெதுவாக மூச்சைவெளியேவிட்டு,10 வரை எண்ணவும். இதேபோன்று இந்தப் பயிற்சியை 10 முறை செய்தால் நல்ல பயன் கிடைக்கும். 7 ஆவது மாதத்துக்குப் பின் இந்தப் பயிற்சியைச் செய்வது சிரமமாக இருந்தாலும், முடிந்த வரைதொடர்ந்துசெய்து வரவேண்டும்.

மல்லாக்க கீழே படுத்துக் கொண்டு, வாயை நன்றாகத் திறந்து மூச்சை வேகமாக இழுத்து விழுங்க வேண்டும். இதைத் தொடர்ந்து செய்தால் நுரையீரல்களுக்கு நல்லது. தினமும் ஒரு, 5 நிமிடங்கள் இந்தப்பயிற்சியைச் செய்தால் நுரையீரல் ஆரோக் கியமாக இருக்கும். கருவில் உள்ள குழந்தைக்கும் ஒட்சிசன் சீராகப் போகும்.

உடலை நன்றாக நெகிழ்வு செய்து கொண்டு, மூச்சை நன்றாக இழுத்து நிறுத்தவும். ஓரிரு நொடிகள் கழித்து, அதேபோல் உட்கொண்ட காற்றை மெதுவாக வெளியேற்றவும். பின் வாயைத் திறந்து, காற்றை இழுத்து விழுங்கி, 5 வரை எண்ணவும். பின் வாயை மூடிக் கொண்டு ஆழமாக மூச்சை இழுத்து விட வேண்டும். ஒரே நேரத்தில் 5 முறை இந்தப் பயிற்சியைச் செய்யலாம். இந்தப் பயிற்சியை நின்று கொண்டே செய்யலாம்; அல்லது வசதியாகஉட்கார்ந்துகொண்டும் செய்யலாம்.

# ஜூன் மாத இராசி பலன்கள்



## கும்பம்

இந்த ராசிக்கு 4 ஆம் இடத்தில் இருக்கும் புதன் ஜூன் 3 க்கு பின்னர் நன்மையான பலனை வாரி வழங்குவார். இடைபட்ட காலத்தில் வக்கிரம் அடைவதால் அவரால் நற்பலன் கொடுக்க முடியாது. சுக்கிரன் நன்மை அளிப்பார். தற்போது சனி பகவான் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும், ஜூன் 12 ஆம் திகதி முதல் வக்கிரம் அடைகிறார். இதன்பின் கெடுபலன் குறைந்து நன்மை அதிகரிக்கத் தொடங்கும். மற்றக் கிரகங்கள் சாதகமற்ற நிலையில் இருந்தாலும், முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்காமல் போகாது. குடும்பத்தில் சுக்கிரனால் பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். பொன், பொருள் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஆடம்பரப் பொருள்களை வாங்கலாம். பெண்கள் வகையில் சாதகமான போக்கு காணப்படும். உறவினர்கள் வருகையும், அவர்களால் நன்மையும் கிடைக்கும்.

**தொழில்:** வியாபாரத்தில் கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். பழைய கடன் அடைபடும். பகைவர்களால் இடையூறு ஏற்பட வாய்ப்புண்டு. அரச வகையில் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம்உண்டாகும். பணியாளர்களின் திறமைக்கு ஏற்ப அங்கீகாரம் கிடைக்கும். எதிர்பாராத நன்மை கிடைக்க யோகமுண்டு.

**கலைஞர்களுக்கு:** சுக்கிரன் பலமாக இருப்பதால் புதிய ஒப்பந்தம் எளிதில் கிடைக்கும். விடாமுயற்சி தேவைப்படும்.

**அரசியல்வாதிகள்:** சிறப்பான முன்னேற்றம் பெறுவர்.

**மாணவர்கள்:** விரும்பிய கல்வி நிறுவனத்தில் சேரும் வாய்ப்பு கிடைக்கும்.

**விவசாயிகள்:** கால்நடை வளர்ப்பின் மூலம் ஆதாயம் காண்பர்.

**பெண்கள்:** சிறப்பான வளர்ச்சி காண்பர். பிறந்த வீட்டில் இருந்து சீதனம் கிடைக்க பெறலாம்.

**அதிர்ஷ்ட எண்:** 5,7

**நிறம்:** வெள்ளை, பச்சை

**பரிகாரம்:** ராகு காலத்தில் காலவைரவரைத் தரிசியுங்கள். பிரதோஷ தினத்தன்று நந்தீஸ்வரருக்கு பாலாபிஷேகம் செய்யுங்கள். தினமும் ராம நாமம் ஜெபியுங்கள்.

# உறவுகளில் விரிசல் வேண்டாம்..

**“ உங்களுடைய வாழ்க்கை உங்களுடைய ஆன்மிகத்தின் வெளிச்சத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை மட்டும் மனதில் கொள்ளுங்கள்.**



சின்னச் சின்ன விடயங்களில் தான் குடும்ப வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம் இருக்கிறது. ரசனை குடும்பத்தில் எத்தனை பெரிய கீறலை வேண்டுமானாலும் உருவாக்கிவிடும். ரசனைகளை மதியுங்கள், இது முதல் தேவை. அதாவது உங்க மனைவிக்கு ஓவியத்தில ஆர்வம் இருந்தால், அதை முதலில் மதிக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரசனை இருக்கும். உங்களுக்கு ஓவியம் என்றால் வெறுப்பாக இருக்கலாம். அதற்காக உங்கள் மனைவியிடம் போய், இதெல்லாம் ஒரு ரசனையா? என்றெல்லாம் எரிச்சல் மூட்டாதீர்கள்.

அதே போன்று தான் உங்கள் கணவருக்கு ஒருவேளை சிலவற்றில் மோகம் இருக்கலாம். அதை மதியுங்கள். ஒவ்வொருவருக்குமான விருப்பங்களும், எதிர்பார்ப்புகளும் தனித்தனியானவை. தோப்பிலே இருந்தாலும் ஒவ்வொரு மரமும் தனி மரம் என்றுதான் சொல்லுவார்கள்.

அடுத்தவர் ரசனையை மதிப்பது முதல் தேவை. இரண்டாவது, அந்த ரசனைக்கு உங்களால் முடிந்த அளவுக்கு ஊக்கம் ஊட்டுவது. ஓவியக்காரி மனைவிக்கு நீங்கள் ஓவியம் சார்ந்த ஏதாவது பரிசுகள் வாங்கிக் கொடுக்கலாம். பொருள்கள் வாங்கிக் கொடுக்கலாம். ஒவ்வொருவருக்கும் அவரவர் ரசனைகளைப் பகிர்ந்து கொள்வதில் அலாதி இன்பம் இருக்கும் என்பது சர்வதேச உண்மை.

அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்பதற்குத் தேவை காதோ, பொறுமையோ அல்ல, அன்பு! வெவ்வேறு ரசனைகளுடைய இரண்டு பேர் சேர்ந்து வாழும் இடம் தான் குடும்பம். என்னுடைய ரசனைதான் உனக்கு இருக்க வேணும் அல்லது என்னோட ரசனைகள் தான் உனக்கும் பிடிக்க வேணும் என ஒருவர் முரண்டு பிடித்தால் குடும் பத்தில் சிக்கலின் கண்ணிவெடி வைத்திருக்கிறார்கள் என்று அர்த்தம். ஒவ்வொரு சின்னச் சின்ன விடயங்களிலும் இருவரும் வேறுபடலாம், அடுத்தவர் ரசனைகளை மதிக்கும்போது இருவருமே ஒன்றித்துப் போய் விடுவது வெகு சாத்தியம். இரயில் தண்டவாளத்தின் இரண்டு பாளங்களைப் போன்று இணைந்து பயணிப்பதே வாழ்வின் வெற்றி.

ஒருவேளை ஒரு ரசனை குடும்பத்தின் நிம்மதியையோ, எதிர்காலத்தையோ பாதிக்குமெனில் அதைக்கணவன் மனைவி இருவரும் பொறுமையாய், தகவல்களுடன் விவாதித்துக் கொள்வதே நல்லது. அடுத்த நபருடைய விருப்பங்கள், வேலைகள், பணிகள், செயல்கள், ரசனைகள் குறித்துப் பேசுவது, விசாரிப்பது எல்லாம் நல்ல விடயங்கள். கணவனுக்கும் மனைவிக் கும் ஒரே ரசனைகள் அமைந்தால் சிக்கல்கள் பெருமளவில் குறைந்து விடும். ஆனால் அது அமைவது கடினம். அப்படியே அமைந்தாலும் சிக்கல்கள் எழாது என்று சொல்வதற்கில்லை.

ஒருவருடைய விருப்பத்தைப் பற்றி இன்னொருவர் பேசும்போது அது உப்பு சப்பற்ற விசாரிப்பாய் இல்லாமல் ஒரு நல்ல ஆரோக்கியமான விவாதம் அல்லது விமர்சனமாய் இருப்பது ரொம்ப நல்லது. கொஞ்சம் கொஞ்சம் விடயங்களைப் புரிந்துகொண்டு, தெரிந்து கொண்டு பேசுவது உறவின் இறுக்கத்தை நிச்சயம் அதிகரிக்கும்.

ரசனைகள் தனித்தனியே இருந்தாலும் அவற்றை இருவருமே பகிர்ந்து கொள்ளும்போதும், அது குறித்துப் பேசும்போதும் கணவன் மனைவி உரையாடல் அதிகரிக்கும். அது உறவை வலுப்படுத்தும். இன்னும் சொல்லப் போனால் வேறு வேறு ரசனைகள் உங்களை மிகவும் இறுக்க மாக்க உதவும்!

உங்கள் தனிப்பட்ட சந்தோஷங்கள் உங்களுடைய குடும்ப நேரத்தை திருடிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்களுடைய கடமை! ஒருவேளை கணவன் மனைவிக்கு ஆன்மிகத்தில் கூட வேறுபட்ட சிந்தனைகள் நம்பிக்கைகள் இருக்கலாம். அது உங்களுக்கு கொஞ்சம் கூட உடன்பாடற்ற ஒரு விடயமாய் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழல்களில் அந்த விடயத்தைக் குறித்த ஆக்ரோஷமாய் விவாதிப்பது, குத்திப் பேசிக் காயப்படுத்துவது போன்றவற்றை நிச்சயம் விலக்க வேண்டும்.

உங்களுடைய வாழ்க்கை உங்களுடைய ஆன்மிகத்தின் வெளிச்சத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை மட்டும் மனதில் கொள்ளுங்கள்.

தொலைவில் இருக்கும் சிகரத்தை அடைய, பாதத்துக்கு முன்னால் இருக்கும் பள்ளத்தை முதலில் சரி செய்ய வேண்டும். காலில் முள் தைத்தவன் பாதமெங்கும் வலி என்பான். முள்ளை அகற்றிவிட்டால் வலி நீங்கி வழி பிறக்கும். சுருக்கமாக, தம்பதியரின் ரசனை என்பது தனிப்பட்ட விடயம். அதை மதியுங்கள். ஊக்குவியுங்கள். அதைப் பற்றிப் பேசுங்கள். அது குறித்த ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உறவு வலுப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை நட்டத்தைத் தரும்



ஒரு பிச்சைக்காரர் விலையுயர்ந்த வைரமொன்றை வழியில் கண்டெடுத்தார். அதன் மதிப்பு என்னவென்று தெரியாமல் அதைத் தன்னுடனிருந்த கழுதையின் காதில் மாட்டிவிட்டார். இதை கண் காணித்துக் கொண்டிருந்த ஒரு வைர வியாபாரி அவரிடம் சென்று "இந்தக் கல்லை எனக்குக் கொடுத்தால் நான் உனக்கு பணம் தருகிறேன், எவ்வளவு வேண்டும் கேள்" என்றார். உடனே பிச்சைக்காரர், "அப்படியானால் ஒரு ரூபாய் தந்து விட்டு இந்தக் கல்லை வைத்துக்கொள்" என்றார். இன்னமும் குறைவாக வாங்கும் எண்ணத்துடன் அந்த வைரவியாபாரி, 'ஒருரூபாய் அதிகம்! நான் உனக்கு 50 சதம் தருகிறேன் இல்லையென்றால் வேண் டாம்'என்றார். "அப்படியானால் பரவாயில்லை. அது இந்த கழுதையின் காதிலேயே இருக்கட்டும்" என்றவாறே பிச்சைக்காரர் நடக்கலானார். வைர வியாபாரியோ, எப்படியும் அந்த பிச்சைக்காரர் தன்னிடம் அதை 50சதத்துக்கு தந்துவிடுவார் என்ற எண்ணத்துடன் காத்திருந்தார். அதற்குள் அங்கு வந்த இன்னொரு வியாபாரி அந்தப் பிச்சைக்காரரிடம் 1000 ரூபா தந்து அந்த வைரத்தை வாங்கிக் கொண்டார். இதைச் சற்றும் எதிர்பாராத முதல் வைர வியாபாரி அதிர்ச்சியுடன், 'அட அடி முட்டாளே! கோடி ரூபாய் மதிப்புள்ள வைரத்தை வெறும் ஆயிரத்துக்கு கொடுத்துவிட்டு இவ்வளவு மகிழ்ச்சியாகச் செல்கிறாயே! நன்றாக ஏமாந்து விட்டாய்' என்றார். அதைக் கேட்ட பிச்சைக்காரர், பலத்த சிரிப்புடன் ' யார் முட்டாள்?, எனக்கு அதன் மதிப்புத் தெரியாது அதனால் அதை இந்த விலைக்கு விற்றுவிட்டேன். மேலும் எனக்கு இதுவே மிகப் பெரிய தொகை. எனவே நான் மிகுந்த மகிழ்வுடனிருக்கிறேன். அதன் மதிப்பு தெரிந்தும் வெறும் 50சதத்துக்கு ஆசைப்பட்டு அதை இழந்து விட்டாயே..! இது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்..!' என்ற வாறே நடக்கலானார். பேராசை கொண்ட இந்த வைர வியாபாரி போல சில வேளைகளில் நாமும் நடந்துகொள்வதுண்டல்லாவா?




# பொது அறிவுத் தகவல்கள்

- உலக வானிலை மையம் அமைந்துள்ள இடம், ஜெனீவா.
- யுரேனஸ் கிரகம் சூரியனைச் சுற்றி வர எடுக்கும் காலம், 84 ஆண்டுகள்.
- உலகிலேயே அதிக அளவில் மீன் பிடியில் ஈடுபடும் நாடு, ஜப்பான்.
- புத்தர் பிறந்த இடம், லும்பினி.
- 'புனித நகரம்' என்று அழைக்கப்படுவது, ஜெருசலேம்.
- உலகின் மிகப்பெரிய தீபகற்பம், அரேபியா.
- தொலைக்காட்சி நிலையங்கள் அதிகம் உள்ள நாடு, அமெரிக்கா.
- ஜப்பான் நாட்டில் தான் அதிக அளவில் ஆட்டோக்கள் தயாரிக்கப்படுகின்றன.
- மிகப்பெரிய பூவைப் பூக்கும் தாவரம், ராப்லேசியா.
- பச்சோந்தியின் நாக்கு, அதன் உடலைப்போன்று இரண்டு 'மடங்கு நீளமாக இருக்கும்.
- வாசனைப் பொருள்களின் ராணி என அழைக்கப்படுவது, ஏலக்காய்.



# உலகில் மிகப்பெரிய பாலைவனங்கள்

- சகாரா பாலைவனம் (வடஆபிரிக்கா) – 90,64,650 ச.கி.மீ
- அரேபியன் பாலைவனம் (மத்திய கிழக்கு ஆசியா) – 25,89,900 ச.கி.மீ
- கோபி (சீனா) – 12,94,950 ச.கி.மீ
- படகோனியன் (ஆர்ஜென்ரீனா) – 6,73,374 ச.கி.மீ
- கிரேட் விக்டோரியா (ஆஸ்திரேலியா) – 6,47,475 ச.கி.மீ.



# மற்றவர்கள் உங்களை விரும்பச் செய்வது எப்படி?

இந்த உலகத்தில் வெற்றி பெற்றவர்களின் சுய சரிதையைப் படித்தோம் என்றால் அவர்களிடத்தில் தற்பெருமை என்ற குணமே இருக்காது. தன்னை விட வயதில் சிறியவர் களாக இருந்தாலும் சரி அல்லது வயதில் பெரியவர்களாக இருந்தாலும் சரி உரியவர்களுக்கு உரியமரியாதைதருவதில்அத்தகையோர் தயங்க மாட்டார்கள். நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும், உண்மை என்பது அன்பாகும் பெரும் பணிவு என்பது பண்பாகும் என்ற பழைய திரைப் பட பாடலுக்கு ஏற்ப ஒருவர் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். தற்பெருமை என்பது ஒருவரை மற்றவர்கள் அருவருக்கச் செய்து விடும். தற்பெருமை பேசும் ஒருவரைக் கண்டாலே மற்றவர்கள் தலை தெறிக்க ஓடி விடுவார்கள். சிலரைப் பார்த்தீர்கள் என்றால் வாயை திறந் தாலே தன்னைப் பற்றியே பேசிக் கொண்டு இருப்பார்கள். எதிரில் உட்கார்ந்து இருப்பவர் நெளிந்து கொண்டு இருப்பதை கூடப் புரிந்து கொள்ளாமால் அவர் பாட்டுக்கு தன்னுடைய சுய புராணத்தைபாடிக் கொண்டு இருப்பார். தற்பெருமை பேசும் ஒருவரை மற்றவர்கள் விரும்பமாட்டார்கள். தெரியாத விஷயத்தை அடக்கத்துடன் தெரிந்து கொள்ளுங்கள். வயது வித்தியாசம் பார்க்காதீர்கள். இவன் என்ன பெரிய ஆள், இவனிடம் நாம் ஏன் தெரிந்து கொள்ளவேண்டும் என நினைக்காதீர்கள்.உங்களது அடக்கம் மற்றவர்கள் உங்களை நேசிக்க செய்யும். மற்றவர்களிடம் பழகும் போது எந்த வித சுய நலத் துடனும் பழகாதீர்கள். பின்னால் உங்களுக்கு ஆகவேண்டிய காரியத்துக்காக மற்றவர்களிடம் போலியாகப் பழகாதீர்கள். சுயநலமில்லாத உங்களது பழக்கம்மற்றவர்களிடத்து உங்களை பெரிதும் விரும்பச் செய்யும். நட்புக்கு முக்கியத்துவம் கொடுங்கள். கள்ளம் கபடமில்லாத நட்புடன் பழகுங்கள். அதே சமயத்தில் உங்கள் நட்பை மற்றவர்கள் அவர்களுடைய சுயநலத்துக்காகப் பயன்படுத்த நினைக்கும்போது நாசூக்காக அவர்கள் மனம் கோணாதபடி ஒதுங்கிக் கொள்ளுங்கள். நல்லவர்களுடைய நட்பு கிடைக்கும் போது உங்கள் நட்பு கிடைத்தமைக்கு அவர்கள் பெருமை படும்படி உங் கள் பழக்க வழக் கங்கள் எந்த வித சுயநலமும் இல் லாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள சிலபிடிக்காதகுணங்களைத்தவிர்த்து விடுங்கள். உதாரணமாக கோபம், போன்றவற்றை அடியோடு ஒழித்து விடுங்கள். ஏனென்றால் கோபம், தற்பெருமை போன்ற மனப்பான்மை உள்ளவர்களை பொதுவாக மற்றவர்கள் நேசிக்கமாட்டர்கள். பல நல்லவர்களின்நட்பை இது போன்ற குணங்கள் இருந்தால் நீங்கள் இழக்க வேண்டி வரும். எல்லோரையும் விரும்ப கற்று கொள்ளுங்கள். யாரையும் வெறுக்கக் கூடாது. மற்றவர்களிடம் உங்களுக்கு பிடிக்க தகாத விடயங்கள் இருந்தால் அவர்களின் மனம் புண்படாதபடி நாசூக்காக ஒதுங்கிக் கொள்ளுங்கள்.

மற்றவர்களை மனம் திறந்து பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களிடம் ஒருவர் பேசும்போது அவருடைய பேச்சில் தெரியும் நல்ல பண்புகளையும் செயல்களையும் குணங்களை மனம் திறந்து பாராட் டுங்கள். உங்கள் பாராட்டின் மூல மாக ஒருவருக்கு அங்கீகாரம் கிடைக்கின்றபோது அவர் உங்களை பன்மடங்கு விரும்புவார். மற்றவர்களின் துன்பத்திலும் துக்கத்திலும் பங்கு கொண்டு அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறுங்கள். உங்களுடைய ஆறுதல் வார்த்தைகள் காரணமாக உங்களைப்பற்றி ஓர் உயர்வான எண்ணத்தை அவர்களது மனதில் எப் போதும் நிலைக்க வைக்கும் சரி, மேலே கூறிய பண்புகளை மற்றவர்கள் விரும்ப வேண்டும் என்றால் கடைப்பிடிக்க முடியுமா? சற்று சந் தேகம்தான். ஏனென்றால் ஒவ் வொருவருடைய வேலை, தொழில், குடும்பச் சூழ்நிலை போன்ற காரணங்களினால் நல்ல பண்புகளாக இருந்தாலும் கடைப் பிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கும். அதனால் மற்றவர்கள் வெறுக்கும் நிலையோ அல்லது விரும்பாத சூழ்நிலையோ இருக்கலாம். அப்படி என் றால் இதற்கு என்ன தான் தீர்வு? உங்கள் மனது தான் அதற்குச் சரியான தீர்வை அல்லது வழி யைக் காட்டும். உங்கள் மனது சரியான தீர்வு அல்லது வழியைக் காட்டத் தியானத்தின் துணையை நாடலாம். தியானத்தினால் நட்பு மனப்பான்மை பெருகும். நட்பு மனப்பான்மை பெருகுகின்ற போது மற்றவர்கள் உங்களை அதிகம் நேசிக்க தொடங்கி விடுவார்கள். தியானத்தின் மூலம் அன்பு அதிக அளவில் வளர்கின்றது என பல ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தியானத்தின் மூலம் கோபம், தற்பெருமை, கள்ளம், கபடம், சூது, வாது போன்ற எண்ணங்கள் களையப்படுகின்றன. சூது வாது, கபடம் இல்லாத ஒரு வரை பொதுவாக எல்லோருமே விரும்புவர்.

அதே போன்று உண்மையான நட்பு எது, பொய்யான நட்பு எது என்பதை மற்றவர்களைப் பார்த்த உடனேயே எடை போட செய்யும் சக்தியும் தியானத்துக்கு உண்டு. அதனால் போலியானநட்புக் கொண்டவர்களை சுலபமாக அடையாளம் காண வைக்கும் சக்தி தியானத்துக்கு உண்டு. எனவே ஒருவருடைய மனதை புண்படுத்தாத, நல்ல குணங்கள்உங்களையும் அறியாமல் உங்களிடம் குடியிருக்கும் போது மற்றவர்கள் உங்களை அதிகம் விரும்புவார்கள் என்பதில் சந் தேகம் இல்லை.



# சினிமாப் பாணியில் லீசிங் குழு அடாவடி

## ஓட்டோச் சாரதி காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

லீசிங்கில் பெறப்பட்ட ஓட்டோவுக்குரிய தவணைப் பணத்தைச் செலுத்த தாமதமாகியதால் அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்குச் சென்ற லீசிங் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவர் தலைமையிலான குழுவினர், சினிமாப் பாணியில் அந்த ஓட்டோவின் ஒப்பந்த அடிப்படையிலான சாரதியை அடித்து, தள்ளிவிழுத்திக் காயப்படுத்திவிட்டு ஓட்டோவைப் பறித்துச் சென்றுள்ளனர்.

யாழ்.பஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் பொதுமக்கள் பலர் முன்னிலையில் அநாகரிகமாக நடந்துகொண்டுள்ளனர் இந்தக் குழுவினர். இந்தக் குழுவினர்.தாக்கியதால் காயமடைந்த ஓட்டோச் சாரதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வவுனியாவில் கிளை ஒன்றைக் கொண்டுள்ள லீசிங் நிறுவனம் ஒன்றிடமிருந்து குறித்த ஓட்டோவைக் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் லீசிங் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்தார். பின்னர் அதனை யாழ்ப்பாணத்திலுள்ள தனக்கு அதனை விற்பனை செய்யத் திட்டமிட்ட நிலையில், ஒரு மாதத்துக்கு முன்னர் அதனை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டதாக அதன் சாரதியான வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் வ.வகிர்தன் தெரிவித்தார்.

குறித்த ஓட்டோவைத் தான் கொள்வனவு செய்யவுள்ளதாகவும், அதற்காகச் செலுத்த வேண்டிய பணத்தைச் சில நாள்களில் தருவதாகவும் குறித்த லீசிங் நிறுவனத்திடம் கூறியிருந்ததாகவும், அதனை அந்த நிறுவனத்தினர் ஏற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மாதாந்தம் 7 ஆயிரம் ரூபா செலுத்துவதாகவும், ஓட்டோவை முதலில் கொள்வனவு செய்தவர் 43 ஆயிரம் ரூபா பணம் செலுத்தவேண்டியிருந்ததாகவும் அதனையும் தான் செலுத்திவிட்டு முழு ஆவணத்தையும் பெற்றுக் கொள்வதாகக் கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்நிலையிலேயே நேற்று இருவரை ஓட்டோவில் ஏற்றிச் சென்றபோது யாழ்.பஸ் நிலையம் முன்பாக 7 பேர் கொண்ட குழுவினர் மறித்துத் தன்னைத் தாக்கி தள்ளி விழுத்தி காயப்படுத்தியதாகவும் ஆயுதம் ஒன்றினால் தன்னைத் தாக்கியதாகவும் அவர் தெரவித்தார்.

எனினும் சில மாதங்களுக்குரிய தவணைப் பணத்தை அவர் செலுத்தவில்லை என்றும் அதனால் அந்த ஓட்டோவைக் கொண்டு செல்ல முற்பட்டபோது அதன் சாரதி அதனைத் தடுத்துள்ளார் என்றும், இதனையடுத்தே சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தையடுத்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் காயமடைந்தவர் தெரிவித்தார்.

முறைப்பாட்டை உறுதிப்படுத்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி.கனகராஜ் அது பற்றி யாழ்.தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் அறிக்கையைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக லீசிங் நிறுவனத்தைச் சேர்ந்தவர் என்றுகூறி யாழ்.பருத்தித்துறை வீதியில் வசிக்கும் பிறேம் என்பவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் திங்கட்கிழமை வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட யாழ்.நீதிவான் பெ.சிவகுமார் ஏனைய சந்தேகநபர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளார்.

ஓட்டோ தற்போது யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.பருத்தித்துறை வீதியில் உள்ள குறித்த லீசிங் நிறுவன முகாமையாளருடன் தொடர்பு கொண்டுகேட்டபோது, ஓட்டோ வவுனியா கிளையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால் வவுனியா முகாமையாளருடனேயே கதைக்க வேண்டும் என்று தெரிவித்தார். (த-4-103)


**காணி விற்பனைக்கு**

நீர்வேலி மேற்கில் மில் ஒழுங்கையில் "கோம்டையன்புலம்" என்ற இடத்தில் 8 பரப்பு தோட்டக்காணி உடன்விற்பனைக்கு உண்டு. உடனடியாக பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியும். தொடர்பு:- 077 087 1252
(60940)

**பெண் பணியாளர் தேவை**

இராமநாதன் வீதி நாச்சிமார் கோயில் அண்மையில் உள்ள கடை ஒன்றுக்கு பெண் பணியாளர் தேவை. யாழ் மாநகர சபை பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 071 762 2719
(60938) தொடர்பு:- 078 582 8252

**Brighten Economics Hall**
342,Stanly Rd.
(Near D.M.I)
GAQ / BA Part I
ENGLISH
Revision & Paper
R.MAHESWARAN
(BA.Dip.in.Eng.,
Sp.Trd.Eng)
Sat/Sun 8-9/
11-12/1-2/
6-7.30pm
Tamil: K.தர்மராஜா (M.A)
B.A - (JAFFNA) FINAL-2-3
ஏனைய பாடங்களும்
ஆரம்பம்:
13.06.2015 Sat

விஷேட விலைக்குறைப்பு

4R(10 படத்திற்கு மேல்) - 10.00

அழைப்பிதழ்கள்

4R(100 படத்திற்கு மேல்) - 9.00
4R(300 படத்திற்கு மேல்) - 8.00
4R(100UP INKJET PRINT) - 6.00
12x30 NT ALBUM PRINT - 200.00
12X30 EMBOSSING PRINT -2000.00

MOORTHY DIGITAL
62/20, STANLY ROAD, JAFFNA.
JAFFNA ROAD, MANIPAY

இரு தசாப்தம் கடந்தும் ஈழத்து இசைவானில்
இனிய உலா வரும் இசை நட்சத்திரம்



யாழ்.
ஸப்தஸ்வரா இசைக்குழு

ஸ்ரீகுகனின் இனிய இசை நயத்துடன் புகழ் பூத்த பாடகர்கள் சிறந்த இசைக்கலைஞர்கள் துல்லியமான ஒலி நயத்துடன் என்றும் முன்னணியில்.
விழாக்கள் சிறக்க அழைத்திடுங்கள்.
077 6980573
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு.


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

"விஸ்வகீர்த்தி" "இரத்தினதீபம்"
ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்
J.P (அகில இலங்கை) NDT Agriculture



கிளிநொச்சி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் (உதவி முகாமையாளர் - தொழில்நுட்பம்) தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை. அகில இலங்கை சமாதான நீதி வானும் சிறந்த சமூக சேவையாளரும் ஆகிய இவர் ஏற்கனவே விஸ்வகீர்த்தி விருதினைப் பெற்றதுடன் சிறந்த சமூக, சமய பணிகள் ஆற்றியமைக்காக கண்டி மலையக கலை, கலாசார சங்கமும், யாழ் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து 07.06. 2015 இல் கொட்டடி சனசமூக நிலையத்தில் நடத்திய சான்றோர் கௌரவிப்பும், விருது வழங்கல் விழாவில் இரத்தினதீபம் எனும் சமூக சேவைக்கான விருதினை இந்தியத் துணைத் தூதுவர் திரு. A. நடராஜன் அவர்களினால் வழங்கிக் கௌர விக்கப்பட்டார். இவர் ஆற்றிய சமய, சமூக தென்னை அபிவிருத்திச் சேவைகளையும் தன்னலமற்று சிறப்பான முறையில் செய்கின்றமைக்குப் பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகள் பெற்று நீடுழி காலம் அவரும் அவர்தம் குடும்பமும் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர். கலாநிதி க. மோகனதாஸ்
தலைவர், வட மாகாண தெங்கு செய்கையாளர் சங்கம், யாழ்ப்பாணம்.


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



அன்னை ஸ்ரீ இராஜமகாமாரி துணை



செருத்தனைப்பதி அருள்மிகு
ஸ்ரீ இராஜமகாமாரி அம்மன் திருக்கோயில்
புளியங்கூடல் ஊர்காவற்றுறை
பெருந் திருவிழா - 2015

அம்பிகை அருளாட்சியே!

உலகாளும் ஒருசக்தியாக சுடர்மணித்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத் தீபகற்பகத்தின் ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதியில் வீற்றிருந்து நாம் வேண்டும் வரமெல்லாம் எமக்களித்து நல்வாழ் வருளும் கருணை வடிவான கற்பகவல்லி எமையாளும் அன்னை ஸ்ரீ இராஜமகாமாரி அம்பிகைக்கு மங்களகரமான மன்மத வருடம் வைகாசித் திங்கள் 20 ஆம் நாள் (12.06.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் பெருந் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டு தினங்கள் நடைபெறும்.

விழாக்கால நிகழ்வுகள்

13 ஆம் திருவிழா (24.06.2015) புதன்கிழமை காலை கைலாசவாகன உற்சவம் (கற்பூரச்சட்டி நேர்த்திக்கடன் வழிபாடு) மாலை பூரகம்
15 ஆம் திருவிழா (26.06.2015) வெள்ளிக்கிழமை மாலை சப்பை இரத உற்சவம்
16 ஆம் திருவிழா (27.06.2015) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவம்
17 ஆம் திருவிழா (28.06.2015) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம்

குறிப்பு: எமையாளும் அன்னையினுடைய மெய்யடியார்கள் யாபேரும் திருவிழாக் காலங்களில் சைவ சமய ஆசார சீலர்களாக தமிழ் பண்பாட்டு உடையணிந்து கோயி லுக்கு வருகை தந்து அன்னையின் பெரும் புகழை அன்றி பிறவார்த்தைகள் யாதொன்றும் பேசாமல் அமைதிகாத்து அம்பிகையின் பேரருள் பெற்று பேரானந்தப் பெருவாழ் வினைப்பெற்று ஏகுமாறு பணிவன்புடன் சிரம் தாழ்த்தி கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு: விழாக்காலங்களில் உத்தரவின்றி திருக்கோயில் உட்பிரகாரத்தினுள் ஒளிப்படக் கருவிகள் கையடக்கத்தொலைபேசி பாவனைகளை தவிர்க்கவும்

விசேட அறிவித்தல்: இவ்வாண்டு பெரும் திருவிழாவின்போது அன்னையின் புகழ் பாடும் பாடல்கள் அடங்கிய " எனையாளும் என் அன்னை" ஒலிப்பேழை வெளியிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளியீட்டு விழா தொடர்பான விபரண பத்திரிகை விரைவில் உங்களின் கரங்களை வந்தடையும். இவ்வுலகில் பரந்து வாழும் அன்னை அடியார்கள் அனைவருக்கும் இப்பிரதிகள் கிடைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெளியீட்டு விழாவில் சிறப்பு பிரதிகள் பெற்று அன்னையின் பேரருளினை பெற்றுக்கொள்ள விரும்பும் அன்பர்கள் தங்களுடைய வரவினை பதிவுசெய்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

புளியங்கூடல்.
ஊர்காவற்றுறை.

அம்பிகையின் அரும்பணியின் கீழ்
திருக்கோயில் அறங்காவலர்
து.சிவஞானச்செல்வம் செந்தூரன்



**உருண்டைக் கற்கள் வழங்குவதற்கான விலை மனுக்கோரல் அழைப்பு**

மதவாச்சி ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள வரையறுக்கப்பட்ட IRCON சர்வதேச நிறுவனத்திற்கு தேவையான உருண்டைக்கற்களை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் அழைப்பினை IRCON நிறுவன இணை முகாமையாளரால் விடப்படுகின்றது. 9" x 12" அளவுள்ள 5000 மெற்றிக்தொன் கற்கள் வழங்கப்படும் இடத்தில் இருந்து ஏற்றி இறக்கும் கூலிகள் உள்ளடங்கலாக குறிப்பிடவேண்டும். (ஏற்றி இறக்குவதற்கு IRCON நிறுவனத்தால் போக்குவரத்து டிப்பர் வழங்கப்படும்) 5000 மெற்றிக்தொன் கற்களை 20 நாள்களுக்குள் வழங்க வேண்டும்.

ஆர்வமுள்ள வணிக நிலையங்கள், வியாபாரிகள் மற்றும் குவாரி நிலைய உரிமையாளர்கள் மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்வதற்கு மதவாச்சியில் உள்ள IRCON நிறுவனத்துடன் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை 15.06.2015 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

(Anuj Pradhan) இணை முகாமையாளர்
IRCON International Ltd
தொ.பே:- 071 022 4645

IRCON INTERNATIONAL LIMITED
(A Government of India undertaking)

**NOTICE INVITING QUOTATION FOR SUPPLY OF BOULDER**

Joint General Manager, IRCON INTERNATIONAL LIMITED (IRCON), Near Railway station, Madawachchiya on Mannar road- A14, invites quotation for supply of 5000 MT of boulders of size 9" x12". The scope of work includes loading of boulders to IRCON's tippers at the supplier quarry site excluding the transportation (transportation shall be carried out by IRCON) from bonafied firms / companies / joint ventures having quarry. The total 5000MT boulders may be supplied within 20days. The interested firms/ parties or quarry owners for further clarification may contact the undersigned at his Madawachchiya office during office hours from 8.00 am to 6.00 pm before coming 15.06.2015

For and on behalf of
IRCON International Ltd.
(Anuj Pradhan)
JointGeneral Manager
Contact No- 0710224645

(60936) (10.6.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள விடயம் மட்டும் தான் மலையக மக்கள் பிரச்சினையா?

*தவறு என்று இடித்துரைக்கிறார் மனோ*

கொழும்பு, ஜூன் 12

மலையகத் தமிழர்களுக்கு சம்பளம்' மட்டும்தான் பிரச்சினை. வேறு ஏதும் இல்லை என்று கருதுகின்றன அரசும், பெரும்பான்மைக் கட்சிகளும். இது தவறு என்று இடித்துக் காட்டுகின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி என்பனவற்றின் தலைவரான மனோ கணேசன்.

கடந்த சனிக்கிழமை இறக்குவானையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே மனோ கணேசன் இப்படிக் கூறினார்.

நாம் 200 வருடங்கள் தாண்டிய சரித்திரம் கொண்ட வர்கள் என்று பெருமைப் பட்டுக்கொண்டால் மட்டும் போதாது.

நாம் கடந்துவந்த பாதை கரடு முரடானது. எமது உரிமைகளை எவரும் தாம்பாளத்தில் வைத்துக் கொடுக்கப்போவதில்லை.

இதுவரை காலமும் நாம் பல தலைவர்களை உருவாக்கியுள்ளோம். நாம் வாக்களித்து தலைவர்களாக்கி உள்ளே அனுப்பிவிட்டு, நாம் வெளியில் இருந்து கை தட்டிக்கொண்டிருக்க முடியாது. நாம் வாக்களிக்க மட்டும் பிறந்தவர்கள் அல்லர். வாக்கு கேட்கும் உரிமையும் எமக்கு உண்டு. எம்முடைய வாக்கைக் கொண்டு ஏனையவர்களைத் தலைவர்களாக்க முடியும் என்றால், ஏன் எமது வாக்குப் பலத்தை வைத்து எம்மவர்களைத் தலைவர்களாக்க முடியாது? உங்கள் மத்தியில் தலைவர்கள் இருக்கின்றார்கள். தலைவர்களை இறக்குமதி செய்யவேண்டியதில்லை.

கடந்த காலங்களில் பெரும் பான்மைக் கட்சிகளுக்கு ஆதரவை வழங்கி அவர்களை ஆள்பவர்களாக்கியுள்ளோம். இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கூடிய அதிகாரத்தில் அமர்த்தியவர்கள் தமிழ்பேசும் சிறுபான்மையினரான தமிழர்களும், முஸ்லிம்களும்தான். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

வடக்கு, கிழக்கிற்கு வெளியே ஊவா மாகாணம், மத்திய மாகாணம், சப்பிரகமுவ மா காணம் உட்பட தெனியாய பகுதியிலும் மலையக மக்கள் வாழ்கின்றனர். எமது பலம் எமக் குத் தெரிவதில்லை. மலையகத் தமிழர்கள் என்றால் அவர்கள் சம்பளத்திற்காகப் போராடுபவர்கள். சம்பளம் மட்டும்தான் அவர்களின் பிரச்சினை. வேறு எதுவும் இல்லை என்று அரசும், பெரும்பான்மைக் கட்சிகளும் கருதுகின்றன. இது தவறு.

ஆனால், நாம் நம்பியிருந்த சங்கங்களும், தலைவர்களும் எம்மை வைத்து குளிர்காய்ந்து தம்மை வளர்த்துக்கொண்டனரேயன்றி, எம்மை வளர்த்துவிடவில்லை. இந்த நிலைமை மாறவேண்டும்.

ஏனைய சமூகத்தவர்களைப்போன்றே எமக்கும் அடிப்படைத்தேவைகளும், அபிலாஷைகளும் இருக்கின்றன. இவற்றை நாம்தான் வெளிப்படுத்த வேண்டுமேயன்றி எவரையும் எதிர்பார்க்க முடியாது.

இதனால் எம்முடைய பலத்தை இங்கு மட்டுமல்ல, வெளி உலகிற்கும் வெளிப்படுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்டு குரல் எழுப்பப்படுகின்றது. அமைச்சர்களான ரவூப் ஹக்கீமும், ரிஷாத் பதியுதீனும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் செல்கின்றனர். ஆனால், எம்முடைய பிரச்சினைகள் தொப்புள்கொடி உறவு எனக் கூறும் இந்தியாவுக்குகூடத் தெரியவில்லை. இதுவும் எமது தலைமைகளின் இயலாமையே.

இதனால்தான் ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய மூன்றும் இணைந்து தமிழ் முற்போக்குக் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். இக்கட்சிகளின் உதயம் பலருக்கு அதிர்ச்சியையும், கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பல வெளிநாட்டுத் தூதுவர்கள் இப்போதே எம்முடன் நேரடியாகத் தொடர்புகொள்ள ஆரம்பித்துவிட்டனர்.

எந்தவொரு அரசியல் கட்சி யாக இருந்தாலும் எம்மைத் தேடிவந்து கூட்டு வைக்க வரவேண்டும். அப்படி எம்மைத் தேடி வருபவர்களுள் யார் எமக்கு நன்மை செய்யக் கூடியவர்கள் என்பதைப் பரிசீலித்து நாமே முடிவு எடுப்போம்.

இக்கூட்டணி தேர்தல் காலக் கூட்டணி என்று கருதவேண்டாம். நாம் ஓர் இலட்சிய நோக்குடன் இதனை அமைத்துள்ளோம். எனவே, இக்கூட்டணி எமது மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு தூண்டுகோலாகவும், காவலரணாகவும் இருந்து செயற்படும். இது உறுதி" – என்றார் மனோ கணேசன். (த)

# ஊடகவியல் மாணவருக்கு இரண்டு நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 12

இந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும், ஊடகவியல் மாணவர்களுக்கான கருத்தரங்கு, நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் இடம்பெறவுள்ளது.

பிசப் சவுந்தரம் பல்கலைக்கழகத்தில் இந்தக் கருத்தரங்கு, காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையில் இடம்பெறவுள்ளதாக, அதன் இயக்குநர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில், வளவாளர்களாக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை, யாழ்.பல் கலைக்கழக ஊடக விரிவுரையாளர் கிருத்திக்கா தர்மராஜா, தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் பி.இராஜேஸ்வரன், ஊடக ஆசிரியர்களான என்.கஜிதரன், வ.நவநீதன், யோ.கோணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த–5)

# சிறுவர்களுக்குப் புகைபொருள் விற்ற 20 வர்த்தகர்கள் சிக்கினர்

தென்மராட்சி, ஜூன் 12

21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்த 20 வர்த்தகர்களுக்கு நேற்று முன்தினம் தலா 4ஆயிரம் ரூபா வீதம் 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

போதைப் பொருள்கள் எதிர்ப்ப வாரத்தையொட்டி சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தின் பல வர்த்தக நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகளை நடத்தினர்.

அவ்வேளையில் 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 20 வர்த்தகர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்து அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகள் நேற்று முன் தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 4 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (த–9)

# சிவில் உறுப்பினர்கள் இன்றி அரசமைப்புச் சபை இயங்கும்

கொழும்பு, ஜூன் 12

அரசியலமைப்புச் சபைக்கு சிவில் உறுப்பினர்கள் தற்போதைய நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்படமாட்டார்கள் என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

சிவில் உறுப்பினர்கள் நியமிக்கப்படாமல் தற்போதுள்ள 7 உறுப்பினர்களுடன் அரசமைப்புச் சபையை இயங்க செய்வது என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், 7 உறுப்பினர்களுடன் அரசமைப்புச் சபை கூடிய சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க உள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். (த)

# ஜகத் டயஸின் நியமனம்; அதிருப்தியில் அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 12

போர்க்குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் போன்ற ஒருவரை இராணுவப் பணியாளர்களின் தலைமை அதிகாரியாக நியமித்தன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசு கௌரவத்தைக் குறைத்துக் கொண்டுள்ளதாக அமெரிக்க செனட் உறுப்பினர் பெட்ரிக் லீஹி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையின் நீதி ஆணைக்குழுவில் இலங்கை சம்பந்தமாக சமர்ப்பித்துள்ள அறிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் புதிய அரசு ஜனநாயகம் தொடர்பில் மேற்கொண்டுள்ள பல முன்னேற்றநடவடிக்கைகள் பற்றி அவர் மகிழ்ச்சி தெரிவித்துள் ளார்.

அத்துடன் ஜகத் டயஸ் போன்ற குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும் அதிகாரிகளை இராணுவப் பணியாளர்களின் தலைமை அதிகாரியாக நியமித்தமை போன்றவை நடந்திருக்கக் கூடாது எனவும் அறிக்கையில் லீஹி சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கை மேற்கொள்ள உள்ள உள்நாட்டு விசாரணைகளை ஜெனிவா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியான பின்னர் ஆரம்பிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# வரி செலுத்தாத சிகரெட் விற்றவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 12

தீர்வை செலுத்தப்படாத சிகரெட் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவக்ச்சேரி மதுவரி நிலையத்தினர் போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரத்தில் வர்த்தக நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகளை நடத்தினர்.

அவ்வேளையில் சாவகச்சேரி–கச்சாய் வீதியில் உள்ள கடையொன்றில் தீர்வையிடப்படாத சிகரெட் விற்பனைக்கு வைத்திருந்ததைக் கண்டு அதனைக் கைப்பற்றியதுடன் அவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தீர்வை செலுத்தப்படாத சிகரெட் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய இரு குற்றங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது..

இதேவேளை சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் எற்படக்கூடிய வகையில் புகையிலை உற்பத்திப் பொருளைப் பாவித்தமைக்கு இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

புலோப்பளை மற்றம் சாவகச்சேரி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர் பேருந்து நிலையத்தில் பீடி புகைத்த போது சாவகசசேரி மதுவரி நிலையத்தினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (த–9)

# பாமாலை இறுவட்டு வெளியீடு

தென்மராட்சி, ஜூன் 12

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன்பாமாலை இறுவட்டு வெளியீடு இன்று பி.ப. 3.00 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும் க.இராசகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும், கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனும் கலந்து கொள்வர்.

ஆசியுரையை ஆலய பிரதம குரு ஸ்ரீசக்தி கிரியா குருமணி சிவஸ்ரீ இ.குமாரசாமிக் குருக்கள் நிகழ்த்துவார். வெளியீட்டுரையை செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனும் நயப்புரையை வே.உதயன் க.கோணேஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

இந்த நிகழ்வில் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறும். (த–9)

## உடல் பருமன்; தொலைக்காட்சியில் சிறப்புரை நாளை

ஓய்வுபெற்ற அரச சித்தவைத்திய பரம்பரை வைத்தியருமான, செல்லத்துரை பரமசிவம்பிள்ளை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உடல் பருமன் குறித்து நேத்திரா தொலைக் காட்சியில் சிறப்புரை ஆற்றுவார்.

# விமான நிலையத்தில் கைவிடப்பட்ட 100 வெளிநாட்டு மதுப்போத்தல்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 12

கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் விமான சேவை வாகன தரிப்பிடம் பகுதியில் கைவிடப்பட்ட அறையொன்றில் இருந்து வெளிநாட்டு மதுபான போத்தல்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

விமான நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

9 வர்க்க மது போத்தல்கள் 100 இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது குறித்து கலால் திணைக்களத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். (த)


**கண்ணீர் அஞ்சலி**

**சிவஸ்ரீ சுப்பையா ஐயர் கார்த்திகேசு ஐயர்**



சிவஸ்ரீ சுப்பையா ஐயர் கார்த்திகேசு ஐயர் அவர்கள் 30.05.2015 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்லகர்ணந்தோட்ட கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

நாரந்தனை- சரவணை
கர்ணந் தோட்டம்
ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில்.

ஆலய பரிபாலன சபையினர்.

(60941)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வாழ்வை பாதுகாப்போம்

## பிரதமர் ரணில் அழைப்பு



கொழும்பு, ஜூன் 12
சிறுவர்களின் வாழ்க்கையை பாதுகாப்பானதாக்குவோம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதனை தடுக்கும் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சிறுவர்களே நாட்டின் எதிர்காலம் என தெளிவாக இந்த புதிய அரசு புரிந்துகொண்டுள்ளது.
எனவே சிறுவர்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசு முனைப்புடன் செயற்படும்.
சிறுவர் தொழிலாளர்களை ஒழிப்பதற்கு சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கும் நாடுகளில் இலங்கை முன்னணி வகிக்கின்றது.
வறுமை காரணமாக குழந்தைச் செல்வங்கள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற துரதிர்ஷ்ட வசமான நிலைமை நீடித்து வருகின்றது.
எனினும் சிறுவர்கள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவனை தடுக்க சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது.
சிறுவர்களுக்கு தேவையான கல்வியை வழங்கி அவர்களின் வாழ்க்கையை செழிக்கச்செய்ய அரசு அர்ப்பணிப்புடன் நடவடிக்கை எடுக்கும்–என்றார். (த)

# 29 ஆம் திகதி வரை டிரான் கைதாகார்

கொழும்பு, ஜூன் 12
நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை கைது செய்யப்பட மாட்டார் என சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
தன்னை கைது செய்ய தயாராகி வருவதாக தெரிவித்து, டிரான் அலஸ் இதற்கு முன்னர் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.
இந்த மனுவை விசாரணைக்கு எடுக்கவிருந்த நீதியரசர்கள் குழு நேற்று நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை.
இதேவேளை, பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் வெளிநாடு சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் மனு, நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படும் வரை அவர் கைது செய்யப்படமாட்டார் என சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (த)

# வெளிநாட்டுக்கு செல்லும் பெண்களுக்கு வரையறை

கொழும்பு, ஜூன் 12
வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்று வெளிநாடு செல்லும் பெண்கள், தங்களது குடும்ப பின்னணி தொடர்பான அறிக்கையொன்றை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்னும் நடைமுறை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
பணிப்பெண்களாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் செல்லும் பெண்களுக்கே இந்த நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்தது.
5 வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள பெண்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடைமுறை கொண்டுவரப்படவுள்ளது என பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# லண்டன் சந்திப்பு: இன்று விளக்கம்

கொழும்பு, ஜூன் 12
உலகத் தமிழர் பேரவையுடன் லண்டனில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பேச்சு நடத்திய விவகாரம் இலங்கை அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், லண்டன் பேச்சு குறித்து இன்று சபையில் முழுமையான விளக்கமளிக்கப்படும்" – என்று அரசு நேற்றுத் தெரிவித்தது.
உலகத் தமிழர் பேரவையுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர லண்டனில் கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் முக்கிய பேச்சொன்றை நடத்தியிருந்தார். இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.
இந்நிலையில், இவ்வாறான தொரு பேச்சு நடத்துவதற்கு வெளிவிவகார அமைச்சரால் ஜனாதிபதி, பிரதமர், அமைச் சரவையின் அனுமதி பெறப்பட்டதா? என்றும், புலிகள் மீதான தடைநீக்கம், புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடைநீக்கம் மற்றும் போர்க்குற்ற விசாரணை உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசப்பட்டதா? என்றும் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதுடன், லண்டன் பேச்சு குறித்து முழுமையான அறிக்கையொன்றை சபையில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். இதையடுத்து எதிர்க் கட்சித் தலைவரின் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் உரையாற்றிய சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் கேள்விகளுக்கு நாளை (இன்று) பதிலளிக்கப்படும் என்று தெரிவித்தார். (த–சி)

# பெண் சடலம் மீட்பு

## பணம், நகைகள் மாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
இளம் குடும்பப் பெண் ஒருவர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அங்கிருந்த பணம், நகைகள் என்பனவற்றைம் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பூநகரி சித்தன்குறிச்சி என்ற இடத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கருணாநிதி லலிராணி (வயது 30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவர் 3 வயதுக் குழந்தையின் தாயாவார்.
அவரது கணவன் நேற்றுக் காலை 3.30 மணியளவில் கடற்றொழிலுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டதாகவும், நேற்றுக் காலை 7 மணியளவில் வீடு திரும்பியபோதே சம்பவம் தெரியவந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பூநகரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.
அதேவேளை, அந்த வீட்டிலிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பணம், மற்றும் நகைகளையும் காணவில்லை என்றும் கூறப்பட்டுள்ளதாகப் பொலிஸாரும் உறவினர்களும் தெரிவித்தனர். (த–4)

# 150 இலங்கையருக்கு இரட்டைக் குடியுரிமை



கொழும்பு, ஜூன் 12
மஹிந்த அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நடவடிக்கை வெளிவிவகார அமைச்சினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. 150 பேருக்கு இதன்போது இரட்டைப் பிராஜாவுரிமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.
முன்னைய ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில், இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மைத்திரிபால அரசு அதனை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கமைய இரட்டைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 150 பேருக்கு அதற்குரிய சான்றிதழ் வெளிவிவகார அமைச்சில் வைத்து வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.
புதிய அரசு ஆட்சி அமைத்த பின்னர், இதுவரையில் 641 பேர் இரட்டைப் பிராஜாவுரிமைக்காக விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–5)

# 5 கோடி நட்டஈடு கோரி சஜின்வாஸ் மனு தாக்கல்

கொழும்பு, ஜூன் 12
நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன ஐந்து கோடி ரூபா நட்ட ஈடு கோரி அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை நேற்றுத் தாக்கல் செய்துள்ளார்.
அரசுக்கு எதிராகவே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்ட விரோதமான முறையில் தம்மைச் சிறையில் தடுத்து வைத்திருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
இதனால் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், இதற்கு நட்ட ஈடாக ஐந்து கோடி ரூபா வழங்கப்படவேண்டுமெனவும் தனது சட்டத்தரணி ஊடாக அவர் உயர்நீதிமன்றில் கோரியுள்ளார்.
பொலிஸ் மா அதிபர், சட்ட மா அதிபர், குற்ற விசாரணைப் பிரிவு, ஜனாதிபதி செயலக போக்குவரத்துப் பிரிவுப் பணிப்பாளர் போன்றோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்காலத்தின்போது ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக சஜின்வாஸ் குணவர்த்தன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
எனினும் வாகனங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படவில்லை எனவும், அனைத்து வாகனங்களும் உரிய முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சஜின் வாஸ் குணவர்த்தன, சட்டத்தரணி ஏ.சீ.எஸ். தேவபுர ஊடாக நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.
தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை எனவும் அவர் கூறியுள்ளார். (த–ரி)

# ஆன்மீக உரை

தென்மராட்சி, ஜூன் 12
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று இரவு 7.00 மணிக்கு சமய நம்பிக்கையே தீய பழக்கங்களிலிருந்து விடுபடச் செய்யும் என்னும் தலைப்பில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆன்மீக உரை நிகழ்த்துவார் என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (த–9)


## மரண அறிவித்தல்

திருமதி பரமேஸ்வரி நல்லைநாதன்
(கண்ணாடி அக்கா)



கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நல்லைநாதன் நேற்று (11.06.2015) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்.
(60939) தொடர்பு :- 021 222 6207


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ரவிக்கு எதிரான பிரேரணை எதிரணியினரின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 12

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 23ஆம் திகதி விவாதத்துக்கு எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்வைத்த கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளது.

எனினும், மேற்படி விடயம் தொடர்பில் ஜூலை 4ஆம் திகதி விவாதம் நடத்துவதற்கு அரசு பச்சைக்கொடி காட்டியபோதும் அதை ஏற்காது ஐ.ம.சு.மு. உடனடி விவாதத்தை வலியுறுத்தியதால், கட்சித் தலைவர்கள் கூட்டம் இணக்கப்பாடின்றி முடிவடைந்துள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. இதனையொட்டி முற்பகல் வேளையில் நாடாளு மன்ற கட்டடத் தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது நிதி அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக விவாதத்துக்கு எடுக்குமாறு வலியுறுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள், இதை 23ஆம் திகதி விவாதத்துக்கு உட்படுத்தவேண்டும் என்ற விடயத்தில் உறுதியாக நின்று வாதிட்டனர்.

எனினும், இதை ஏற்பதற்கு அரச தரப்பு மறுத்துவிட்டது. ஜூலை 4ஆம் திகதியளவில் நடத்தலாம் என்று அரச தரப்பு ஆலோசனை வழங்கியது. ஆனால், இதை ஐ.ம.சு.மு. ஏற்கவில்லை. உடனடி விவாதம் அவசியம் என வலியுறுத்தியது. இதனால் இந்த விடயம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இறுதியில் நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எப்போது விவாதிக் கப்பட வேண்டும் என்ற விடயம் பற்றி முடிவெடுக்காமல் இணக் கப்பாடின்றி கட்சித் தலைவர்கள் கூட்டம் முடிவடைந்தது. இன்று முற்பகலும் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது மேற்படி விவகாரம் பற்றி பேசப்பட்டு முடிவொன்று எடுக்கப்படலாம் என அறியமுடிகிறது.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான மஹிந்த ஆதரவு அணியின் பங்களிப்புடன் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளு மன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் அறிய முடிகிறது.

இதற்கிடையில் நேற்றைய நாடாளு மன்ற அமர்வின்போது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. குறிப்பாக, நம்பிக்கையில்லாப் பிரேரணையை சந்திப்பதற்கு தயாரா?" என தினேஷ் குணவர்த்தன நிதி அமைச்சரிடம் வினா தொடுத்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரவி, உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். எங்கள் வேலையை நாங்கள் பார்க்கிறோம்" என சற்று ஆவேசத்துடன் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, ஜூலை 4ஆம் திகதி விவாதிக்கலாம்" எனக் கூறினார். எனினும் எதிரணி உறுப்பினர்கள் இதை ஏற்கவில்லை. இதனால் இரு தரப்புகளுக்கிடையில் சபையில் சிறிது நேரம் தர்க்கம் ஏற்பட்டது. (த–சி)

## படைகளின் பிரதானியாக எயார் மார்ஷல் கோலித



எயார் மார்ஷல் கோலித குணதிலக்க புதிய படைகளின் தலைமையதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பதவி எதிர்வரும் 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

தற்போது இலங்கையின் விமானப் படை தளபதியாக பதவிவகிக்கும் கோலித குணதிலக்க, ஜெகத் ஜெயசூரியவிடம் இருந்து படைகளின் தலைமையதிகாரி பதவியை பொறுப்பேற்கவுள்ளார்.

2014 ஆம் ஆண்டு கோலித குணதிலக்க விமானப்படை தளபதியாக பதவியேற்றார். குணதிலக்க, 1982ஆம் ஆண்டில் பைலட் அலுவலராக விமானப் படையில் இணைந்தார். (த)

## இலங்கை

குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் 70ஆவது விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்குக்குச் செல்லவுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

## 142 எம்.பிக்கள்

வீரவன்ஸ கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கையிலேயே தென்னக்கோன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள் பற்றித் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதன்மூலம் குற்றச் செயல்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## 18 சிறுபான்மை

நாயக மக்கள் முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, லங்கா சமசமாஜ கட்சி, தொழிலாளர் தேசிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, நவ சமசமாஜ கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கூட்டமைப்பு, ஐக்கிய சோஷலிஸ கட்சி, மலையக மக்கள் முன்னணி, சிறி டெலோ ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளே பங்கேற்றனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போது வழங்கப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தேர்தல் மறுசீரமைப்பு சட்ட வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், சிறுபான்மையினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

அது மட்டுமல்லாது, தேர்தலின் போது வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு இரட்டை வாக்களிக்கும் முறைமை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதுடன் இதற்கு இணங்காத பட்சத்தில், 20ஆவது சீர்திருத்தத்துக்கு தாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்று அந்த 17 கட்சிகளும் தெரிவித்துள்ளன. (த)

## தடையை

மன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றியபோதே மேற் கண்டவாறு கேள்விகளை எழுப்பி வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் மிகவும் நெருங்கிய தொடர்புகள் கடந்த பல வருடங்களுக்கு முன்னர் பேணிவந்து – இலங்கையின் உள்ளக நடவடிக்கை தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து – இலங்கைக்கு எதிராக செயற்படும் சர்வதேச புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புகளை வைத்துக்கொண்டு – இலங்கைக்கு எதிராக பல்வேறு கருத்துகளை வெளியிட்டு – சர்வதேச ரீதியில் இலங்கை அரசை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் நடவடிக்கைகளில் ஈடுபடும் உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்புடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விசேட பேச்சு நடத்தியதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பேச்சுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் தென்னாபிரிக்காவின் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற் றும் நோர்வே அமைப்பு என்பன செயற்பட்டுள்ளன. இதற்காக இலங்கை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியின் பிரதிநிதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பங்கேற்றுள்ளார் என ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

2014ஆம் ஆண்டு மார்ச் மா தம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புடைய தமிழ் புலம்பெயர் அமைப்புகள். மீதான தடையை நீக்குவதே இந்தப் பேச்சின் நோக்கம் என்றும், இலங்கையில் இடம்பெற்றதாக புலம்பெயர் தமிழர் அமைப்புகளால் பரப்புரை செய்யப்பட்டுவரும் போர்க்குற்றம் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதற்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் பேச்சு என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சில் நோர்வே அரசின் சமாதானத் தூதுவராக இதற்கு முன்னர் செயற்பட்ட எரிக் சொல்ஹெய்மும் பங்கேற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. சில தரப்பினரால் எழுப்பப்படும் போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சுயாதீன நடவடிக்கையை நிலைநிறுத்துவதற்கான வேலைத்திட்டம் தொடர்பாக பல்வேறு தரப்பினருடன் கருத்துப் பரிமாறியதாகவும், வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், உலகத் தமிழர் சபையுடன் (GTF) வெளிவிவகார அமைச்சர் நடத்திய பேச்சில் இந்த விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டதா என இந்த நாட்டு மக்களிடம் பெரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இலங்கை அரசு முன்னெடுக் கும் செயற்பாடுகள் தொடர்பில் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை வைத்திருந்த அமைப்புகளுடன் இவ்வாறு பேச்சு நடத்துவதன் நோக்கம் பற்றி நாட்டு மக்கள் பெரிய அச்சம், பீதியில் உள்ளனர். இந்த நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தாமல் நாடாளுமன்றமோ மற்றும் மக் கள் பிரதிநிதிகளைத் திசை திருப்பி இதுபோன்ற பல்வேறு பேச்சுகளை நடத்துவதன் ஊடாக தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் சீர்குலையும் எனச் சுட்டிக்காட்டவேண்டும். இதற்கமைய கீழ்வரும் வினாக்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்கவேண்டும் என எதிர் பார்க்கிறேன்.

ஊடகங்களின் வாயிலாக பெரும் பிரசித்தப்படுத்தப்பட்ட அவர் (வெளிவிவகார அமைச்சர்) இலண்டனில் உலகத் தமிழர் பேரவையுடன் நடத்திய பேச்சின் நோக்கம் மற்றும் அந்தப் பேச்சுக்குள் உட்படுத்தப்பட்ட விடயம் என்ன? இந்தப் பேச்சில் பங்கேற்றவர்கள் மற்றும் அமைப்புகள் என்ன?

இதுபோன்ற பேச்சை நடத்துவதற்கு அமைச் சரவையினதோ, ஜனாதிபதியினதோ, பிரதமரினதோ அனுமதியை அமைச்சர் பெற்றுக்கொண்டாரா? புலிகள் மீதான தடையை நீக்குவது, தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் அமைப்புக்கு உதவிகளை வழங்கிய புலிகள் அமைப்புக்கு தமது ஆதரவை வழங்கிய அமைப்புகளைத் தடைசெய்துள்ள வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறுவது பற்றி இதன்போது பேச்சு நடத்தப்பட்டது.

போர்க்குற்றம் என்ற தலைப்பு இந்தப் பேச்சின்போது பேச்சுக்குட்பட்டதா? போர்க்குற்ற விசாரணை தொடர்பில் உள்ளக பொறிமுறையை உருவாக்குவது குறித்து உலகத் தமிழர் பேரவை அமைப்பு மற்றும் பேச்சில் பங்கேற்ற ஏனைய உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் கருத்துப் பரிமாறப்பட்டதா? இந்தப் பேச்சு பற்றி முழுமையான அறிக்கையொன்றை வெளி விவகார அமைச்சர் இந்தச் சபைக்கு வழங்குவாரா? இன்றேல் ஏன்? என்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்" – என்றார். (த–சி)

## யாழ்.

கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இன்னமும் நடத்தப்பட வில்லை. அத்துடன் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுவின் தலைவர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் யார் என்பது தொடர்பில் இன்னமும் மாவட்ட செயலகத்துக்கு அறிவிக் கப்படவில்லை. ஜனாதிபதி செயல கத்தினாலேயே இது தொடர்பி லான அறிவித்தல்கள் வெளியிடப் படும். இதுவரை எந்தவொரு அறிவித்தல்களும் வெளியிடப்படாமையினாலேயே, மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இன்னமும் நடத்தப்படாமல் இருப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (த–5)

## 20 க்கு

தலைவர்களுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். இந்தக் கலந்துரையாடலின்போது, 20 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பல குறைபாடுகள் மற்றும் குறிப்பாக சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறைக்கப்படும் அபாயம் தொடர்பில் பேசப்பட்டிருந்தது.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால, திருத்த யோசனைகளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தார். அதற்கமைய இன்றைய தினம் இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் திருத்த யோசனைகள் குறித்து ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## நிதி

சியல் அமைப்புக்கு முரணானது என்றும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள் ளார்.

மேலும், இந்த விசாரணைப் பிரிவினூடாக பல்வேறு தரப்பினர் கைது செய்யப்பட்டு, நெருக்கடிகளுக்குள்ளாகி இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு நிதிமோசடி விசாரணைப் பிரிவை கலைக்குமாறு மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார். (த–சி)

## புலம்பெயர்

நோர்வே யின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்மும் பங்கெடுத்திருந்தார். இந்த இரகசியப் பேச் சுக்கள் தொடர்பாக, வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேலினி கொலன்னே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து இன, மத பேதமின்றி நல்லிணக்கத்திற்காக ஒத்துழைப்பு வழங்க முன்வரும் அனைவரின் உதவிகளையும் ஏற்றுக் கொள்ள அரசு தயாராக இருக்கிறது. முன்னைய அரசியலை திரும்பிப் பார்த்தால் எவர் மீதும் நம்பிக்கை கொள்ள இயலாது. எமக்கு தனி நபர் அல்லது அமைப்பு மீது நம்பிக்கை கொள்வதனை விட நல்லிணக்கச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதே இலக்காகும்.

நல்லிணக்க ஆணைக்குழு நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று பலதரப்பட்டவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அந்தப் பரிந்துரைகளுக்கமைய நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அனைத்து இனங்களுக்கிடையிலும் பேச்சு நடத்தப்பட வேண்டும். அதேவேளை வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் அனைத்து இனங்களைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோருடனும் பேச்சு நடத்த அரசு தயாராக உள்ளது. புலம்பெயர் தமிழர்களுடன் லண்டனில் நடந்த சந்திப்பைத் தொடர்ந்து இலங்கையில் இந்த ஆண்டு இறுதியில் புலம்பெயர்ந்தோருக்கான விழா ஒன்று நடத்தப்படவுள்ளது. ஆண்டுதோறும் இந்த விழாவை தொடர்ந்து முன்னெடுக்க வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தீர்மானித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# தமிழரசு சின்னத்துரை காலமானார்

அச்சுவேலி, ஜூன் 12
ஆவரங்கால் தமிழரசு சின்னத்துரை கடந்த புதன்கிழமை ஆவரங்காலில் உள்ள தனது இல்லத்தில் காலமானார். லண்டனில் தற்காலிகமாக வசித்து வந்த கதிர்காமு சின்னத்துரை தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள், முக்கிய தீர்மானங்கள் மற்றும் நடைமுறை செயற்பாடுகள் தொடர்பாக இலங்கைக்கு வந்து தங்கி இருந்து ஆலோசனை வழங்குவதுண்டு. அந்த வகையில் லண்டனில் இருந்து வந்து தங்கியிருந்த வேளையிலேயே காலமானார். இவருக்கு வயது (89).
தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான இவர் கட்சியின் கொள்கையில் இறுக்கமான பற்றோடும் செயற்பாடும் கொண்டவர் என்ற வகையிலேதான் தமிழரசு சின்னத்துரை என அழைக்கப்பட்டு வந்தார். இவர், தான் கொண்ட கொள்கையின் உறுதிப்பாட்டினால் ஆவரங்காலில் அமரர் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் ஞாபகார்த்தமாக அமைந்துள்ள வன்னியசிங்கம் வீதியில் தனது இல்லத்துக்கு தமிழரசு எனப் பெயர் சூட்டி இருந்தார். (த-11)

# மஹிந்தவின் பாதுகாப்பை உடன் அதிகரிக்க வேண்டும்

*பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரிக்கை*

கொழும்பு, ஜூன் 12
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் சதிகள் நடந்து வருவதால் அவருக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஊடக மத்திய நிலைய அமைப்பு பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
அந்த அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களும் சட்டத்தரணிகளும் அடங்கிய குழுவொன்று பொலிஸ் தலைமையகத் துக்குச் சென்று எழுத்துமூல முறைப் பாட்டைக் கையளித்துள்ளது.
இதனையடுத்து நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடக மத்திய நிலைய அமைப்பின் தேசிய அமைப்பாளர் நிமல் வீரதுங்க தெரிவித்தவை வருமாறு:-
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதற்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இரகசியமாகச் சதித் திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாக எமது அமைப்புக்கு எழுத்து மூல மற்றும் வாய்மூல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2009 ஆம் ஆண்டில் பயங்கரவாதம் முறியடிக்கப்பட்ட பின் அவரது உயிர் மீதான ஆபத்து நாளாந்தம் அதிகரித்து வந்துள்ளது.
எனவே, அவருக்கான பாதுகாப்பைத் தீவிரப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் எழுத்துமூல வேண்டுகோள் விடுத்துள்ளோம். இந்த விடயத்தை நாங்கள் தற்போதைய ஜனா திபதியினதும் பாதுகாப்புச் செயலா ளரினதும் கவனத்துக்கும் கொண்டு வரவுள்ளோம்- இவ்வாறு தெரிவித்தார் நிமல் வீரதுங்க. (த)

# இராணுவத்தை பாதுகாப்போம்

## உதய கம்மன்பில கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 12
தற்போதைய அரசு போர்க்குற் றம் மற்றும் மனித உரிமை மீறல் கள் குறித்தான குற்றச்சாட்டுக்கு இராணுவத்தைக்காட்டிக்கொடுக்கமுற்படுவதாக புதிய ஹெல உறுமயவின் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.
கொழும்பு,நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
இராணுவத்தினரை யாரேனும் காட்டிக்கொடுக்க முற்படுவார்களாயின் நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். மக்கள் ஒன்றிணைந்து இராணுவத்தைப் பாதுகாப்பார்கள். அரசு, இராணுவத்தை அவமதித்து வீணான பிரச்சினைக் குள் மாட்டிக்கொள்ள முற்படுகின்றது.
இராணுவத்தினருக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், நாங்கள் உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம். தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் விசாரணை களுக்கு முகங்கொடுக்க உங்களுக்குத் தேவையான பாதுகாப்பை நாம் ஏற்படுத்தித் தருவோம். இது குறித்து உங்களுக்குப் பிரச்சினை இருக்கும் என்றால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் அவற்றைப் சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பார்த்துக்கொள்கின்றோம்.
இந்த அரசு பாரிய வீழ்ச்சியை நோக்கிப் பயணிக்கின்றது. ஆகவே, சமீபமாக நான் ஒரு புத்தகத்தை எழுதத் தொடங்கியுள்ளேன். அதன் பெயர் மைத்திரிக்குத் தவறிய இடம் ' என்பதாகும்.
எதிர்காலத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கைகளால் அதனை வெளியீடு செய்துவைக்கவுள்ளேன்.
மஹிந்த தவறு செய்தாலும், மைத்திரி தவறு செய்தாலும், ரிஷாத் பதியுதீன் தவறு செய்தாலும் எல்லாம் தவறுதான். கடந்த காலத்தில் அமைச் சர் ரிஷாத் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரது இனவாத நடவடிக்கைகள் குறித்து சட்டம் நடவடிக்கை எடுக்கவில்லை.
ஆகவே, நாட்டின் சட்டம் இன, மத, சாதி பேதமின்றி எல்லோருக்கும் சமமாக இருக்கவேண்டும். எனவே, நாட்டினுடைய சட்டத்திற்கு உரிய கௌரவம் கொடுக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (த-சி)

# பிரதி அமைச்சர்களாக மேலும் 4 பேர் நியமிப்பு

கொழும்பு,ஜூன் 12
புதிய பிரதி அமைச்சர்களாக மேலும் நான்கு அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.
இவர்கள் நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
புதிய பிரதி அமைச்சர்களாக விஜய தஹநாயக்க,சனத் ஜயசூரிய, திலங்க சுமதிபால மற்றும் எரிக் வீரவர்த்தன ஆகியோர் இவ்வாறு பிரதி அமைச்சர்களாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.
விஜய தஹநாயக்க பொதுமக்கள் சமாதானம் மற்றும் கிறிஸ்தவ மத விவகார பிரதி அமைச்சராக வும், சனத் ஜயசூரிய மாகாண சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சராகவும் ,திலங்க சுமதிபால திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி பிரதி அமைச்சராகவும், எரிக் வீரவர்த்தன துறைமுகம் மற்றும் கடற்போக்குவரத்துப் பிரதி அமைச்சராகவும்சத்தியப்பிர மாணம் செய்து கொண்டுள்ளனர். (த-ரி)

# இலங்கையுடன் ராணுவ உறவு வலுப்படுத்தச் சீனா விருப்பம்

பீஜிங், ஜூன் 12
இலங்கையுடன் நிலையான இராணுவ உறவுகளைப் பேணி வருவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சீன பாதுகாப்பு அமைச்சர் சான் வங்குவான் தெரிவித்துள்ளார்.
தனிப்பட்ட பயிற்சிகளை வழங்குதல் உள்ளிட்ட பல உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் இலங்கைக்குத் தொடர்ந்து வழங்கவும் சீனா விருப்பம் வெளியிட்டுள்ளது.
சீன பாதுகாப்பு அமைச்சர் சான் வங்குவான் நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கைக்குச் சென்ற சீன நீர் மூழ்கிக் கப்பலைத் திருப்பியனுப்பிய சம்பவமொன்று அண்மையில் இடம் பெற்றிருப்பதாக ரொய்ட்டர் செய்திச் சேவை தகவல் வெளியிட்டிருந்தது.
எனினும், இலங்கையுடன் தொடர்ந்தும் இறுக்கமான உறவுகளைப் பேணிவருவதற்கு விரும்பு வதாகத் தெரிவித்துள்ள சீன பாது காப்பு அமைச்சர், எதிர்காலத்தில் இராணுவ ரீதியில் ஆழமான அபிவிருத்தியையும், பேச்சுக்களையும் நடத்தவும் விருப்பம் வெளியிட்டுள்ளார்.
இதேவேளை, கடந்த ஆட்சியின் போது சீன அரசால் இலங்கையின் தென்மாகாணத்தில் விமான நிலையமும் துறைமுகமும் அமைக்கப்பட்டிருந்தன. எனினும், 1.5 பில்லியன் டொலர்கள் செலவில் சீன நிறுவனத்தால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி வேலைத்திட்டம் புதிய ஆட்சி பதவிக்கு வந்த பின்னர் இடைநிறுத்தப்பட்டது. தற்போது அந்த வேலைத்திட்டம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை தெரிவிக்கத்தக்கது. (த)

# தொலைக்காட்சிப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கு குறித்து விசாரணை

*கபில ஹெந்தவிதாரணவின் பணத்தை வெளிநாடுகளில் முதலீடு செய்தாராம்*

கொழும்பு, ஜூன் 12
முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி ஒன்றின் பணிப்பாளர் ஆகியோரின் வங்கிக் கணக்குகளை விசாரணை செய்ய கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிபதி நிசந்த பீரிஸ் அனுமதியளித்துள்ளார்.
அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண, வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைப்பிட்டுள்ளதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இவருடன் இணைந்து சட்டவிரோதமான வகையில் நிதியை திரட்டியதாக, யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
இவர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் நிதிப் பரிமாற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு, கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கு அனுமதி அளித்துள்ளது.
2009 ஆம் ஆண்டில் இருந்து மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களின் பணத்தை, குறித்த தொலைக்காட்சியின் பணிப்பாளர், லக்சம்போர்க்கில் உள்ள நிதி நிறுவனங்களில் முதலிட்டுள்ளதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இது குறித்து ஆழமாக விசாரணை நடத்தி எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் பணித்துள்ளது. (த-5)

# இலங்கை- அமெரிக்கா இடையே முரண்பாடு

## ஈரானிடம் எரிபொருள் கொள்வனவால்

கொழும்பு, ஜூன் 12
ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வது தொடர்பாக அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையில் முரண்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது.
ஈரானுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள பொருளதாரத் தடையே இதற்குப் பிரதான காரணமாக அமைகின்றது என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
10 பில்லியன் ரூபா பெறுமதியுடைய ஒரு மில்லியன் எரிபொருள் கொள்கலன்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈரானிடமிருந்து கொள்வனவு செய்துள்ளதாகவும் , குறித்த கப்பல் இன்னும் நாட்டை வந்தடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
ஈரானிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் குறித்த எரிபொருள் கப்பலை இலங்கைக்குள் அனுமதிக்கக் கூடாது என அமெரிக்கத் தூதரகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் பி.எம்.எஸ். பட்கொடவுக்கு அறிவித்துள்ளது.
அத்துடன் மார்கஸ் எப் வேல் என்னும் கப்பலின் ஊடாக எரிபொருள்கள் கொண்டு வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஈரானிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யக்கூடாது என இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு நன்றாகவே தெரியும். எனவே குறித்த எரிபொருளைக் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என அமெரிக்க தூதரகம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.
ஈரானிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படமாட்டாது எனக் கடந்த பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி இலங்கை அரசு, அமெரிக்காவுக்கு எழுத்து மூலம் உறுதியளித்துள்ளதாகவும், எரிபொருள் கொள்வனவு குறித்த தகவல்களை அமெரிக்கத்தூதரகத்துடன் பகிர்ந்து கொள்வதாகவும் உறுதியளித்திருந்தது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இவ்வாறு இலங்கை.அரசு உறுதியளித்துள்ள நிலையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈரானிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்துள்ளது என அமெரிக்க தூதரகம் குற்றம் சுமத்தியுள்ளது.
குறித்த கப்பல் எந்த நாட்டுக் கொடியுடன் இலங்கைக்கு வரவுள்ளது என இலங்கை துறைமுக அதிகார சபையிடம் தகவல்களை, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் அமெரிக்க தூதரகம் கோரியுள் ளது.(த)

# புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி மக்களை அச்சுறுத்திய மூவர் கைது

புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி பொதுமக்களை அச்சுறுத்திய மூவர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.
இந்தச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி நாவற்குழியில் இடம்பெற்றது.
சுன்னாகம், கல்வியங்காடு, நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் மதுபோதையில் தலைக்கவசம் அணியாத நிலையில் மோட்டார் சைக்கிளில் நாவற்குழிப் பகுதிக்குச் சென்று அப்பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்போவதாக பொதுமக்களை அழைத்து அச்சுறுத்தியுள்ளனர்.
அவ்வேளையில் கைதடி- நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்ற தற்கொலைச் சம்பவத்தை விசாரிக்க சென்ற சாவகச்சேரி பொலிஸா வீதியில் பொதுமக்கள் நிற்பதை அ தானித்து விசாரித்தபோது சி.ஐ. யினர் விசாரணைகளை மேற்கொ வதாக மக்கள் பொலிஸாருக்கு தெரிவித்தனர்.அங்கு சென்ற பொ ஸார் விசாரித்தபோது அவர்கு அங்கிருந்து நழுவ முற்பட்டுள்ளன இவர்களைக் கைது செய்த பொ ஸார் நேற்று முன் தினம் சாவக சேரி நீதிமன்றில் மூவரையும் மு படுத்தினர். வழக்கினை விசா ரித் நீதிவான் ஒருவரை விளக்கமறி லில் வைக்குமாறும் மற்ற இருவ யும் தலா 50 ஆயிரம் ரூபா பெ மதியான இரு ஆள்பிணையி செல்லவும் உத்தரவிட்டார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலட்டி ஐக்கியம், அல்வாய் மனோகரா அடுத்த சுற்றுக்கு தகுதி



கரணவாய், ஜூன் 12

**கலட்டி ஐக்கியம் எதிர் அண்ணா சிலையடி**

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் அண்ணா சிலையடி கழகத்தை 3:1 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

வெற்றிபெறும் அணி அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறும் என்ற காரணத்தினால் ஆட்டத்துடன் சேர்ந்து பதட்டமும் ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பமாகி 5ஆவது நிமிடத்தில் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திய அனுபவ மற்றும் மூத்த வீரர் சுஜீவன் தமது அணிக்கான முதல் கோலைப் பதிவுசெய்ய கலட்டி பதட்டத்தை நீக்கி ஆதிக்கத்தை ஆரம்பித்தது. ஆட்டத்தில் அதிகரித்த விறுவிறுப்புக்கு ஏற்ப பந்து அங்கும் இங்குமாக அல்லாடுவது அதிகமானது. ஆதிக்கம் செலுத்திய கலட்டி கூடவே ஒரு தவறையும் செய்தது. தவறுக்குபரிகாரமாகமூலைஉதைக்கான வாய்ப்பு அண்ணா சிலையடி அணிக்கு வழங்கப்பட அதனைக் கோலாக்கத்தவறவில்லை அண்ணா சிலையடி வீரர்கள். தற்பொழுது இரு அணியினரும் தலா ஒரு கோலுடன்.

வெற்றிக்காற்று இரு அணிகளுக்கும் சமனாக வீச ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாம் பாதி. இரண்டாம் பாதியின் முதல் முப்பது நிமிடங்கள் வரையில் 1:1 என்ற நிலைமையே நீடித்தது. ஆட்டம் சமநிலையில் முடியப்போகிறதோ என்ற எதிர்பார்ப்புக்களும் எழாமல் இல்லை. சமநிலை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று சொல்லாமல் சொல்லும் விதமாக சரியாக முப்பதாவது நிமிடத்தில் கலட்டி சார்பாக முதல் கோலை விளாசிய சுஜீவன் இரண்டாவது கோலையும் அடித்தார். மீண்டும் 38 ஆவது நிமிடத்தில் கலட்டி அணியைச் சுசீலன் தனது அணியின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்ய 3:1 என்ற அடிப்படையில் கலட்டி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆட்டத்தின் முழுநேரமும் கலட்டி ஐக்கிய அணி பத்து வீரர்களுடன் களமிறங்கியமை குறிப்பிடத்தக்கது.

***அல்வாய் மனோகரா எதிர் உடுப்பிட்டி யுத்***

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மற்றொரு தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகத்தை சமனிலை தவிர்ப்பு உதையின் மூலம் 3:2 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

ஆட்டம் ஆரம்பமாகி முதல் நிமிடத்திலேயே மைதானத்தின் மத்திய பகுதியில் வைத்து சிறப்பான ஒரு கோலைப் பதிவுசெய்து தனது அணியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார் மனோகரா அணி வீரர் கோகுலன். அடுத்த 4ஆவது நிமிடத்தில் மனோகரா அணியின் வீரர் ஒருவர் தமது கோல் பகுதிக்குள் வைத்து விதிக்கு முரணாக விளையாடியமையால்மனோகராஅணிக்கு தண்டனையாக எதிரணிக்கு வாய்ப்பு உதை வழங்கப்பட்டது. அதனைச் சரியாகப் பயன்படுத்தி கோலைப் போட்டு ஆட்டத்தை சமனிலைக்கு கொண்டு வந்தார் சஞ்சீவன். தற்பொழுது இரு அணியும் தலா ஒரு கோலுடன்.

தேடி வந்த வாய்ப்பால் உற்சாகமடைந்த உடுப்பிட்டி அணி 12 ஆவது நிமிடத்தில் மற்றும் ஒரு கோலைப் பதிவுசெய்து முன்னிலை பெற்றது. தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற காரணத்தினாலும், எதிரியின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற முனைப்பிலும் உடுப்பிட்டி யுத் சில விதிமுறை மீறல்களிலும் ஈடுபட்டது. துள்ளின மாடு பொதி சுமக்கத்தானே வேண்டும் ஒருவர் சிவப்பு அட்டை காட்டி நடுவரால் வெளியேற்றப் பட்டதுடன் இருவருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டனர். தற்பொழுது உடுப்பிட்டி அணிக்கு தண்டனையாக மனோகராவுக்கு வாய்ப்பு உதை வழங்கப்பட்டது. சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திய மனோகரா தனது இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய ஆட்டத்தில் 2:2 என்று சமநிலை ஏற்பட்டது. இறுதிவரை அதே நிலை நீடிக்க ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் ஆட்டத்தில் ஏக ஆதிக்கம் செலுத்தப்போகும் அணி எது என்று தெரிவு சமநிலைத் தவிர்ப்பு உதைகளிடம் தஞ்சமடைந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதையிலும் போராட்டம் நீடித்தாலும் சிறிது மேலான ஆதிக்கம் செலுத்திய அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் 3:2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

(ம-108)

## யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன், 12

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமிடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.

***13 வயதுப்பிரிவு பெண்கள்***

உடுவில் மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம்பெற்ற 13வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 32:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

***15 வயதுப்பிரிவு ஆண்கள்***

15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 22:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

***15 வயதுப்பிரிவு பெண்கள்***

15 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 36:23 என்ற புள்ளிகளின்அடிப்படையில்வெற்றிபெற்றது.

***17 வயதுப்பிரிவு ஆண்கள்***

17வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 48:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.(ம-86-23)

# இன்றைய மோதல்கள்

***கொலின்ஸ் வி.க.தொடர்***

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு சுன்னாகம் நாமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை அன்பாலயம் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

***கலைவாணி வி.க.தொடர்***

தொண்டமனாறு கலைவாணி வி.கழகம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு பருத்தித்துறை லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 4.30 மணிக்கு சுடர்ஒளி விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகம்மோதவுள்ளது. (ம-108)

***அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்தக் கிண்ணம்***

யாழ்ப்பாணம்,ஜூன் 12

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் 3 ஆவது காலிறுதி யாட்டத்தில் அல் மதினா அணியை எதிர்த்து நியூ பைட் அணி மோதவுள்ளது.

***யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்***

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்களில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

***13வயதுப்பிரிவு ஆண்கள்***

13வயதுப்பிரிவின் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி பிற்பகல் 3மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது. மற்றொரு ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி பிற்பகல் 4.15 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

***15வயதுப்பிரிவு பெண்கள்***

15வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து யாழ் திருக்குடும்பக் கன்னியர் மட அணி பிற்பகல் 4.15 வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின்கூடைப் பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

***17வயதுப்பிரிவு பெண்கள்***

17வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்துமகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர்உயர்தரபாடசாலைஅணிபிற்பகல்3மணிக்குமோதவுள்ளது.(ம-23)

***யாழ்.மாவட்ட தாச்சித் தொடர்***

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்.மாவட்ட தாச்சி விளையட்டுச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் மின்னொளியில் நடந்தும்தாச்சித்தொடரின்ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

கிட்டத்தட்ட 20 கழகங்கள் பங்குபற்றும் இந்தத்தொடரில் இன்று மாலை, 6.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-86)

# இ.போ.ச. அணியை வீட்டுக்கு அனுப்பியது சென்.ஜோசப்



யாழ்ப்பாணம்,ஜூன் 12

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரில்கடந்த ஞாயிற்றுக்கிழமை நாரஹேன்பிட்டி இலங்கைப் போக்குவரத்து சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் பனங்கட்டுக் கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் மன்னார் பனங்கட்டுக் கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

## ஈஸ்வரன் அணி அபார வெற்றி


யாழ்ப்பாணம், ஜூன் 12

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் தம்பையா மரியாம்பிள்ளை அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஈஸ்வரன் அணி 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

(ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கொல்கத்தாவைத் தொடர்ந்து டிரினிடாட் அணியையும் வாங்கினார் ஷாருக்கான்

இந்தியன் பிரீமியர் லீக்கினைப் போலவே (ஐ.பி.எல்.) மேற்கிந்தியத் தீவுகளிலும் வருடாவருடம் ரி–20 தொடர் நடத்தப்படுவதுண்டு. இந்தத் தொடரில் பங்கேற்கும் அணிகளில் ஒன்றான டிரினிடாட் அணியை பாலிவுட் நடிகர் ஷாருக்கான் வாங்கியுள்ளார்.

இவர் ஏற்கனவே ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் அணியின் உரிமையாளராக உள்ளார். இந்த நிலையில் டிரினிடாட் அணியை வாங்கியதன் மூலம் அன்னிய மண்ணின் ஒரு அணியை வாங்கிய முதல் உரிமையாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார். (ம)

# ரோட்ஸின் பயிற்சியால் இலங்கை எழுச்சிகாணும்

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் ஜொன்டிரோட்ஸ் இலங்கை வீரர்களுக்கு பயிற்சியளித்தது திருப்தி அளிக்கும் விதமாக இருந்ததாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் இடைக்காலத் தலைவர் வெட்டிமுனி தெரிவித்துள்ளார்.

இலங்கை– பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான தொடர் நெருங்கும் நிலையில் குறுகிய கால பயிற்சியாளராக இருக்குமாறு இலங்கை சார்பில், ஜோன்டி ரோட்டம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை ஏற்ற ஜோன்டி ரோட்ஸ் இலங்கை அணி வீரர்களுக்கு களத்தடுப்பு பயிற்சி வழங்கினார்.



ஜோன்டி ரோட்ஸின் பயிற்சி தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் இடைக் காலத்தலைவர் வெட்டிமுனி தெரிவித்ததாவது இலங்கை வீரர்களுக்கு பயிற்சியளிக்க வந்தமைக்கு ஜோன்டி ரோட்ஸுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். அவரது பயிற்சியின் கீழ் புதிய அனுபவங்களை இலங்கை வீரர்கள் பெற்றுள்ளனர். குறிப்பாக களத் தடுப்பில் சிறந்து விளங்கிய ரோட்ஸுன் நூட்பங்கள் இலங்கை வீரர்களின் களத்தடுப்புக்கு பயனுள்ளதாக அமையும். பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இலங்கை வீரர்களின் களத்தடுப்பில் மாற்றம் தெரியும். எதிர்காலத்தில் இதுபோன்ற பல ஜாம்பவான்களை பயிற்சிக்காக அழைக்க காத்திருக்கிறோம் என்றார். (ம)

# இந்தியா சிம்பாப்வே தொடர் அடுத்த மாதம் ஆரம்பம்

இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் மற்றும் ரி–20 தொடர் அடுத்த மாதம் நடைபெறும் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் சிம்பாப்வே செல்லவுள்ள இந்திய அணி, மூன்று ஒரு நாள், இரண்டு ரி–20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் பத்தாம் திகதி நடைபெறும். மீதமுள்ள இரண்டு ஒரு நாள் ஆட்டங்களும் ஜூலை 12ஆம், 14ஆம் திகதிகளிலும், இரண்டு ரி–20 ஆட்டங்களும் ஜூலை 17 ஆம், 19ஆம் திகதிகளிலும் நடக்கவுள்ளன. இந்தத்தொடரில் பங்கேற்கும் இந்திய அணி ஜூலை 7இல் சிம்பாப்வேக்கு புறப்படும். பின், அங்கிருந்து ஜூலை 20இல் இந் தியா திரும்பும். கடந்த 2013இல் சிம்பாப்வே சென்ற இந்திய அணி, ஒருநாள் தொடரை முழுமையாக கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)







# இந்திய தேசிய அணிக்கு பயிற்சியாளராகும் எண்ணமில்லை

இந்திய அணியின் முழுநேர பயிற்சியாளராகும் எண்ணம் இப்போதைக்கு இல்லை என்று தெரிவித்துள்ளார் இந்திய 'ஏ' அணியினதும் இளம் அணியினதும் பயிற்சியாளரான ராகுல் ட்ராவிட்.

பயிற்சியாளராவது தொடர்பாக ட்ராவிட் தெரிவித்ததாவது இந்திய அணியின் பயிற்சியாளராகும் எந்த வித ஆசையும் இல்லை. இந்திய 'ஏ' மற்றும் 19 வயதுக்குட்பட்ட அணி வீரர்களை அடுத்தக் கட்டத்துக்கு முன்னேற்றுவதே எனது பணி. ரவி சாஸ்திரியும், பிற துணைப் பயிற்சியாளார்களும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் நான் இந்திய பயிற்சி யாளராக என்னை உயர்த்திக் கொள்ள விரும்பவில்லை. ஒரு வீரராக இப்போது எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் பயிற்சிப் பொறுப்பு மிக முக்கியமா னது. எனக்கு பெரிய வேலை கொடுக்கப்பட்டுள்ளதாகவே கருதுகிறேன். எனது சர்வதேச கிரிக்கெட் அனுப வங்களை இளம் வீரர்களிடம் பகிர்ந்து கொள்ள நல்ல வாய்ப்பு. கொடுக்கப்பட்ட இந்தப் பணியில் மேலும் சிறப்புற முயற்சி செய் வேன்–என்றார். (ம)



# சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் செயல்பாடுகள் ஸ்தம்பிதம்


சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் நிகழ்ந்த ஊழல் காரணமாக அதன் நிர்வாகிகள் சிலர் பெரும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர். ஊழல் விவகாரங்கள் தொடர்பாக தொடர்ந்து ஆராயப்பட்டு வருகின்ற காரணத்தினால் 2026 உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் உரிமத்தைப் பெறுவதற்கான ஏலம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் உப தலைவர் உட்பட சிலர் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து அண்மையில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் விசாரித்ததைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் உரிமத்தை ரஷ்யாவுக்கு கொடுக்கப்பட்டதிலும் 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரை நடத்தும் உரிமத்தை கட்டாருக்கு கொடுக்கப்பட்டதிலும் ஊழல் நடந்திருந்தமை ஓரளவுக்கு வெளியானது. இது தொடர்பான விசாரணைகள் பரவலாக்கப்பட்ட வேளையில் 2010ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரின் உரிமம் தென்னாபிரிக்காவுக்கு கொடுக்கப்பட்டதிலும் ஊழல் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிலையில் 2026 உலகக்கிண்ணத் தொடருக்கான உரிமத்துக்கான ஏலத்தை தற்பொழுது நடத்தும் திட்டமில்லை என்று சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தற்காலிக நிர்வாகச் சபை தெரிவித்துள்ளது. (ம)

# மழையின் ஆதிக்கம் அதிகரிக்க இந்தியாவின் ஆதிக்கம் தடைப்பட்டது

இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது நாளான நேற்று ஆட்டம் ஆரம்பமாக முதல் ஆரம்பித்த அடை மழை தொடர்ச் சியாக கிட்டத்தட்ட 3 மணிநேரம் நீடித்தது. இதனால் விளையாட முடியாத நிலை மைதானத்தில் ஏற்பட இரண்டாம் நாளில் ஒருபந்து கூட வீசாமல் [illegible] தற்பொழுது இந்தியா 239–0 என்ற நிலையில் உள்ளது. ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நாற்பத்து ஏழாயிரம் கோடிகள்

# அசைக்க முடியாத மெவதர்

*அதிகம் சம்பாதிப்பவராக நடப்பாண்டிலும் தெரிவு*

உலகில் அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியாக முதலிடத்தில் இருந்து வரும் குத்துச்சண்டை வீரரான மெவதர் நடப்பு வருடத்திலும் முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளார். நடப்பு வருடத்தில் மெவதர் இதுவரை இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட நான்காயிரத்து எழுநூறு கோடிகள் வரை சம்பாதித்துள்ளார். மெவதருக்கு அடுத்த இடத்தில் மேனிபாக்கியோ உள்ளார். நடப்பு வருடத்தில் பாக் கியோ இதுவரை சம்பாதித்தது கிட்டத்தட்ட இரண்டா யிரத்து அறுநூறு கோடிகள் வரை சம்பாதித்துள்ளார். அண்மையில் மெவதருக்கும் மேனி பாக்கியோவுக்கும் இடையில் குத்துச்சண்டை யொன்று நடத்தப்பட்டது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றதற்காக மட்டும் மெவதருக்கு ஆயிரத்து எண்ணூறு கோடிகள் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது இடத்தில் ஆயிரத்து இருநூற்று ஐம்பது கோடிகள் வரை சம்பாதித்த போர்த்துக்கல் உதைபந்தாட்ட நட்சத்திரம் கிறிஸ்ரியானோ ரொனால்டோ உள்ளார். இந்தப்பட்டியலில் இலங்கை வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. இந்தியா சார்பாக டோனி 480 கோடிகளுடன் 23ஆவது இடத்தில் உள்ளார். (ம)

# மீண்டும் சாதிப்பேன்

அண்மையில் நடைபெற்ற பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் ஏற்பட்ட தோல்வியுடன் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் இருந்து நான்காவது இடத்துக்கு பின்தங்கினார் செரபோவா. இந்த நிலையில் மீண்டும் தனது இரண்டாவது இடத்தை விரைவில் கைப்பற்றுவேன் என்று செரபோவா தெரிவித்துள்ளார்.



தரப்படுத்தலில் பின்தங்கியமை தொடர்பாக செரபோவா தெரிவித்ததாவது நீண்ட காலத்துக்குப் பின்னர் முதல் மூன்று இடங்களுக்குள் இல்லாமல் தரப்படுத்தலில் பின்தங்கியுள்ளேன். சிறப்பாக ஆரம்பித்த இந்த வருடம் தற்பொழுது திருப்தியில்லாமல் உள்ளதுஆனால்துவண்டு விடப்போவதில்லை. அடுத்தடுத்த மாதங்களில் தொடர்ச்சியாக பல தொடர்கள் வர இருப்பதனால் மீண்டும் தரவரிசையில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுள்ளது. செரீனா முதலிடத்தில் உள்ளதுடன் அசைக்க முடியாத ஆதிக்கத்தில் உள்ளார். இதனால் முதலிடத்தைக் கைப்பற்றுவது மிகவும் கடினம். அமெரிக்க தொடர் ஆரம்பமாக முன்னர் தரப்படுத்தில் இரண்டாம் இடம்என்றஎனது இலக்கை சாதிப்பேன்–என்றார். (ம)

# ஏணி வைத்தாலும் எட்டாது

அடுத்த ரென்னிஸ் தொடரில் ஜோகோவிக் தொடர்ச்சியாக பத்து ஆட்டங்களில் தோல்வியடைந்தாலும் தனது முதலிடத்தை இழக்கும் அபாயம் ஏற்படாது போலத் தெரிகிறது.

சர்வதேச ரென்னிஸ் தரவரிசைப் பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்தது. கடந்த சில மாதங்களாக தொடர்ந்து முதலிடத்தில் நீடித்து வந்த ஜோகோவிக் கடைசியாக வெளிவந்த பட்டியலிலும் முதலிடத்தைப் பிடித்து அசத்தினார். மட்டுமல்லாது கடைசியாக நடந்த சர்வதேச ரென்னிஸ் தொடரான பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறியிருந்தார். தற்பொழுது முதலிடத்தில் உள்ள ஜோகோவிக்குக்கும் இரண்டாம் இடத்தில் உள்ள பெடரருக்கும் இடையில் மிகப் பெரும் புள்ளி வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அடுத்த ரென்னிஸ் தொடரில் ஜோகோவிக் தொடர்ச்சியாக பத்து ஆட்டங்களில் தோல்வியடைந்தாலும் தனது முதலிடத்தை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படாது போலத் தெரிகிறது. கடந்த 12 ஆண்டுகளில் வலுவான முதலிடமாகவும் ஜோகோவிக்கின் தற்போதைய நிலைமையே காணப்படுகிறது. (ம)



வங்கியியல் கற்கை நெறி
CBF/IABF DBF/DABF
- இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில்.
- எமது வழமையான ஆசிரியர் குழாம்.
- புதியபிரிவு ஆரம்பம்: 13.06.2015 (சனி)
தொடர்புக்கு:
K. ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்)
தொ.பே: 077 4598 430

பணியாளர் தேவை
சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறக்கூடியவர்களும் (வெயிற்றர்) கொத்து, பிறைட் றைஸ், பராட்டா, சிற்றுண்டிகள் தயாரிக்க கூடியவர்களும், சமையல் வேலையில் அனுபவம் வாய்ந்த பணியாளர்களும் உடன் தேவை.
தொடர்பு:- 077 649 1027
077 940 0963
(C 17634)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
நேரடியான உரையாடற்பயிற்சியின் மூலம் உங்களாலும் மூன்றே மாதங்களில் ஆங்கிலம்பேச முடியும்.
யாழில் சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.06.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
சங்கானையில் - 13.06.2015 சனிக்கிழமை மாலை 03.00மணி
நெல்லியடியில் - 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணி
பாடப்புத்தகங்கள் மற்றும் DVD என்பன இலவசமாக வழங்கப்படும்.
SAAMSON Experts in English Training
170, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

5ஆம் ஆண்டு நினைவு நாள்
சுந்தரம் விநாயகமூர்த்தி
பிறப்பு 10.10.1938
இறைவனடி 08.06.2010



திதி : அபரபக்க ஏகாதசி
நாங்களும் காட்டியதில்லை
நீங்களும் காட்டியதில்லை
எங்கள் பாசத்தை,
இருந்தும் காட்டிக்கொடுத்த
கண்ணீரைத் துடைக்க
இன்று நீங்கள் இல்லை அப்பா.
எமது பேரன்பிற்குரியவரின் வாழ்விடம் அமைந்துள்ள வீதிக்கு "விநாயகமூர்த்தி வாத்தியார் வீதி" என பெயரிடுவதற்கு அனுமதியளித்த கிராமத்தவர்களுக்கும் மற்றும் குறித்த பெயரை அங்கீகரிக்க முன்னின்று உழைத்த சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.
இந்த நேரத்தில் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் எமது அன்புக்குரியவரின் பெயரில் புலமைப்பரிசில் நிதியத்தை உருவாக்கிய அவரது பழைய மாணவர்களையும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றோம்.
மனைவி
விநாயகமூர்த்தி வாத்தியார் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை

British College of Higher Studies
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
A1 IELTS Life Skills
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கிகரிக்கப்பட்ட பாடநெறி
Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

Celltronics
யாழ். நகரில் பிரமாண்டமான திறப்பு விழா
CELLTRONICS (PVT) LTD
தொலைபேசி விற்பனையில் முன்னணி நிறுவனமான
வரையறுக்கப்பட்ட செல்லக்ரோனிக்ஸ் தனியார் நிறுவனம் தனது கிளையை
இல.127, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 12.06.2015
வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் வைபவரீதியாக திறந்துவைக்கின்றது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
எமது நிறுவனத்தில் தொலைபேசிகளை கொள்வனவு செய்யும் முதல் 100 வாடிக்கையாளர்களுக்கு 1,000/= பெறுமதியான இலவச வவுச்சர் வழங்கப்படும்.
021 222 3393
web:www.celltronics.lk
இல.127, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org